# ஜகன்மோகினி

1—11—1949.



THE REGISTRAR OF BOOKS
30 DEC 1949
MADRA

# நான்கு மாலைகள்

கடந்த நான்கு மாதங்களில் நான்கு தமிழ்மாலைகள் வரப்பெற்றோம். நாத்திகத்திமிரும், வீண்களியாட்டமும் தலைவிரித்தாடும் இந்நாளிலும், அங்கங்கே நடைபெறும் பகவத்விஷய ப்ரவசனங்களையும், அவ்வப்போது வெளியாகும் சந்தமிகு தமிழ்ப்பாமாலைகளையும் காணும்போது, நமக்கு இருளில் ஒளி புலப்படுகிறது; மனத்திற்கும் தைரியமும் உத்ஸாஹமும் பிறக்கின்றன. கடவுளின் கை காட்சியளிக்கிறது.

## 1. திருப்பாதுகமாலை.

பகவானின் பாதுக மூர்த்தியாக விளங்கிய நம்மாழ்வாரின் திருக்குணங்களை வேதாந்த தேசிகர் ஸம்ஸ்க்ருதத்தில் இனிதுணர்வித்த பா ஆயிரத்தின் எளிய தமிழ் இப்பாதுகமாலை. சென்னை அட்வகேட் ஸ்ரீ. R. கேசவய்யங்கார், M. A. B. L.—சடகோபர் மறையின் மேன்மையைப் பரவச் செய்வதில் ஆர்வம் நிறைந்த தமிழன்பர்– சடகோபர்பணியென்றே இதை மிகுந்த ச்ரத்தையுடன் இயற்றியுள்ளார். ஸம்ஸ்க்ருத நூலுக்கு மொழிபெயர்ப்பேயாயினும் இது தனிநூலாய் நிற்கும் முறையிலும் அமைந்துள்ளது. பாதுகையின் தத்துவம் —ஸேவையின் மகத்துவம்— "தொண்டின் இறைமை" என்ற ஆங்கில முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளது. அடுத்த பதிப்பில் இதுவே தமிழிலும் சேர்க்கப்படுமாம். பரமாத்மாவின் இயல்பு அருள்செய்தலும் ஆட்கொள்ளுதலும்; ஜீவாத்மாவின் இயல்பு அன்புசெய்தலும் ஆட்படுதலும். பரமாத்மாவின் பாதத்தில் ஜீவாத்மா பாதுகமாக நிலைபேராது ஒன்றி நிற்கும் நிலையே நன்னிலை.

பாதுகாஸஹஸ்ரம், "பகவான்: நாதன், சடகோபன்: பாதுகம்" என்ற தத்துவத்தின் சிறப்பை விளக்கி, நமக்கு நல்லொழுக்கத்தையும் பேரின்ப வாழ்வையும் பயக்கும் அரிய க்ரந்தம். ஸேவையே அதன் ஆத்மா; இன்னிசையே அதன் குரல்; லயமே அதன் நடை. பரிசுத்த அனுபவம், உந்நத ஸாக்ஷாத்காரம் அதுவே. இந்த அரிய மாலையை இனிய தமிழ்மாலை யாக்கியதற்காக நாம் ஸ்ரீ. கேசவய்யங்காருக்குப் புகழ்மாலை சூட்டவேண்டும். [இதன்விலை. ரூ. 5. வெளியிட்டோர்: பாலாஜி ஸிண்டிகேட் லிமிடெட், புதுக்கோட்டை.]

## 2. திருநரசிங்கர் மாலை.

திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம் செய்துவரும் அரிய தொண்டுக்கு இம்மாலை ஒரு சிறந்த சாட்சி. நூறு பக்கங்களுள்ள இத்தொகுப்பில் கால்பாகம் ஸ்ரீ வித்வான் பந்தல்குடி திருமலை அய்யங்காரின் ரஸமான முகவுரையுடன் பரிமளிக்கிறது. ஆழ்வார்களும் அமுதனாரும் நரஸிம்ஹாவதாரத்தைப்பற்றி பாடியுள்ள பாசுரங்களையும், கம்பநாட்டாழ்வானருளிய இரணியன் வதைப்படலத்தையும், பரிபாடல்—நான்காம் பாடலின் பகுதியையும், திருக்கடிகை நரசிங்கப்பெருமாளந்தாதியையும் தொகுத்துள்ளார். அங்கங்கே அருமையான குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி: ராப்பர் 3-ம் பக்கம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

– திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி!
மனத்தைச் சார்ந்து.

– விராகவ கவி

Vol. 26. No. 11. | விரோதி ஹூ, ஐப்பசி மீ | சுதந்தர சகாப்தம் 28-ம் திங்கள் | November. 1949.


*அரசியல்*


வை. மு. ஸ்ரீ.


## கிழக்கும் மேற்கும்

நேருஜியின் அமெரிக்க விஜயம்பற்றின செய்திகள் உலகையே ப்ரமிப்பில் ஆழ்த்திவருகின்றன. எந்த ஒரு தனி நபருக்கோ அல்லது நாட்டின் பிரதிநிதிக்கோ இதுவரை காட்டப்படாத மரியாதையும் கௌரவமும் நம் தலைவருக்குக் காட்டப்படுவதைக்கண்டு இந்தியர்களும் கிழக்கோடி மக்களும் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

அமெரிக்கக் குடியரசுக்கும் இந்தியக் குடியரசுக்கும் இடையே பரஸ்பர நல்லெண்ணம் வளர்வதன் பொருட்டு செய்யப்பட்ட விஜயமெனினும், இது அனேக அம்சங்களில் நீடித்த பலனை விளைவிப்பதாய் அமைந்து வருவது பற்றி கிழக்கும் மேற்கும் பெருமையடையக் கூடியதாயிருக்கிறது.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவாக எடுத்துக் கூறி வருகிறார் நேருஜி. கிழக்கின் முன்னேற்ற நோக்கங்கள் ஐரோப்பாவை மட்டந் தட்டவோ அல்லது ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு எதிர்த்தட்டாகவோ இல்லையென்பதையும்; மேல்நாடுகளின் குடியேற்றச் சுரண்டல் கொள்கைகள் மறைய வேண்டுமென்றும் ஒளிவுமறைவின்றித் தெரிவிக்கிறார். உலக சமாதான விஷயமாயும், இந்தோனேஷியா விஷயமாகவும் இந்தியா காட்டிவரும் கொள்கை எவ்வளவு பொருத்தமானது, உகப்பானது என்றும், மேற்கத்திய வல்லரசுகளிடையே காணப்படும் பரஸ்பர அவநம்பிக்கையிலும் பீதியிலும் இந்தியாவுக்கு யாதொரு கலக்கமுமில்லையென்றும், எந்த முனையிலும் ஆக்ரமிப்பு கூடாது, அனுவச்யமாகத் தலையிடுதலும் கூடாது என்பதே நமது கொள்கையென்றும் தெளிவுபடுத்தி வருகிறார்.

ஏழ்மையையும் வ்யாதிகளையும் ஒழித்து மக்களின் முன்னேற்றத்தைக் கோருவதில் அமெரிக்கக் குடியரசை நம் நாடு பின்பற்றுகிறது என்றும், இதற்காக இரு நாடுகளிடையேயும் பரஸ்பர ஒத்துழைப்பு அதிகரித்த அளவில் தேவையென்றும் எடுத்துக்காட்டியுள்ளார். அமெரிக்க மூலதனம் இங்கு சில அவஸரத் தேவைகளுக்கு மிக முக்கியமென்றும், அதேபோல அமெரிக்க கோதுமையை இங்கு கையிருப்பாகச் சேகரித்து வைப்பது இரு நாடுகளுக்கும் அனுகூலமென்றும் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் உபரி தான்யங்கள் நமக்குத்தேவை. தொழில் நுணுக்கங்கள் விஷயமாகவும் நிபுணர்களின் விஜயம் தேவை. "தைரியமாய்ப் பணத்தைப் போடுவைக்கக் கூடிய இடம்தான் இந்தியா" என்ற நம்பிக்கை அமெரிக்கர்களுக்கு ஏற்பட வேண்டும். இவையெல்லாவற்றையும் பற்றி நேருஜியின் விஜயம் பெரிதும் நற்பயனை விளைவிக்குமென்பது திண்ணம். கிழக்கும் மேற்கும் அன்புள்ள சகோதரர்களே!

## 9. வள்ளல் யார்? கள்வன் யார்?

நள்ளிரவு. இரண்டு திருடர்கள் ஒரு கடைக்குள் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு வெளியேறினார்கள். திருட்டுச்சாமான்களில் ஒன்று, இவர்கள் ரூ. 3-8-0 கொடுத்து ஏற்கெனவே விலைக்கு வாங்கியிருந்ததுபோன்ற ஒரு சாமான். அது இப்போது விலைக்குக்கிடைப்பதில்லை. பதுக்கிவைத்திருந்த அச்சாமான்மீது அந்தக் கடைக்காரர் ரூ. 30—8—0 என்று ஒரு நினைவுக்குறிப்பு எழுதியிருந்தார். அதைப்பார்த்த திருடர்களில் ஒருவன் மற்றவனை நோக்கி, "இந்தக் கள்ளக்கடை அண்ணன் நமக்கெல்லாம் குருநாதன் போலிருக்கிறதே!" என்று சிரித்தான். இராக்கொள்ளைக்காரன் பகற்கொள்ளைக்காரனை இனங்கண்டு, 'திருட்டுப்போட்டியில் திருடனுக்கும் முதுகுக்கு மண்காட்டக்கூடிய பெருந்திருடன் முதலாளியாய்க் கனவானாய்க் கௌரவிக்கப்பெறுகின்றானே!' என்று அதிசயமாய்ச் சிரித்த சிரிப்பு இது.

### ஷாவின் கள்வன்

இனி, ஓர் அன்னிய நாட்டுக்கதை. ஒரு ஹோட்டலில் சந்தித்தார்கள்: இருவரும் வெள்ளைக்காரர். மேல்சட்டை, கால்சட்டை, கழுத்துச் சுருக்கு, வாய்ச்சுருட்டு, தொப்பி, பூட்ஸ் ஆகிய நாகரிக உடைகளில் ஒருங்கே காட்சியளித்தனர். ஒருவருக்கொருவர் அறிமுகபபடுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம் நேர்ந்ததும் ஒரு வெள்ளைக்காரன், 'நான் ஒரு கொள்ளைக்காரன்; செல்வர்களைக் கொள்ளையடித்துப் பிழைக்கிறேன்' என்று உள்ளது உள்ளபடியே தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். அப்படியே மற்றவனும், 'நானும் ஒரு கனவான்; ஏழைகளைக் கொள்ளையடித்துப் பிழைக்கிறேன்' என்றான். அக்கதையில் இராக்கொள்ளைக்காரன் பகற்கொள்ளைக்காரனை இனங் கண்டுகொண்டான் என்றால், இக்கதையில் பகற்கொள்ளைக்காரன் இராக்கொள்ளைக்காரனை இனங்கண்டுபிடிக்கிறான். கண்டுபிடித்து, 'திருட்டுப் போட்டியில் திருடனுக்கும் முதுகுக்கு மண்காட்டக்கூடிய பெருந்திருடனாகிய நாம் நம் பெருந்திறமையால், அதிர்ஷ்டத்தால், தனவானாய்க் கனவானாய்க் கௌரவிக்கப்பெறுகின்றோமே! தம்பியோ...'என்ற அதிசய இறுமாப்புடன் சிரிக்காமல் சிரிக்கிறான். இது ஆங்கிலப்பேராசிரியர் பெர்னார்ட் ஷா இன்றைய பணநாயகத்தை நோக்கிச் சிரிக்கும் சிரிப்புத்தான்!

### பாரதியாரின் கள்வன்

பெர்னார்ட் ஷாவின் திருடன் செல்வர்களைத்தான் கொள்ளையடிக்கிறான். நம் தேசீய கவிநாதரான பாரதியார்; 'கண்ணன் பாட்டு'ப்போல் ஒரு கள்ளன் பாட்டும் பாடியிருக்கிறாரே அதில் திருடன்,

ஏழை எளியவர்கள் வீட்டில்—இந்த
ஈன வயிறுபடும் பாட்டில்,

திருடும் திருட்டையும் குறிப்பிடுகிறார். பெரிய தீவட்டிக்கொள்ளையல்ல, பெரிய பெரிய 'பாங்கி'க்கொள்ளைகளல்ல, ஆயுதபாணிகளான அராஜகவாதிகளும், பொதுவுடைமைவாதிகளும் கொள்கைக்காக அடிக்கும் கொள்ளையல்ல. 'ஈனவயிறுபடும் பாட்டிலே'

கன்னங் கரியஇருள் நேரம்—அதில்
காற்றும் பெருமழையும் சேரும்;
சின்னக் கரிய துணி யாலே—எங்கள்
தேகமெல்லாம் மூடிநரி போலே

133155

போய்த் திருடிப் பிழைக்கவும் நேர்ந்ததே!—என்று திருடன் தன்னை நோக்கித் தானே உளம்கொதித்துச் சிரிப்பதை இப் பாரதி பாட்டில் காண்கிறோம். 'இதுவும் ஒரு பிழைப்பா? பேய்ப்பிழைப்பு!—இல்லை, நாய்ப் பிழைப்பு!' என்கிறான்.

நாயும் பிழைக்கும் இந்தப்—பிழைப்பு;
நாளெல்லாம் மற்றதிலே உழைப்பு;
பாயும் கடிநாய்ப் போலீசுக்—காரப்
பார்ப்பனுக்(கு) உண்டிதிலே பீசு!

என்ற பாட்டிலே, 'இந்தப் பிழைப்பிலும் உழைப்பிற்குத்தான் குறைவா?' என்று திருடன் தன்னை நோக்கிச் சிரிப்பதுடன், 'இதிலும் பங்குக்கு வந்துவிட்டானே பகற்கொள்ளைக்காரன்!' என்று அந்தப் பங்காளியை (லஞ்சம் வாங்கும் அதிகாரியை) நோக்கியும் பங்காளிக் காய்ச்சலுடன் சிரிக்கிறான். அந்தப்பங்காளி இந்தப்பங்காளியைப் பிடித்துக்கொடுப்பதுபோல் இந்தப் பங்காளி அந்தப் பங்காளியைக் காட்டிக்கொடுப்பதுமுண்டு. இதைத்தான் 'இராக்கொள்ளைக்காரன் பகற்கொள்ளைக்காரனை வெளிப்படுத்தியது' என்கிறது பிரதாபமுதலியார் சரித்திரம்.

## களவிலும் பல ரகம்

கள்வர்களிலும் எத்தனை தினுசுகள்! ஒண்டித் திருடர், சண்டித் திருடர், கன்னக்கோல்திருடர், கத்தி-துப்பாக்கித்திருடர், அஞ்சிப்பதுங்கும் திருடர், அதிகாரத்திருடர், கொள்ளைக்காரர், கொள்கைக்காரர் முதலான ரகங்களுடன், இன்னும் 'உயர்ந்த ஜாதி'களும் உண்டு. ஏழைகளைச் சுரண்டும் தனவான் மட்டுமா? கள்ளக்கடை முதலாளி மட்டுமா? லஞ்ச அதிகாரி மட்டுமா? வஞ்சமாய்க்கள்ள நாணயம் செய்கிறவன் மட்டுமா? நாடுகளைத்திருடும் ஏகாதிபதியும்சுதந்திரம் திருடும் சர்வாதிகாரியும் திருடர், திருடரே! இத்தனிப்பெருந் திருடரில் முடிசூடும் திருடருமுண்டு. முடிசூடாத் திருடருமுண்டு. நாடுதிருடிகள்போல் ஏடுதிருடிகளும் உண்டு. அதாவது, பிற நூல்களிலிருந்து திருடிச் சொந்தச் சரக்காக விற்பனை செய்கிறவனும் திருடன்தான். தனக்கு ஒரு கவித்வசக்தியில்லாமல் சொற்றொடர்களையும் பிரசங்களையும் பிறநூல்களிலிருந்தும்அகராதிகளிலிருந்தும் நிகண்டுகளிலிருந்தும் கவர்ந்து கோத்துக் கள்ளக்கவிக்கடைபோடுகிறவனும் கள்வன்தான்! ஆம்; கலையுலகிலும் களவுண்டு; ஐயோ! கொலையும் உண்டு!

## ஐவகைக் கள்வர்

போகட்டு ஐயா; மத உலகத்திலாவது திருடர்கள் இல்லையென்று சொல்லுகிறீர்களா? நெஞ்சிலே கை வைத்து இந்தக் கள்வன் குல அரசுகளின் ஏற்றம் சொல்லும்போது, இவர்கள் மற்றத் திருடர்களையும் 'நல்லவர்க'ளாக்கிவிடுகிறார்கள் என்கிறார் படிக்காசுப் புலவர். இவர்களில் அஞ்சுவகைக் கள்ளர்களை இப்புலவர் பின்வரும் பாட்டில் ரஸமாய்க் கோஷ்டி சேர்த்திருக்கிறார். கேளுங்கள், பாருங்கள், இவர் ஈசுவரசாட்சியாகவே பேசுகிறார்:

செழுங்கள்ளி நிறைசோலைத்
தண்டலைநீள் நெறியாரே!
திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர்,—
பொல்லாத கள்ளர் இனி
யாரோ என்றால்,

கொழுங்கள்ளர் தம்முடன்கும்-
பிடும்கள்ளர், திருநீறு
குழைக்கும் கள்ளர்,
அழுங்கள்ளர், தொழும்கள்ளர்,
ஆசாரக் கள்ளர்இவர்
ஐவர் தாமே!

கள்ளக்கும்பிடு போடுகிறவர்கள் கள்ளக்கையெழுத்து இடுகிறவர்களின் இனம் தான்; ஜாதி உயர்வு! திருநீறு குழைக்கும் கள்ளர், திருநாமம் குழைக்கும் கள்ளரின் தாயாதி: அவர்களுக்கும் இவர்கள் உபலட்சணம். அழும் கள்ளர்கள் அழுகையில் மட்டுமா கத்தி கட்டாரிகளை மறைத்துவிடுகிறார்கள்? ஒரு கள்ளச்சிரிப்பிலும் எத்தனையோ ஈட்டிகளையும் வெடிக்குண்டுகளையும், அணுக்குண்டுகளையும் கூட ஒளித்துவிடுவார்களே! தொழும் கள்ளர்களோ நாஸ்திகரையும் 'நல்லவ'ராக்கக்கூடியவர்கள்! இப்படியெல்லாம் மதக்கள்ளர்களின் 'நாற்பாறகுலம்' பேசி, இவர்களையெல்லாம் வென்று ஐயஸ்தம்பம் நாட்டுவோரை ஆசாரக்கள்ளரென்று வெகு அருமையாக அழைக்கின்றார் நம் புலவர்பெருமான். படிக்காசுத் தம்பிரானல்லவா?—தெரிந்து பேசுகிறார்.

## கள்வர் குலப் பேரரசுகள்

ஆசாரக் கள்ளர்கள் கள்ளத்தனத்தில் நிகரற்றிருப்பதுபோல் நடிப்புத்திறனிலும் ஈடும் எடுப்பும் இல்லாதவர்கள். 'வேதசாஸ்திரமே இப்படி ஒரு வைதிக அவதாரம் எடுத்துத் தன் விதி விலக்குகளைத் தானே அனுஷ்டித்துக் காட்ட வந்துவிட்டதோ?' என்று பிரமிக்கிறோம். 'பாகவதமே இப்படி ஒரு பாகவதராகி, இங்கே பரமபதப் பயிர் விளைவிக்க வந்ததோ?' என்றும் அதிசயிக்கும்படியிருக்கிறது ஆசாரக் கள்ளர் நிலை. ஆனால் ஆசாரிய ஸம்பாவனைகொடுத்து மற்றக் கள்ளர்களெல்லாம் தொழில் கற்கவேண்டியது இந்த ஆசாமிகளிடம்தான்!

'ஆ, இவர்களே ஞானத்தின் அகலம், ஒழுக்கத்தின் உயரம், பக்தியின் ஆழம், பரலோகத் தபாற்பெட்டி!' என்றெல்லாம் மக்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்க, இவர்களும், 'கள்வருலகில் அக்ராதாம்பூலம் எங்களுக்கே!' என்று பரவசமாவதுபோல் கண்ணீரும் கம்பலையுமாவார்கள்.

கன்னங் கரியஇருள் நேரம்

என்று பாரதி பாடுகிறாரே, அந்தநேரம் இவர்களுக்கு அவசியமில்லை. பட்டப்பகலின் வெட்டவெளிச்சமே இவர்களுக்கு வசதி.

சின்னக் கரியதுணி யாலே

என்று பாடுகிறாரே நம் தேசியக் கவிஞர் பெருமான், அத்தகைய அழுக்குத் துணிதான் தேவையென்பதுமில்லை. பட்டுப் பீதாம்பரங்களாலும் 'தேகமெல்லாம் மூடித், தொழில்-தலைமைப் புலமை நடாத்தும் அரும்பெருந் திறனும் ஆசாரக் கள்ளருக்கு உண்டு.

## ஸ்நான கட்டக் காட்சி

இப்படியெல்லாம் எண்ணமிட்ட வண்ணம் ஒரு கவிஞர் — வேறு யாரும் இல்லை, திருக்குற்றலக் குறவஞ்சி என்ற இன்னிசைப் பிரபந்தத்தின் ஆசிரியரான திரிகூட ராஜப்பக் கவிராயர்தான்—தாம்பிரபருணி ஆற்றங் கரைக்கு வந்துசேர்ந்தார். அங்கே ஒருபுறம் சிலர் நீராடிக் கட்டுவிபூதிகளுடனும், சிற்சிலர் பட்டைநாமங்களுடனும் காட்சியளிக்கிறார்கள். வேறு சிலர் சூரிய நமஸ்காரம் செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும்

சிலர் அழுகையும் தொழுகையுமாயிருக்கிறார்கள். பெண்களும் ஒரு புறம் நீராடிக்கொண்டிருக்கிறார்கள். 'அதோ, அவர்களில் நல்லவர்களும் உண்டு; ஆசாரக் கள்ளர்களும் உண்டு' என்று கவிஞர் தமக்குள் தாமே சொல்லிக்கொள்கிறார்.

இப்போது கவிஞருடைய பார்வை வேறொரு பக்கமாய்ச் செல்லுகிறது. அங்கே,

ஏறாத மீன்களும் ஏறி வருகுது
எத்திசைப் பட்ட குருகும் வருகுது

[குருகு - பறவை.]

அதேசமயத்தில் தண்ணீர்க் கரையோரத்தில்,

ஆலாவும் கொக்கும் அருகே வருகுது'

[ஆலா - ஒருவகையான ஜலக்கரைப் பட்சி] அதே சமயம் ஒரு நாரையின் நிலை நம் கவிஞரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்துவிடுகிறது.

'அடடா, அந்த நாரை வைராக்கியத்தில் முதிர்ந்த ஒரு யோகிபோலக் காண்கின்றதே! எத்தனையோ மீன்களைக் கண்டும் "சிவனே" என்றிருக்கிறது. சைவவிரதம் பூண்டு கொண்டதா? மீன் குலத்தின் துயரங்களுக்காக ஏங்கி இரங்கி வாட்டமுற்றிருப்பதுபோலத் தோன்றுகிறது செந்தண்மை பூண்டொழுகும் அந்தணாளன் போலே! ஆனால்... ஆனால் கொழுத்த மீன்கிடைக்கும் வரையில்தானே இந்த அந்தண்மையும் வாட்டமும் விரதமும் வைராக்கியமும்! என்று சிந்தனைசெய்கிறார். இதே சமயம் அங்கே நீராடி 'நிர்மலராக' நின்ற ஒரு பேர்வழி நீராடிக்கொண்டிருக்கும் ஒருவரது பணப்பையைப் பளிச்சென்று மணலுக்குள் மறைத்து விடுகிறார். இங்கே நாரைக்கும் கொழுத்த மீன் பளிச்சென்று கிடைத்து விடுகிறது. கவிஞருக்கும் உள்ளொளி பளீரென்று மின்னக் கவிதை பூர்த்தியாகக் கிடைத்துவிடுகிறது:

ஆலாவும் கொக்கும்
அருகே வருகுது ;

என்று ஆரம்பித்ததை,

ஆசாரக் கள்ளர்போல்
நாரை திரியுது !

என்று பளிச்செனப் பூர்த்திசெய்து கவிதைப் பேரின்பம் எய்தப் பெறுகின்றார்.

பாட்டைச் சேர்த்துப் பாடி நீங்களும் ரஸிகப் பேரின்பம் அடைந்து பாருங்கள். என்ன அழகான, உண்மையான கவிதை;

ஆலாவும் கொக்கும்
அருகே வருகுது ;
ஆசாரக் கள்ளர்போல்
நாரை திரியுது !

சரி; ஒரே ஒரு சந்தேகம் கவிஞருக்கு இப்போது: அந்த ஆஷாடபூதிதான் இந்த நாரையிடம் உபதேசம் பெற்றுக்கொண்டானா? அல்லது நாரைதான் ஆசாரிய ஸம்பாவனை கொடுத்து அங்கே உபதேசம் பெற்றுக் கொண்டதா?

'வள்ளலும்... கள்ளனை வரவு நோக்கி நின்றனன்' என்று ராமன் ராவணனை வரவுநோக்கி நின்ற நிலைகுறித்துப் பேசுகிறார் கம்பர். இங்கே ராமனை வள்ளல் என்றும் ராவணனைக் 'கள்ளன்' என்றும் கூறியுள்ளார். மேலே சொன்ன கள்வர்களெல்லாம் ராவண கோத்திரம் தான்!

கள்வன் யார்?' என்பது இப்போது தெளிவாகி வருகிறதா? ஆனால் பக்தர்கள் ஆத்மாபஹாரக் களவே பெருங்களவு என்பர். அதாவது, இறைவனுக்கு உரிய ஆத்மாவைத் தமதென்று அபிமானிக்கிறவர்களெல்லாம் கள்வர், பெருங்கள்வர் என்பது பக்தர் பெருங்கொள்கை-இத்தகைய கள்வர் மலிந்திருப்பது உலகம். 'நம்மைக் கொள்ளை கொள்ள வருவாருண்டோ?' என்று வள்ளலாகிய இறைவன் தானே திருடனைத் தேடிக் கொண்டிருக்கும்போது, அந்தக் கொள்ளையில் ஈடுபடாது நம் நெஞ்சிலுள்ள அவன் பொருளையே அபகரிப்பதல்லவோ தனிப்பெருங் கள்ளத்தனம் என்பர் பக்த மணிகள்.

ஏன், இறைவனையும் 'என் நெஞ்சம் கவர் கள்வன்' என்று பக்தர் கூறுவதுண்டு. திருமாலின் 'ஹரி' என்ற திருநாமமும், சிவபெருமானின் 'ஹரன்' என்ற திருநாமமும் 'அபகரிப்பவன், கவர்பவன்' என்று பொருள்படுகின்றன. ஹரிஹரர் மட்டுமா?—முருகக்கடவுளும் 'செம்மான் மகளைத் திருடும் திருடன்!' இறைவன் நெஞ்சம் கவர்ந்து, அதிலுள்ள ஆத்மா என்ற தன் பொருளை அக்கிகரிக்க விரும்புகிறான். நாமோ அவனுக்குரிய பொருளைக் களவாடித் தன்னலத்திற்காகப் பயன்படுத்தப் பார்க்கிறோம். உண்மையில் கள்வர் யார்?

இது எப்படியிருந்தாலும், வெண்ணெயையும் வெண்ணெய்போன்ற உள்ளங்களையும் களவாடும் தொழிலில் திறமையுடையவன் கள்ளக் கிருஷ்ணன்தான் என்கிறார்கள் பக்த சிரேஷ்டர்கள். ஆம்; அவனே கள்வன்! அந்த வள்ளற்பெருங் கள்வனை அடைக்கலம் புகுந்து புதுவாழ்வு பெறுவதே எல்லாக் கள்வர்களும் பிழைத்துப்போகும் பெருவழி.


# குஷ்டம் ★ வெண் குஷ்டம்

## LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.

கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப்படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆப்பிரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt.) TANUKU, M. S. M.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அமாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 1917-ஆம் வருஷம்

1917-ஆம் வருஷத்தில் திருவல்லிக்கேணி கவர்மெண்ட் பாடசாலை முழுவதும் T. P. கோவில் தெருவிலுள்ள ராஜாராமராவ் வீட்டிலேயே நடந்தது. ஹைஸ்கூல், எலிமெண்டரி வகுப்புக்கள், லோயர், ஹையர், ஸெகண்டரி என்னும் மூன்று உபாத்திமைத்தொழில் வகுப்புக்கள் எல்லாம் அந்த இருண்ட கட்டிடத்தில் நடந்தது என்றால் இப்போது யாரும் நம்பமாட்டார்கள். அப்போது வகுப்புக்களில் மாணவிகள் குறைவு. அந்த வருஷந்தான் 6-வது பாரம் ஆரம்பம். 14-15-ல் 4-வது பாரம், 15-16-ல் 5-வது, 16-17-ல் 6-வது பாரம். அதில் ஆச்ரமத்துப் பெண்கள் மூன்றே பேர்: அம்முகுட்டி, லக்ஷ்மி, பார்வதி. ஐந்தே வருஷத்தில் இந்த முதல் தொகுதி 3 பெண்களை இரவும் பகலுமாக படிப்பித்து 1917-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 26-ந் தேதி S. S. L. C. பரீக்ஷைக்கு அனுப்பினோம். இதுவே இந்தப் பாடசாலையில் முதன்முதல் S. S. L C. பரீக்ஷை. கடவுள் கிருபையில் மூவரும் பரீக்ஷையில் தேறி ஜூலை மாதத்தில் மேரி ராணி கலாசாலையில் இன்டர் வகுப்பில் சேர்ந்தார்கள், அவர்களுக்கு ஆச்ரமத்தைவிட்டு கலாசாலையிலேயே போயிருக்க இஷ்டமேயில்லை. ஆச்ரமத்திலேயே இருந்துகொண்டு காலேஜுக்குப் போக விரும்பினார்கள். ஆச்ரமத்தின் சூழ்நிலை, பழக்கவழக்கங்களும் காலேஜின் சட்டதிட்டங்களும் வெவ்வேறு என்றும், பிற்காலத்தில் ஜனசமூகத்தில் வேலைசெய்யப்போகும் இந்தப் பெண்களுக்கு காலேஜ் வாழ்க்கை அனுபவங்கள் அவசியம் என்றும் மிஸ் லிஞ்ச் கருதி அவர்களை காலேஜியிலேயே யிருக்கும்படி ஏற்பாடு செய்தாள். நிற்க,

திருவல்லிக்கேணி பாடசாலையில் கீழ்கூடம் ஒரே இருட்டு. மாடிப் படிக்கட்டு வழியும் இருட்டு. இந்த இடங்களில் ஒருநாள் முழுவதும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். இந்த விளக்கு வெளிச்சத்தில்தான் கூடத்தில் மாணவிகளுக்கு தேகாப்பியாசம். சிறு அறைகளில் 10 மாணவிகளுக்கு உட்பட்ட பெரிய வகுப்புக்கள். பெரிய அறைகளை நடுவில் பீரோக்கள் வைத்துப் பிரித்து 2 வகுப்புக்கள். மழைக் காலங்களில் மாடி தவிர மற்ற கீழ்இடங்கள் எல்லாம் ஒரே இருள்மயமாயிருக்கும். அங்குதான் வகுப்புக்கள் நடந்தாகவேண்டும். டெஸ்க்குகள் இடத்தை யடைத்துக்கொண்டு போய்வருவது மாணவிகளுக்கு மிகுந்த கஷ்டமாயிருக்கும்.

டிரெயினிங் வகுப்பு மாணவிகள் அநேகர் கிறிஸ்தவர்கள். வெளியூரிலிருந்து வந்தவர்கள் அநேகர். அவர்களுக்காக பெரிய தெருவில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தி அதில் ஒரு கிறிஸ்தவ ஹாஸ்டல் ஆரம்பமாயிற்று. கவர்மெண்டில் வேலையாயிருந்து "ரிடயர்" ஆன மிஸ் ஷண்முகம் என்பவள் அந்த ஹாஸ்டலுக்குத் தலைவியாக ஐந்தாறு வருடங்கள் இருந்தாள்.

அந்த வருஷம் ஸெகண்டரி மாணவிகளை யழைத்துக்கொண்டு மிஸ் பிரேஜரும் நானும் பூலேரிக்கு ஒரு உல்லாசப் பிரயாணம் போனோம், எரி

யில் ஒருபடகில் கொஞ்சதூரம்போய் அங்கு ஸ்நானம்செய்துவிட்டுத் திரும்பினோம். ஏரியிலிருந்து பட்டணத்துக்கு ஜலத்தை சுத்தம்செய்து அனுப்பும் முறைகளையும் ஏரி நிரம்பி அங்கங்கு வழிந்து ஓடும் சிற்றோடைகளையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

அந்த வருஷம் எலிமெண்டரி பரீக்ஷையில் கணிதம் வினாக்கள் தயாரித்து முக்கிய பரீக்ஷகராக இருந்தேன். பரீக்ஷகராக இருந்தது அதுவே முதல்தடவை; அதன்பிறகு S. S. L. C., L. T. முதலிய பரீக்ஷைகளில் கணிதம், தமிழ், இயற்கைப்பாடம் இவற்றில் வினாத்தாள்கள் தயாரிப்பதிலும், விடைத்தாள்கள் திருத்துவதிலும் பரீக்ஷகராக தேர்ந்தெடுக்கப்பட்டு அனுபவம் அடைந்துள்ளேன்.

ஏப்ரல் கடைசியில் கோடைவிடுமுறை ஆரம்பம். முதலில் சித்தி, ஆச்ரமத்துப்பெண்கள் 30 பேர்களுடன் மதுரை, ராமேச்வரம், திருவனந்தபுரம் முதலிய இடங்கள் போய்விட்டு 20 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பினர். ஊருக்குப் போகமுடியாத பெண்கள், மற்று சித்தியுடனும் என்னுடனும் பல ஊர்கள் பார்க்க விருப்பமுள்ள பெண்கள் இவர்களை நாங்கள் சிற்சில இடங்களுக்கு அழைத்துப்போவதுண்டு.

1917-ஆம் வருஷம் ஐஸ்ஹௌஸ் என்னும் கட்டிடத்தை கவர்மெண்டார் 80,000 ரூபாய்க்கு வாங்கிவிட்டனர். அதில் அநேகம் மராமத்துக்கள் செய்யவேண்டியிருந்தது. முக்கியமாக வௌவால்கள் அடைந்திருந்த சில அறையை மூடிவிடவேண்டுமென்று P. W. D. அதிகாரிகள் அபிப்ராயப்பட்டனர். ஆகவே அந்த வருஷம் கோடைக்காக பாடசாலை மூடப்பட்டவுடன் ஆச்ரமப் பெண்களை பாடசாலையில்குடியேற்றிவிட்டு ஐஸ்ஹௌஸில் வேண்டிய ரிபேர்கள் செய்யப்பட்டன.

அந்த வருஷம் கோடைவிடுமுறையின் முதல் பாகத்தில் சித்தி திரும்பினவுடன் நான் என் பெற்றோர்களுடன் போய்ச்சேர்ந்துகொண்டேன், திண்டுக்கல், மதுரை பார்த்துக்கொண்டு அந்த வருஷமும் பாபநாசம், குற்றாலம் இரண்டு இடங்களிலும் தங்கினோம். பாபநாசத்தில் கல்யாணமண்டபத்திலும் அதைச் சேர்ந்த 2 அறைகளிலும் 10 நாளிருந்துவிட்டுப் பிறகு திருக்குற்றாலத்தில் ஐந்தருவி ரோட்டில் ஸ்ரீமான் நம்பெருமாள் செட்டியார் பங்களாவில் 15, 20 நாட்கள் இருந்தோம். என் சகோதரிகள் பாலம், சாவித்திரி அவர்கள் குழந்தைகளும், குஞ்சியம்மாள் பெண் செல்லம், அவள் குழந்தைகளும் எங்களுடன் வந்திருந்தார்கள். 25-ந்தேதி ஜூன் புறப்பட்டு பட்டணம் திரும்பினோம். அந்த வருஷம் எங்கள் குஞ்சப்பாவின் புதல்வன் சிவராஜாவுக்கு மிகவும் ஆடம்பரமாக தஞ்சையில் நடந்த விவாகத்துக்கு என் தகப்பனாரும் குழந்தைகள் சிலரும் போய்வந்தார்கள்.

ஜூலை 12-ந்தேதி என் சகோதரி பாலம் வந்து பிரஸவித்து ஆண் குழந்தை பிறந்தது. அப்போது அவள் கணவர் திருச்சியில் வேலையாயிருந்தபடியால் அவ்வூர் மலைமீது எழுந்தருளியிருக்கும் விநாயகர் பெயரிட்டு கணநாதன் என்று அழைக்கப்படுகிறான். அந்த வருஷம் ஜூலை ம தம் நடராஜன் ஸைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜில் L. T. வகுப்பில் வந்து சேர்ந்தான்.

செப்டம்பர் மாதம் பாலத்தின் கணவருக்கு இந்தியாவுக்குள்ளேயே யுத்தசம்பந்தமான I.M.S. கமிஷன் வேலை கிடைத்து பூனாவுக்குப் போனார்; பாலம் கைக்குழந்தையுடன் அவருடன் போனாள். அவளது பெரிய குழந்தைகள் என் பெற்றோர்களிடையேயிருந்துகொண்டு பாடசாலைக்குச் சென்று படித்துக்கொண்டிருந்தனர். பெரிய தெருவில் 101 நம்பர் ஆனந்த விலாஸ் என்னும் வீட்டை என் தகப்பனார் வாங்கினார்.

ஸ்ரீராஜாராமராவ் வீடு பாடசாலைக்குப் போதவேயில்லை. பெரிய தெருவில் "ராம்ஸதன்" என்னும் வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கு ஹைஸ்கூலை மாற்றினோம். இரண்டு ஸ்கூலிலும் வேலையுள்ள சில உபாத்தினிகளுக்கு இரண்டு கட்டிடத்துக்கும் போய்வருவது மிகவும் சிரமமாகவே யிருந்தது; ஆயினும் வேறு வழியில்லை.

அந்த வருஷம் டிஸம்பர் மாதம் 19-ஆந் தேதி ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் பாடசாலையைப் பார்வையிட்டு, ஆச்ரமத்துக்கும் விஜயம் செய்தார்—எங்கள் வேண்டுகோட்படி அவரது சில கவிதைகளை உணர்ச்சியுடன் நிதானமாய் சொல்லிக் காட்டினார். அவரே சொல்லிக்காட்டியதை நாங்கள் கேட்டதை ஒரு பெரிய பாக்கியமாகக் கருதினோம்.

1919-ஆம் வருஷம் சுமார் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் சென்னை ராஜதானியின் பல இடங்களில் 'இன்புளுவென்ஸா' என்னும் கடுமையான ஜுரம் ஒட்டுவாரையொட்டிப் பரவிற்று. சந்தோஷமாய் சௌக்கியமாய்ப் படித்துக்கொண்டிருந்த ஆச்ரம மாணவிகளுக்கு இந்த ஜுரம் வந்து அநேகமாய் அத்தனை மாணவிகளுக்கும் ஒருவருக்குப் பின் பலராக வந்து மிகுந்த கவலைக்கும் கஷ்டத்துக்கும் உள்ளாக்கிவிட்டது. அப்போது டாக்டர் ஸைமன் ஸின் என்றும் ஒரு ஆங்கில லேடி டாக்டர் ஆச்ரமத்துக்கு டாக்டராயிருந்தார். ஏறத்தாழ 1 மாத காலம் ஜுரத்துடன் கஷ்டப்பட்ட பெண்களை பிரதி தினம் காலை மாலை இரண்டு வேளையும் வந்து பார்த்து தகுந்த மருந்துகொடுத்துக் கவனித்துவந்தார். அந்த ஒரு மாதமும் சித்தி செய்திருக்கும் பணிவிடை பெற்ற தாயார்கள், நல்ல திறமைவாய்ந்த நர்ஸுகள் கூடச் செய்யமாட்டார்கள். கட்டடத்திலும், தோட்டத்து (out - houses) அறைகளிலும் 30, 40 பேருக்குக் குறைவாமல் படுத்திருப்பார்கள். அத்தனை பெண்களையும் தனித்தனியாக கவனித்து, இரவில் அவர்களுக்கு வேண்டிய பால், கஞ்சி, வெந்நீர் மருந்துகள் இவற்றைத் தயாராக வைத்துக்கொண்டு வேளாவேளைகளில் கொடுத்து, சோம்பலின்றி அத்தனை பேருக்கும் தெர்மா மீடர் வைத்து ஜுர அளவைக் குறித்து வைத்துக்கொண்டு அதை டாக்டருக்குக் காண்பித்து, இரவில் கண் விழித்திருந்து, அந்தப் பெண்களுடன் அவர் பட்டபாடு கொஞ்சமல்ல. இந்த ஒரு சமயம் அதிக உழைப்பு. அவர் ஆச்ரமத்திலிருந்த 25 வருஷ காலமும் அடிக்கடி ஒன்றிரண்டு பெண்கள் ஏதேனும் அசௌக்கியத்தினால் கஷ்டப்படுபவர்களுக்கு கை வைத்தியமாகவே மருந்துகொடுத்து பத்தியமான சமையல்செய்து போட்டு குணப்படுத்திவிடுவார். கடவுள் கிருபையினால் ஜுரம் வந்து கஷ்டப்பட்ட எல்லாப் பெண்களும் பிழைத்தெழுந்தார்கள். ஒரு பெண்ணுக்கு மாத்திரம் சற்று அதிகமாகி டாக்டருக்கே நம்பிக்கை குறைந்துபோய் அந்தப் பெண்ணின் தகப்பனாரை வருவித்தோம். காலக்கிரமத்தில் அவளும் நல்ல வேளையாக பிழைத்துவிட்டாள். மிகுந்த பலவீனமாயிருந்தாள். டாக்டர் உத்தரவின்படி அவளுக்கு இரண்டு வேளையும் பசலைக்கீரை முதலான ஏதேனும் ஒரு கீரையும பச்சைப் பயறு முளைப்பயறும் கொடுத்து வந்ததில் உடம்பில் ரத்தம் ஊறி சௌக்கியமடைந்தாள். பெற்றோரையும் பந்துக்களையும் விட்டுப் பிரிந்து கல்விக்காக ஆச்ரமத்தில் வந்து ஜுரத்துடன் கஷ்டப்படும் பெண்களுக்கு ஒன்றும விபரீதமாக நேராமல் இருக்கவேண்டுமே யென்று சித்தியும் நானும மிகுந்த கவலைப்பட்டோம். நல்லகாலம், கடவுள் எங்கள் பங்கிலிருந்து ஒரு விபத்துமின்றி மாணவிகளைக் காப்பாற்றினார்.

"விதவைகளுக்கு ஆயுள் கெட்டி, சமுத்திரம் பொங்கிவந்தால்கூட அது ஐஸ்ஹௌஸை விட்டு விலகி மற்றவர்களைத்தான் முழுக்கடிக்குமே



1—11—1949

யன்றி ஆச்ரமத்துப் பெண்களிடம் போகக்கூட பயப்படும்'' என்று திருவல்லிக்கேணியில் நடந்த ஒரு மாதர் கூட்டத்தில் விதவைகள் முன்னேற்றத்தில் விருப்பமில்லாத ஒரு அம்மாள் சொன்னாராம். ஒரு சமயம் பாடசாலை மாடியில் பின்புறம் திறந்தஇடத்தில் சில தொட்டிகளில் போட்டிருந்த பயிர்களைப்பற்றி 5-ஆவது பாரம் மாணவிகளுக்கு நான் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தேன். அடுத்தவீட்டு மாடியில் அரிசி உளுந்து காயவைத்துக் கொண்டிருந்த அந்தவீட்டு அம்மாள் ஒருத்தி என்னைப் பார்த்து "ஏதோ, புண்ணியவதி! புருஷனில்லாத இந்த அநாதைப் பெண்களுக்கெல்லாம் நீங்கள் தர்மம் செய்கின்றீர்கள்" என்றெல்லாம் புகழ்ந்தாள். உடனே நான் வேறு அலுவலின் பொருட்டு 10 நிமிஷம் அவிடத்தைவிட்டுப் போய்வந்தேன். நான் போனவுடன் அந்த அம்மணி மாணவிகளைப் பார்த்து மிகுந்த கோபம் ஆத்திரத்துடன் "உலகமே கெட்டுப்போய்விட்டது. கலிகாலம்! அந்தப் பாவி கம்மனாட்டிகளையெல்லாம் படிக்கவைத்து பாழுக்கப்போகிறாள்" என்றெல்லாம்சபிக்க ஆரம்பித்துவிட்டாள். இதை நான் திரும்பிவந்தவுடன் அந்தப் பெண்கள் என்னிடம் சொல்லி ஆத்திரப்பட்டார்கள். இப்படியாக ஆச்ரமத்தைப்பற்றிப் பலர் பலவிதமாக அனுகூலமாயும் பிரதிகூலமாயும் பேசுவார்கள். ஆனால் ஒன்று. என் எதிரில் நேருக்கு நேராக யாரும் ஆச்ரமத்தைப்பற்றியும் என் வேலையைப்பற்றியும் குறைவாகவோ, இகழ்ச்சியாகவோ பேசினதே கிடையாது. அதுவும் என்னுடைய அதிருஷ்டமென்றே கருதுகிறேன்.

ஒரு சமயம் நாங்கள் T. P. கோயில் தெரு வீட்டிலிருந்தபோது ஒரு நாள் பாதிராத்திரி ஒரு பூனை பீரோமேலிருந்து கீழே படுத்திருந்த ஒரு பெண்மேல் குதித்து ஓடிவிட்டது. அவள் பயந்துபோய் அலறி அழுதுகொண்டு எழுந்தவுடன் மற்றும் சில பெண்களும் விஷயம் புரியாமல் பயந்துகொண்டு அலறிவிட்டார்கள். உடனே நான் எழுந்து விளக்கைப் போட்டவுடன் எல்லோரும் அடங்கிவிட்டார்கள். இத்தனையும், 2, 3 நிமிஷத்துக்குள் நடந்துவிட்டது. வாயில் தாழ்வாரத்து இரும்புக் கதவு பூட்டி சாவி என்னிடமிருப்பது வழக்கம். ஒரு இரவு—காவல்காரன் வாயில் தாழ்வாரத்தில் படுத்திருப்பான்—மேற்சொன்ன சம்பவம் நடந்த 2 நிமிஷத்துக்குள் அக்கம்பக்கம் எதிர்வீட்டுகாரர்கள் சுமார் 20, 30 பேர் விளக்கு, தடிகளுடன் தெருவில் கூட்டம்கூடி கதவைத் திறக்கும்படி காவற்காரனைக்கேட்டு அவன் வாயிற்பக்கத்து மாடிப்படி வழியாக சாவியைக் கேட்கவந்துவிட்டான். "எதற்காகவடா சாவி?" என்றால் "தெருவில் ஐயமாருங்க கூடியிருக்காங்க, கதவைத்திறக்கச் சொல்லராங்க" என்றான். மாடியிலிருந்தே வெளியில் கூடியிருப்பவர்களை எட்டிப் பார்த்தேன். நல்லவேளையாக சாவி என்னிடமிருந்தது. இல்லாவிட்டால் அத்தனை புருஷர்களும் மாடிக்கு வந்திருப்பார்கள். நான் மாடியிலிருந்தபடியே கீழிருப்பவர்களுக்கு வந்தனம்செய்து. "திருடர்கள் யாருமில்லை, பூனை குதித்து பயந்துபோனார்கள், இனி ஒன்றும் பயப்படவேண்டாம்" என்று சொல்லி அவர்களை யனுப்பினேன். அதை சிலர் நம்பவில்லை, எவனோ கெட்ட எண்ணத்துடன் வந்தான் என்றும், நாங்கள் விழித்துக்கொண்டவுடன் அவன் ஓடிவிட்டான் என்றும், அதை வெளியில் சொல்லாமல் நான் மறைத்து மழுப்பினேன் என்றும் சில விஷமக்காரர்கள் பேசிக்கொண்டார்களாம். இது தெரு நடுவிலுள்ள வீட்டில் நடந்த சம்பவம். நாங்கள் ஐஸ்ஹௌஸுக்குப் போய் ஒன்றிரண்டு வருஷங்களுக்குப் பிறகு நடந்த இதுபோன்ற 2 சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அந்த வேடிக்கை சம்பவங்களையும் எழுதுகிறேன்.

"கற்பார் இராம்பிரானையல்லால் மற்றும் கற்பரோ?" ராம: என்றால், எவன் விஷயத்தில் யோகிகள் குதுகலிக்கிறார்களோ, அந்த மனத்துக்கினியான் என்று அர்த்தம்; தவிர, எந்த பரப்ரஹ்மத்திடமிருந்து யோகிகள் நித்யானந்தத்தை அனுபவிக்கிறார்களோ அந்த ராமசந்த்ர பரப்ரஹ்மம் என்றும் அர்த்தம். அபூர்வமான ராமகுணங்களை அபூர்வமாக அனுபவிப்பதன் மூலம் ராம கதையைக் கற்போம் —வை. மு. ஸ்ரீ.

---

பேருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்,

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதசத்ருக்ந ஹநுமத்ஸமேத ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

# அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

---

## முன்னுரை.

அபூர்வ ராமாயணமென்று பெயரிட்டு இதனை யெழுதத் தொடங்குகின்றேன். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் ஆரம்பம் எப்படி யமைந்திருக்கின்ற தென்றால், தேவலோகத்திலிருந்து நாரதமஹர்ஷியானவர் நான்முகக் கடவுளின் நியமனத்தினால் வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு வந்துசேர, அந்த நாரத முனிவரை வால்மீகி முனிவர் வணங்கிவழிபட்டு 'கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந்?" என்று தொடங்கி ஒருபதினாறு திருக்குணங்களைச் சொல்லி இத் திருக்குணங்கள் அமைந்த ஒரு மனிதன் இப்போது இவ்வுலகிலுளனாயின் எனக்குச் சொல்லியருளவேணும்; உம்மிடத்தில் இதைக் கேட்டறிய எனக்கு மிகவும் ஆவலுள்ளது – என்று விண்ணப்பஞ்செய்கிறார்.

அதன்மேல் அந்த நாரதமுனிவர் மிகமகிழ்ந்து விடைகூறத் தொடங்கி "இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்து ஸ்ரீராமனென்ற திருநாமம் பெற்றவன் ஒருவனுளன்; அவன் உலகம் நிறைந்த புகழாளன்; அளவற்ற சக்தி வாய்ந்தவன்; அவனது திருக்குணங்கள் என்னாலெடுத்துரைக்க முடியா; அவனே கோஸலராஜன் திருமகளான கௌஸல்யா தேவியின் வயிற்றிற் பிறந்த தசரதபுத்திரன்; கடல்போல் மஹாகம்பீரன்; மஹாவீரன்; மிக்கபொறுமையாளன்; ஸத்யசீலன்' என்றுரைத்து உடனே அவனது சரிதையையும் சுருக்கமாக வுபதேசித்து முடிக்கிறார்.

பிறகு தம்மிடம் நேராக வந்த நான்முகக் கடவுளின் அநுக்ரஹத்தையும்பெற்று வான்மீகிமுனிவர் இராமாயணத்தை இயற்றி முடித்தார்—என்பதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாரதமுனிவரை நோக்கி வான்மீகிமுனிவர் கேட்ட திருக்குணங்கள் எண்ணிக்கையில் பதினாறாக அமைந்திருப்பதனால் "ஸ்ரீராமசந்திரன்" என்று சந்திரனாகக் கூறப்படுகின்றவனுடைய பதினாறுகலைகளோ இவை! என்னலாம்படி யுள்ளன அத் திருக்குணங்கள். அந்தப் பதினாறு திருக்குணங்களை விவரித்து அவற்றிலேயே இராமாயணகதை முழுவதும் அடங்கியுள்ள தென்று நிரூபணம் செய்யவே இப்போது அடியேன் முன்வருகின்றேன்.

வான்மீகிமுனிவர் நாரதமுனிவரிடம் உபதேசங் கேட்டபிறகே இராமனைத் தெரிந்துகொண்டாரென்று சொல்வதற்கில்லை. முன்னமே அவர் ஸ்ரீராமமந்த்ரத்தை இடைவிடாது அநுஸந்தானம் செய்துகொண்டிருந்தவரென்றும், நான்முகன் தன்னுலகில் சதகோடி ப்ரவிஸ்தரமானதொரு ராமாயணத்தை இயற்றி நாரதர் முதலிய முனிவர்களுக்கு அதை ப்ரவசனஞ் செய்து, ராமபக்தரான வான்மீகிமுனிவரைக்கொண்டு இக்கிலவுலகத்திலும் ஸ்ரீராமகதையைச் சுருக்கமாக ப்ரவர்த்தனம் செய்வதற்காக வான்மீகியின் ஆச்ரமத்திற்கு நாரதரையனுப்பினனென்றும் வரலாறு காண்பதனால் நாரதமுனிவரை நோக்கி வான்மீகிமுனிவர் விண்ணப்பஞ் செய்த திருக்குணங்களானவை இராமபிரானது சரிதைகளில்தேறிய குணங்களேயன்றி வேறல்லவென்பது நன்கு அறியத்தக்கது.

பகவான் இராமனாக இங்கிலவுலகில் திருவவதாரம் செய்தருளினது தன்னுடைய திருக்குணங்களை வெளியிடுவதற்காகவேயென்றும், ராவணஸம்ஹாரம் முதலியவை வியாஜமாத்திரமான பிரயோஜனங்களென்றும் தத்துவ முள்ளது. இதனை பட்டரென்னும் பேராசிரியர் * குணபரீவாஹாத்மநாம் ஜங்மநாம் * என்கிற ஸ்ரீஸூக்தியினால் வெளியிட்டருளினர்.

ஆகவே ஸ்ரீராமாயணத் தொடக்கத்தில் வான்மீகிமுனிவர் கூறுகின்ற பதினாறு திருக்குணங்களில் இராமபிரானது சரிதை முழுவதும் அடங்கியுள்ளதென்றும், அந்தச் சரிதையை அவர் அல்லும் பகலும் மனனம் செய்துகொண்டிருந்தபடியினாலேயே அந்தத் திருக்குணங்கள் அவருடைய ஹிருதயத்தில் ஊறிக்கிடந்தனவென்றும், அவற்றையே அவர் வாய்வெருவினாரென்றும் தெரியவருகிறது. அந்தப் பதினாறு திருக்குணங்களையும் வரிசையாக விவரித்து, ஒவ்வொன்றிலும் அநுசந்திக்கப்படவேண்டிய சரிதைகளையும் ஈண்டு விவரிக்க விரும்புகின்றேன். வான்மீகி முனிவருடைய வினாக்களிலே இராமாயணகதைகளையடைத்து அநுபவிக்கு மிவ்வனுபவம் அபூர்வமாதலால் அபூர்வ ராமாயணம் என்று இதற்குப் பெயரிடலாயிற்று.

## 1. கோ குணவாந்?

கஃ குணவாந்? என்பது முதற்கேள்வி. சிறந்த குணங்களையுடையவன் யாவன்? என்று பொதுவாகக் கேட்பதாகச் சிலர் இதற்குப் பொருள் கொள்வர். அப்படியன்று; சிறப்பாக ஒவ்வொரு குணத்தையு மெடுத்துக்கூறுமிந்த பிரகரணத்தில் குணவாந் என்கிற விதுவும் குறிப்பிட்டவொரு குணத்தைக் கூறுவதேயன்றி, பொதுவாக ‘நல்ல குணங்களையுடையவன் யாவன்?’ என்று கேட்கிறபடியன்று.

ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ர ரத்நத்தில் எம்பெருமானுடைய பல திருக்குணங்களை யமைத்து ஒரு ச்லோகமருளிச்செய்துள்ளார்; அது *வசீ வதாங்யஃ* என்கிற பதினெட்டாவது ச்லோகம். அதில் “வசீ, வதாங்யஃ” என்று இரண்டு குணங்களைக் கூறியான பிறகு குணவாந் என்று கூறி, அதன்பிறகு ருஜுஃ சுசிஃ என்று தொடங்கிப் பத்தெட்டு குணங்களைக் கூறி, முடிவில் “ஸமஸ்த

கல்யாண குணம்ருதோததி:" என்றுகூறப்பட்டுள்ளது. இதனால் இந்த ச்லோகத்தில் மூன்றாவது சொல்லாகவுள்ள குணவாந் என்பதற்கு [முன்னும் பின்னும் சொல்லப்பட்ட விசேஷகுணங்கள் போலவே] ஒரு விசேஷகுணமே பொருளாகக் கொள்ளப்படவேண்டு மென்பது தேறிநின்ற விஷயம்.

அந்தக் குணம் எதுவென்னில்; ஸௌசீல்ய குணமென்று பூருவாசாரியர்கள் திருவுள்ளம் பற்றியுள்ளார்கள். தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலந்து பரிமாறும் சீலகுணத்திற்கே ஸௌசீல்ய மென்று மறுபெயர்; எல்லாக் குணங்களிற்காட்டிலும் இக்குணம் மிகச் சிறந்ததாதலால் இதற்கு குணம் என்றே சிறப்புப் பெயர் கொடுக்கப்பட்டது. ப்ரக்ருதம் வால்மீகியின் வினாவில் கோ குணவாந்? என்றுள்ளதானது—சீலகுணமுடையவன் யாவன்? (அதாவது) தன் மேன்மையைச் சிறிதும் கணிசியாமல் தாழ்ந்தவர்களோடும் கலந்து பரிமாறுகின்றவன் யாவன்? என்று கேள்வி கேட்டபடியாகின்றது. இத் திருக்குணத்திற்குச சேர நாம் அநுஸந்திக்கக்கூடிய ஸ்ரீ ராம சரிதைகளைக் கேண்மின்:

ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இராமபிரானாக இந்நிலவுலகில் திருவவதரித்தா ரென்கிற விதுவே சீலகுணத்தின் பரீவாஹமாகவுள்ளது. கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் பத்தாவது ச்லோகம்* சீல: க ஏஷ தவ ஹந்த* என்று தொடங்குகின்றார். அந்தோ! இது என்ன சீலகுணம்! இதை எடுத்துப்பேச யாரால் முடியும்! என்கிறார்; அந்த சீலகுணத்தை எதுகொண்டு நிரூபிக்கிறாரென்னில்,*அத்ராவதீர்ய நநு லோசநகோசரோபூ:* என்பதே அந்தச் லோகத்தில் உயிரானவார்த்தை கட்கிலியானவெம்பெருமான் ஆஸுர ப்ரக்ருதிகளிடையே வந்து அவர்களுடைய கட்புலனுக்கும் இலக்காகித் திருவவதரித்தா னென்பதை நினைக்கும்போதே 'அந்தோ! இது என்னசீலம்! குணமறிந்து உகக்கமாட்டாதே எதிரம்பு கோப்பதுஞ் செய்யாநின்ற அரக்கர் அசுரர்போன்ற மனிசரிடையே வந்து பிறக்கும்படியான இந்த சீல குணத்தை என்னவென்று சொல்லுவது?' என்று உருகுகிறார் கூரத்தாழ்வான்.

பிறந்தவாறும்! என்று சொல்லி ஆழ்வார் ஆறுமாஸம் மோஹித்திருக்கும்படியான பகவானது திருவவதாரத்தை நினைத்தவாறே 'இது என்ன சீலகுணம்!' என்று உருகவேண்டியது தவிர வேறில்லை யன்றோ.

அவதாரம் என்ற வடசொல்லுக்கு மேலிருந்து கீழேயிறங்குவது என்று பொருள். பரமபதமாகிய மேல்நிலத்திலிருந்து நிலவுலகமாகிய கீழ்நிலத்திற்கு வந்தானென்பதை அவதார சப்தார்த்தமாக நினைக்கவேண்டா. மேலான தனது நிலைமைகளை விட்டிட்டுக் கீழான நிலைமைகளை ஏற்றுக்கொண்டதே அவதாரமெனப்படுகிறது. ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதவன், எல்லாவிடங்களிலுமுளன், எல்லாக்காலத்திலுமுளன், எல்லாப்பொருள்களாகவுமுளன் என்கிற விவை பகவானுடைய மேலான நிலைமைகள். இத்தகைய நிலைமைகளை அறவேவிட்டிட்டு இவற்றுக்கு எதிரிடையான தாழ்ந்த நிலைமைகளை ஏற்றுக்கொண்டல்லவோ பகவான் வந்து பிறந்தருளிற்று!

ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருந்தவன் அரக்கராசுரர்போல்வார்கண்ணுக்கும் புலப்பட்டான்; எல்லாவிடங்களிலுமுளனானவன் 'இப்போது அயோத்தியிலுளன், இப்போது சித்திரகூடத்திலுளன், இப்போது பஞ்சவடியிலுளன், இப்போது கிஷ்கிந்தையிலுளன், இப்போது கடற்கரையிலுளன்; என்னும்படியாகி, ஓரிடத்திலிருக்கும்போது மற்றோரிடத்தில் இலனென்று நினைக்கும்படியாயினன். எக்காலத்திலுமுளனானவன் ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே இராமனாகவிருந்து மற்றைக் காலத்தில் இலனாயினன் என்றுநினைக்கும்படி போயினன்.

*நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்—தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்* என்று ஆழ்வார்கள் அநுஸந்திக்கிறபடி எல்லாப் பொருள்களுமாகவுளனானவன் இராமன் என்கிறவொரு பெயர்க்கு மாத்திரம் பொருளாக விருந்தனன். ஆக இங்ஙனே உயர்ந்த நிலைமைகளை விட்டுத் தாழ்ந்த நிலைமைகளை ஏறிட்டுக்கொண்டு வந்து பிறந்தவாறு என்னே! என்று ஈடுபடும்படி யாக்குகின்றது சீல குணம்.

இராமபிரானுடைய சீலகுணத்திற்கு விசேஷித்த இலக்கு குஹப்பெருமாள் போல்வார். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் (5–8–1.) * ஏழையேதலன் கீழ்மகனென்னாதிரங்கி * என்று தொடங்கியுள்ள பாசுரத்தில் இந்த சீலகுணம் மிகவற்புதமாக அனுபவிக்கப்பட்டிருக்கின்றது. கங்கையில் ஓடம் விடுபவனும் ஆயிரம் ஓடங்கட்குத் தலைவனும் கங்கைக்கரையிலுள்ள ச்ருங்கிபேரபுரத்திற்கு அதிபதியுமாகிய ஒரு வேடர்தலைவன் குஹனென்பவன். இவனிடத்திற்கு இராமபிரான் பிராட்டியோடும் இளையவனோடு மெழுந்தருளியபொழுது இவன் அப்பிரானுடைய வடிவழகி லீடுபட்டுப் பரிந்து திருமேனிக்காவல் செய்தவிதம் வெகு ஆச்சரியமானது. [அது, ஸ்ரீவசநபூஷணம் - 247ல் காணத்தக்கது.]

பெருமாள் ச்ருங்கிபேரபுரத்திலே யெழுந்தருளி இளையபெருமாள் பாங்காக அமைத்த பர்ணசயனத்திலே பிராட்டியோடு பள்ளிகொண்டருளாநிற்க, இச் சேர்த்திக்கு என்ன தீங்கு விளையுமோவென்று அதிசங்கைகொண்ட இளையபெருமாள் முதுகிலிட்ட அம்பறாத்தூணியும் கையிற்பிடித்த வில்லுமாய் 'நடையாடும் மதிள் போலே' உலாவிக்கொண்டு நிற்க, இதைக்கண்ட குஹப்பெருமாள் 'ஒருதம்பி தாயைக் கொண்டு பெருமாளை நாட்டிலிருந்து காட்டிலே துரத்தினான்; இத் தம்பி தனியிடத்திலே என்செய்யப் பார்க்கிறானோ!' என்று அவ்விளையபெருமாளிடத்திலும் அதிசங்கை கொண்டு 'இவன் அப்படி ஏதேனுமொரு தீங்கு செய்யில் இவனையே முடித்துவிடுவது' என்று தானும் வில்லுமம்புமாய்க் கொண்டு நின்றதாக ஸ்ரீராமாயணத்திற் காண்கிறது.

ஆனால், இது எந்த ஸமயத்தில் நடந்ததோ அந்த ஸமயத்தில் வான்மீகிமுனிவரால் சொல்லப்படவில்லை; பிறகு பரதாழ்வான் சித்திரகூடஞ் செல்லப் புறப்பட்டு வருமளவில் அப் பரதனோடு

குஹன் இதைச்சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ளது. [அயோத்யா காண்டம். 87-வது ஸர்க்கம் 23, 24 ச்லோகங்கள் காண்க]

தொட்டிற்பருவமேபிடித்து இராமபிரான் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருக்கின்ற இளையபெருமாள்மேலும் அதிசங்கை தோன்றிப் பெருமாளிடத்தில் பரிவுகாட்டின இக் குஹனுடைய அன்பை என்ன வென்று சொல்லுவது! இவனுக்கு இவ்வளவான அன்பு இருந்தது பற்றியே பெருமாள் இவனிடத்தில் முதன் முதலாகத் தம்முடைய சீலகுணத்தைக் காட்டியருளினர்.

குஹனுடைய தாழ்வை எடுத்துக்காட்டுகின்ற திருமங்கையாழ்வார் 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னுதிரங்கி' என்கிருர். பெருமாள் குஹனைக் கைவிடுகைக்கு இவ் விழிகுணங்களில் ஓரொன்றே அமைவதாயிருக்க, அவை பலவுமுளவென்று கண்டும் அருட் கடலான பெருமான் குஹனிடம் உபேக்ஷை கொள்ளாமலிருந்ததோடு அளவு கடந்தும் கலந்து பரிமாறினன்.

க்ஷத்ரிய ஜாதியில் ஸூர்யகுலத்தில் இக்ஷ்வாகுவம்சத்தில் திருவவதரித்தவனும் சக்ரவர்த்தியின் திருக்குமாரனும் ஸகலைச்வர்ய ஸம்பன்னனும் மஹா புத்திமானும் பகைவரிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குஹனை நோக்குங்கால், இவன் இழிவான வேடச்சாதியனென்றும் அதனுல் பகுத்தறிவில்லாத அவிவேகி யென்றும் அச்சாதிக்கு இயல்பான கொடுமையினுல் எல்லாவுயிர்களோடும் பகைமை கொள்பவனென்றும் இப்படிப் பட்ட தன்மைகளைக்கண்டு இகழ்ச்சி கொள்ள வேண்டியிருந்தும் தனது பெருமைக் குணங்களையும் பாராமல் அவனுடன் கலந்து பரிமாறினவிதமெத்தகைத்தென்னில் "சீரணிந்ததோழமைகொண்டது மோரடையாளம்" என்று திருவடி வாக்கில் 'சீரணிந்த தோழமை' என்று வரும்படியாகவன்றே கலந்தது.

குகனுடைய அளவுகடந்த அன்பைக்கண்டு பெருமாள் அவனோடு தோழமை கொண்டாரா? அல்லது, பெருமாள் சீரணிந்த தோழமை கொண்டதற்காகக் குகன் அன்பு பாராட்டினுனு? என்று ஒரு கேள்வி பிறந்தால், எம்பெருமான் திருவுள்ளத்திற்கே தெரிய வெளிதான இவ்விஷயத்தில் நாம் என்ன விடை யிறுப்பது.

பெருமாள் கங்கைக்கரை சேர்ந்தவுடனே அதனைக் கேள்விப் பட்ட குகன் தன்னினத்தாரோடு பெருமாளிடம் வந்து சேர்ந்தானென்பதைக் கூறுகின்ற வான்மீகிமுனிவர் "தத்ர ராஜா குஹோ ராம ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா" என்கிருர். குஹனைப்பற்றி முதன் முதலாக ப்ரஸ்தாவம் செய்யும்போதே 'ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா' என்று கூறியிருப்பது மிகமிக வியக்கத்தக்கது. இராமனுடைய உயிர்த்தோழனுன குகன் இராமனது வரவைக் கேள்விப்பட்டு வந்து சேர்ந்தானென்று கூறியிருப்பதனுல் இவ் விருவர்க்கும் தோழமை முன்னேபிடித்தேயுள்ளது போல் தோன்றுகிறது. குகன் வரும்போதே இராமனைத் தழுவிக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது — "தம் ஆர்த்தஸ் ஸம்பரிஷ்வஜ்ய குஹோ ராகவமப்ரவீத்" என்ற மேல் ச்லோகத்தினுல்.

ஆனால் ஆழ்வார்களருளிச்செயலினாலும் கம்பருடைய வாக்கினாலும் இந்தத் தோழமை அப்போதுதான் தோன்றியதென்று நன்கு தெரிகின்றது. "குகனோடுங் கங்கைதன்னில் சீரணிந்த தோழமை கொண்டது மோரடையாளம்" என்பது பெரியாழ்வார் திருவாக்கு. கம்பராமாயணம் விபீடணனடைக்கலப்படலத்தில்—

(146.) "குகனொடு மைவரானேம் முன்புபின் குன்றுசூழ்வான்
மகனொடு மறுவரானேம் எம்முழை யன்பின்வந்த
அகனமர் காதலைய! நின்னொடு மெழுவரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வராற் பொலிந்தானுந்தை."

என்ற செய்யுள் மிக இன்சுவையுடைத்து. இதன்கருத்தாவது; நகரில் நான்குபேர் நாங்கள் தசரதாத்மஜர்களாகப் பிறந்தோம்; நான்கு புத்திரர்கள் பிறந்தவளவிலும் த்ருப்திபெறாத தயரதன் இன்னமும் புத்திரர்கள் வேண்டியே எங்களைக் காட்டுக்கனுப்பினன்; 'நீங்களிருவரும் காடு சென்று இன்னமுஞ் சில தம்பிமார்களைச் சம்பாதித்துக் கொண்டுவாருங்கள்' எனறே எங்களைக் கானகம் போகவிட்டனன்; அப்படியே நாங்கள் பல தம்பிகளைச் சம்பாதித்துக் கொண்டோம்; கங்கைக் கரையிலே குகனைத் தம்பியாகப் பெற்றோம்; பம்பைக் கரையிலே சுக்கிரீவனைத் தம்பியாகப் பெற்றோம்; விபீடணா! கடற் கரையிலே உன்னைத் தம்பியாகப் பெற்றோம். ஆக, நம் தந்தை எழு புத்திரர்களைப் பெற்றானாயினன்—என்பதாம்.

இங்ஙனம் கூறுகின்ற இராமன், குகனிடத்தும் சுக்கிரீவனிடத்தும் விபீடணனிடத்தும் கூடப்பிறந்த தம்பியினிடத்திற்போலத்தான் அன்பு பாராட்டுபவன் என்பதை யன்றோ வெளியிட்டானாகிறான். மேலும் இங்கு தசரதனை எந்தை யென்னாமல் உந்தை யென்றதும் உற்று நோக்கத்தக்கது. விபீஷணனது தந்தையாகவே யன்றோ தயரதன் கூறப்பட்டனன். இதனால், பெருமாள் விபீடணனிடத்துப் புரையறக் கலந்த தன்மை புலனாகும்.

ஆக விப்படி குகன் சுக்கிரீவன் விபீடணன் போல்வாரிடத்து ஒருநீராகக் கலந்து பழகும் பெருங்குணத்தை உன்னியே "க: குணவாந்?" என்று வினவப்பட்டது.

இங்கு ஒரு சிறிய சங்கை தோன்றக் கூடியதுண்டு; அதாவது — "ஹீநப்ரேஷ்யம் ஹீநஸக்க்யம் ஹீநகேஹ ந்ஷேவணம்" என்று உபபாதகங்களிலே படிக்கப்பட்டுள்ளது; நீசர்களுக்குப் பணிவிடை செய்வது, நீசர்களோடு தோழமை கொள்ளுவது, நீசர்களது மனைகளிலே சென்றிருப்பது ஆகியவிவை பாதகங்களாகச் சொல்லப்படாநிற்க, இவற்றைப் பெருமாள் செய்யலாமோ? செய்தவிது ஓர் ஏற்றமாகுமோ? என்று.

கேண்மின்; நம்மைப் போன்றவர்கள் இவை செய்தால் நிறக்கேடாம். உயர்ந்தாரில் ஒப்பற்ற பெருமாள் இவை செய்தால் அவருடைய பெருமை இன்னமும் பொலிந்து தோன்றுமத்தனை. பாண்டவதூதன், பார்த்தஸாரதி என்பனபோன்ற திருநாமங்களெல்லாம் அவருடைய பெருமையைக் குன்றிலிட்ட விளக்காக்குமவை யன்றோ?

# ஆத்ம சோதனை

★

கவியோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

(தொடர்ச்சி)

வேலுநாச்சியார் பெரியமருது சின்னமருது கதைகளை வெகு இனிமையாகச் சொன்னாள். எனக்குத் தேசாபிமானம் பிறந்தது. "நான் அன்னியரிடம் அடிமைவேலை செய்ய இங்கிலீஷ் ஏன் கற்க வேண்டும்? தமிழனான நான் தமிழே கற்பேன்..." என்ற உறுதியுடன் தாமரைக்குளத்திற்குச் சென்றேன். அதன் வனப்பும் தனிமையும் இயற்கையழகும் என்னை வசீகரித்தன. ஒவ்வொரு தாமரையும் புன்னகையுடன் என்னை வரவேற்றது. நான் நன்றாக நீந்திக்குளித்து, நெடுநேரம் தாமரைக்காட்சிகளிலும் பசுவயல்களிலும் சொக்கிநின்று வீடு திரும்பும்போது, தெய்வசிகாமணிப்புலவர் அங்கே தோன்றினார். "நமஸ்காரம்" என்றேன். அவர் "இங்கெங்கே வந்தாய் அம்பி?" என்று அன்பாகக் கேட்டார். "என்னை இங்கிலீஷ்பள்ளிக்கூடத்திற்கு அண்ணா இழுத்துச்செல்கிறான். தமிழனுக்குத் தமிழ் போதாதா? நான் ஓடிவந்துவிட்டேன்". என்றேன். "அப்படிச் சொல்லாதே தம்பி! நீ தமிழ் நன்றாகப்படி. காலத்திற்குத் தக்க கல்வி வேண்டும்...இங்கிலீஷ் படி" என்று உபதேசித்தார். "நானாக வீட்டில் படித்தாலென்ன? பள்ளிக்கூடத்திற்குப்போய் சம்பளமும் தந்து பிரம்படியும் வாங்குவானேன்?" என்றேன். "நன்றாகப்படித்தால் அடி விழாது, நீ வா; நான் உன்னைக் கவனித்துக்கொள்ளுகிறேன். தைரியமாயிரு." என்றார் புலவர். அவரிடம் எனக்கு அளவற்ற பக்தியுண்டு; ஆதலால் அண்ணா கெல்தா கொடுக்காமல், நானே பள்ளிக்கூடம் சென்றேன். ஆங்கிலப்படிப்பின் கதை பிறகு சொல்லுகிறேன். இப்போது என் வாழ்வில் வந்த மாறுதல்களைக் கேளுங்கள். மதுரைக்குச் செல்வோம்.

## 25. மதுரையில்

நந்தனுக்குத் தில்லை எப்படியோ அப்படி எனக்கு மதுரை. தாயார் அடிக்கடி மதுரை செல்வார். நானும் கூடப்போவேன். எதற்கு? காமாக்ஷியுடன் சென்று மீனாக்ஷியைக் காணவே. மதுரை மீனாக்ஷியம்மனையே என் உண்மைத் தாயாகக் கருதினேன். மாமா

வீட்டுக்குள் மூட்டைகளை இறக்கியதுமே, நேராக நான் கோயிலுக்கு ஓடுவேன். பொற்றாமரையில் குளிப்பேன். சூடன் வாங்கிக்கொண்டு நேரே மீனாக்ஷிசந்நிதிக்குள் புகுவேன். யாரும் இல்லாவிட்டால் கர்ப்பக்கிரகத்திற்குள்ளேயே சென்று "அம்மா பரதேவி! நான் உன் குழந்தை; ஓம் சுத்தசக்தி ஓம்" என்று தேவிபாதத்தை அணைந்து கொண்டு பரவசமாகி இன்பக்கண்ணீர் விட்டு நிற்பேன்... அந்தச் சைதன்யவிக்ரகமும் என்னுள்ளிருந்து "வா மகனே! கன்றுயிரு" என்பதுபோலிருக்கும். சூடனை நானே கொளுத்தி இந்தச் சூடச்சுடர் போல் நான் உன்னுடன் கலக்கவேண்டும் என்பேன். பிறகு அங்கிருக்கும் குங்குமத்தை எடுத்து இட்டுக்கொண்டு, வெளியே வந்து, வெளிமண்டபக் கிளிகளிடம் "மீனாக்ஷிமீனாக்ஷி! சொல்லுங்கள்" என்பேன். கிளிகள்" மீனாட்சி மீனாட்சி" என்று வழக்கப்படி கீச்சிடும். எனக்குப் பரமசந்தோஷமாயிருக்கும். "என் மனக்கூண்டிலிருந்து அந்தராத்மக்கிளி இப்படியே ஓம்சுத்தசக்தி நாமத்தைக்கூவுக" என்று வேண்டிக்கொண்டு, மறுபடி அம்மனைத் தரிசித்து, சுந்தரேசர் பிராகாரத்தைச் சுற்றி லிங்கதரிசனம் செய்தபிறகு, அங்கே இருள்மூலையில்உள்ள வன்னிமரத்தடியில் அமர்வேன். ஒருகாலம் அந்தமரம் தளிர்த்துச் செழித்துப் பூத்துக் கனித்தது. இப்போது விறகுக் கட்டைக்கே லாயக்கு. காலம் உலகை அப்படி மாற்றுகிறது. பிறந்தது முதிர்ந்து வளர்ந்து உலர்ந்து மடிந்து மண்ணாகும். நம் உடலும் அப்படித்தான். உள்ளபோதே நினைவும் செயலும் கடவுளன்பு கொண்டு, பிறவிப்பயனைப் பெறவேண்டும் என்ற எண்ணம் இயல்பாக உண்டாகும்.

அந்தக்காலம் கோயிலில் தேவாரதிருவாசகங்கள் முழங்கும். அன்பர் பாடுவர். பொற்றாமரைக்கரையில் திருவிளையாடல்புராணம் பெரியபுராணம் முதலியவை நடக்கும். இவை எனக்குச் சிறந்த செவிவிருந்தாகும். அருட்பாடல்களை ஆர்வமுடன் உள்ளுருகக் கேட்பேன். நினைவிலிருக்கும் அடிகளைத் திருப்பித்திருப்பிப் பாடிக் கொண்டே கோயிலைச் சுற்றுவேன். முடிவில் வன்னிமரத்தடியில் அமர்ந்து தியானிப்பேன். மதுரைப் பொன்னுச்சாமியின் நாதசுரம் கண்ணன்குழல்போல் என்உள்ளத்தை வசீகரிக்கும். அவனது கீரவாணியும் பைரவியும் தோடியும் இன்னும்என் செவிகளில்ஒலிக்கின்றன. நாதசுர அலைகள் எனது இசைப்பண்பைத் தூண்டிவிடும். நானும் காமாசோமா என்று பாட்டிழுப்பேன். பலராகங்களின் லட்சணம் எனக்கு இயல்பாகத்தெரிந்தது. மாமாவீட்டில் எத்தனையோ வைபவங்கள் உண்டு; துக்கங்களும் உண்டு. இரண்டிலும் கலந்துகொள்ளாமல் நான் அறிவும் அனுபவ உண்மையும் தேடித்திரிவேன். அந்தக்காலம் திருமலை என்ற ஊழியன் எங்கள் வீட்டில் இருந்தான். அவன் "மங்கம்மாள் காலத்தில் என் முன்னோர் பெரிய வேலையில் இருந்தார்கள்; வாள்பிடித்தார்கள். இன்று அவர்கள் சந்ததியான நான் உண்ண உடுக்க இப்படி அடிமைத் தொழில் செய்கிறேன்" என்பான். அவன் நாயக்கர்காலத்துக் கதைகளையெல்லாம் வெகு இனிமையாகச் சொல்லுவான். அந்த வீட்டில் பெரியமாமாவே என்னை அறிந்தவர். அவர் அன்புடன்

என்னை அருகே அமர்த்தி..."செல்லம்! நீ புக்கர்வாஷிங்டன்போல் நமது சமுதாயத்திற்கு உதவிசெய்யவேண்டும். ஆப்ரஹாம் லிங்கன்; ஃபாரடே, நியூடன், மாக்ஸ்வெல் போன்ற அரிய செயல்களைச் செய்யவேண்டும். எடிஸன் பத்திரிகைப்பையனாயிருந்து மின்சாரம் கற்று முன்னேறி இப்போது கிராமபோன்களும் மின்சாரவிளக்குகளும் செய்து கோடிச்வரனானன். அப்படி நீயும் நாட்டுக்குத் தொண்டு செய். பார், நமது நாடு வறுமையால் வருந்துகிறது. மடமையால் இருண்டுள்ளது. நல்ல கல்வியும் தொழிலும் எங்கும் வளரவேண்டும். பார். நான் இந்தவயதிலும் ஓயாமல் படிக்கிறேன். கிராமநிலத்தைக் கவனிக்கிறேன். நார்ப்பட்டு நெய்கிறேன். நீ நன்றாகப்படி, சிந்தி, நினைவை உயர்த்து. நினைவு உயர்ந்தால் வாழ்க்கை உயரும்." இந்தமாதிரி அவர் உபதேசித்துப் பல அரிய நூல்களின் கருத்தை விளக்குவார். "அதைத்துடை, இதை அடுக்கு; போ சந்தைக்கு; கொண்டா அதை" என்று என்னைச் சக்கையாக வேலை யேவுவார்.

## 26. பேயாட்டம்

இவற்றிற்கிடையே எனக்கு உலகவெறுப்பை உண்டுபண்ணிய நிகழ்ச்சிகள் பல. சிவகங்கை எனக்கு ஞானத்தை அளித்தது. மதுரை வைராக்கியத்தைத் தூண்டியது. சின்னமாமா பெரிய அந்தஸ்தில் நல்ல செல்வாக்கில் வாழ்ந்தார். எனினும் அவருக்கு அமைதி கிடையாது, மகிழ்ச்சி மருந்துக்கும் இல்லை. அவருக்கு ஒரே ஆறுதல் கிராமபோன். கிராமபோன் வைக்கும்போது என்னையும் அழைப்பார். நான் தாயி, பவானி, கோதாவரி. நாகரத்னம், தனகோடி, சண்முகவடிவு முதலியோர் பாடக்கேட்டு அவர்கள் குரல்களை அபிநயிப்பேன்: சில விகடத்தட்டுகளும் வைப்பார் மாமா "நீ இந்தமாதிரி விகடம் செய்வாயா" என்பார். "பாரும் நாளை" என்பேன். மறுநாள் என் கச்சேரி நடக்கும். நாய்குலைத்தல், பூனையின் மியாமியா, கிளிப்பேச்சு, ரயில்வண்டி, கப்பல், மட்டக்குதிரைஓட்டம், குடுகுடுப்பாண்டி, பெருமாள் மாடு—எல்லாம் அபிநயித்தபிறகு, பலர் நடையை அபிநயிப்பேன், குரல்களை அபிநயிப்பேன்; நடனமாடுவேன். மாமி-நாட்டுப்பெண் சண்டை, கணவன்மனைவி தர்க்கம், தலையணைமந்திரப்படலம்... எல்லாம் நடத்தி, முடிவில் அவர் பெண்போல் நடப்பேன், பேசுவேன்... பெண்களில் சிலர் சிரிப்பர்; சிலர் என்னைக்கரிப்பர்; பின்னவர்கள் முகம் எனக்குப் பயங்கரமாயிருக்கும். அவர்கள் அந்தக்கரணத்தில் பேயாடும்.

நான் மூன்றுவயதுக்குழந்தையாயிருந்தபோது,என்னைத் தூளி கட்டிப்போட்டு, அம்மாள் கோயிலுக்குச் சென்றாள். திரும்பிவந்தபோது, என் வாய்நிரம்பச் சுண்ணாம்பு...நல்லவேளையாகக் கண் தப்பியது. ஆளைத்தெரியும். சொல்லமுடியவில்லை. அம்மாள் பொறுமையாக என் வாயைக் கழுவி நெய்யைத் தடவினாள். என் வாய் தொண்டையெல்லாம் வெந்துபோயின. நீண்டகாலம் இதன்பயனால் நான் வாய்ப்புண்ணோடு வருந்தினேன். இப்படி எனக்குப் பல ஆபத்துக்கள் வந்ததுண்டு.

மாமாபெண்ணுக்குப் பேய்பிடித்ததாகப் புரளிபண்ணி, மந்திரவாதிகள் அட்டகாசம் செய்தனர். கோலம்போட்டுக்கும்பம்வைத்து, கூடத்தில் எல்லாரும் கூடி, பெண்தலையைவிரித்து உட்காரச்செய்தனர். மந்திரவாதி தேவுடுவையர் "ஓம் ரணசண்டி பத்ரகாளி மகா சாஸ்தா...பூதப்ரேதபிசாசவைரி... ஹம்படேஸ்வாஹா" என்று நீண்டநேரம் சண்டிமந்திரமும் ஹனுமார்மந்திரமும் சொல்லி, பயங்கரமாக விபூதி தூவுவார். பிறகு அவர் போடும் அரட்டில் பெண் தலைசுழலும்...உடனே உடுக்கடித்து "தலையை சுழற்றிச்சுழற்றி ஆடடிதல்லி"...என்று பாடுவார்கள். ஆட்டம்பாட்டங்கள் அமளிபடும். பேய் "ஹாஹூ" என்று அட்டகாசம் செய்யும். நீ எந்த மரத்துப்பேய்?...புளியமரத்துப்பேய்...என்னதந்தால் போவாய்?... புடவைரவிக்கை தந்தால்...இருநூறு முந்நூறு தந்தால் போவாயா?" என்று பேயைத் தூண்டிவிட்டு மந்திரவாதி வேண்டியதைக் கைப்பற்றிச் செல்வான். இரண்டுநாள் பெண் அமைதியாயிருப்பாள். மறுபடியும் பேய்வந்துவிடும். இதெல்லாம் எனக்கு முழுமூடப் பைத்தியமாகத் தோன்றும்.

என் பெரியண்ணு தமாஷ் பேர்வழி. சீர்திருத்தவாதி. அவன் எங்களையெல்லாம் பேயாடச்செய்வான். நான் பாடுவேன் ஆடுவேன் "நான் மாமரத்துப்பேய். நல்ல பெங்களூர் ஒட்டுமாம்பழம் தினம் ஒன்று தந்தால் போய்விடுகிறேன்" என்பேன். பேய் பிடித்த பெண் "எண்டா கட்டையிலே போறவனே! உன்னை என்ன செய்கிறேன்பார்" என்று சினந்து சீறுவாள். "சூ மூடப் பேயே! அச்சமில்லை" என்போம். பெரியமாமாவிடம் "மாமா! உங்கள் பிரம்பினல் இரண்டு அடிதந்தால் பேய் அலறி ஓடும்" என்பேன். "இதெல்லாம் மூடர் கூத்து; நீ அஞ்சாதே" என்பார்...இரண்டு நாட்கள் பட்டினி போடுக. இடம்மாற்றுக. நிம்மதியாயிருக்கச் செய்க. மனக்குறைகளை அறிந்து தீர்க்க; மாமியார், நாத்தனர் மாமனர் கணவன் முதலியோர் அன்பாயிருக்கச் செய்க. பொறுமைக்கு இடந்தாமல் பழகுக; பேய்வராது. மனப்பேயே பேய். மற்றொருபேயில்லை. உறுதி. இந்தப்பெண்ணின் கணவனும் ஒரு மாதிரி உம்மென்றிருப்பான். வாசலுக்கும் கொல்லைக்கும் தாண்டு கால்போட்டு நடப்பான். சும்மா ஸௌந்தர்ய லஹரியை ஒப்பிப்பான். அதனல் ஏதோ தவறுகி இப்படிப் பேய்பிடித்ததென்று மந்திரவாதிகள் அவனுக்கும் கோலம்போட்டு ஆட்டம் நடத்தினர். முன்பிறவியில் அவன் யாரையோ கொலைசெய்தானும்; அதனல் உம்மணமூஞ்சி பிடித்ததாம்...என்றூர்கள். வாண்டுப்பயலான நான் அவனுக்குப்பின்னல் தாண்டுகால் போடுவேன். "மாமா என்னுடன் பேசு" என்று கேட்பேன்; என்னை அவர் தனியாக அழைத்துச்சென்று, பிரியமாகப்பேசி, ஸௌந்தர்யலஹரி சொல்லி வைப்பார். அவர் தேவி உபாசகர். மணவாழ்வை அவர் விரும்பவேயில்லை. வாய்த்தமனைவியும் நொண்டி, வக்கிரம்...அதனுலேதான் அவர் யாருடனும் பேசாமல் அப்படியிருந்தார்.

* * * * * *

பெரியமாமாவின் முதல் பெண் செல்லம்மாள் புத்திசாலி. அவள் கணவன் ஒரு சமுஸ்கிரத வித்வான். திருப்புத்தூரில் வேலை.

அவன் ஞானி; ஒருபெண் பிறந்ததும் குருவைத்தேடி ஆத்மஞான சாதனம் செய்தான். அவன் எப்போதும் ஸத்குரோபாஹி என்று மேலேநோக்கிக் கும்பிடுவான். நான் அவனைக்காணும்போதெல்லாம் "ஸத்குரோபாஹி" என்று ஆகாசத்தைப்பார்ப்பேன். அவன் அடிக்கடி குருத்யானம் செய்வான். விவேகசூடாமணி படிப்பான். நான் அதைக் கேட்டுக்கொண்டிருப்பேன். மற்றவர்களும் மனைவியும் "ஐயையோ யாரோ இவர் மனதைக் கெடுத்துவிட்டார்கள்; பைத்தியம் பிடித்துவிட்டது" என்று கூச்சலிட்டுக் கண்டித்தனர். பலிக்கவில்லை. ஒருநாள் அவர் குருவுக்கு முறையிடும்போது, "போபைத்தியமே" என்று அடித்து விரட்டினர். "சத்குரோ பாஹி" என்று ஆள் தெருவில் ஓடினான்; நான் தூரத்திச்சென்றேன். மீனாக்ஷிகோயிலுக்குள் புகுந்தான். நானும் சென்றேன். பொற்றாமரைக்கரைக் கருகே "செல்லையா! இது பைத்திய உலகம். காமகாஞ்சனப்பித்தர் ஞானிகளை அவமதிக்கிறார்கள். நீ இந்த உலகை நம்பாதே. உனக்கும் சத்குருகடாக்ஷம் கிடைக்கும். பரமாத்மனைப் பக்திசெய்...போபோ.." என்று மறைந்தான். பிறகு ஆளைக்கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒருநாள் அவன் இறந்துபோனதாகத் தகவல் வந்தது. வீடெல்லாம் சோகக் காடானது. மங்கலமுகம் முட்டாக்குபோட்டு மூலை காத்தது. இவையெல்லாம் எனது வைராக்கியத்தைத் தீட்டிவிட்டன. "நீயும் இந்தமாதிரியெல்லாம் திரிகிறாய். உனக்கும் பைத்தியம் பிடிக்கப்போகிறது" என்று எச்சரித்தனர். பைத்தியம் பிடித்துவிட்டதாகவும் சிலர் அஞ்சினர். ஆம். எனது ஞானப் பைத்தியம் முதிர்ந்தேவந்தது. உலகநாடகத்தை இன்னும் தெளிவாகக் காட்ட, சாவின் காட்சிகள் புறப்பட்டன.

## 27. உடல் நிலையா ?

ஒருநாள் மாமாபெண்ணின் பிணத்தைக் கழுவிக்குளிப்பாட்டிக் கட்டையில் வைக்கக் கண்டேன். ஆயிரக்கணக்காகச் செலவிட்டுப் பார்த்தும் இந்தப் பெண் ஏன் இறந்தாள்? மணி மந்திர மருந்துகளும் உயிரை உடலில் பிடித்துவைக்க முடியவில்லையே...என்ற சிந்தனையை இந்தச்சாவு கிளறிவிட்டது. மனைவி, இறந்தபின் மாப்பிள்ளை நடைப்பிணமானான். அவனைத் தேடுவாரில்லை. அவனும் எங்கோபோய் மண்டையைப் போட்டான். உறவினர் அன்பும் சலுகையும் சுயநலம் என்பதை அறிந்தேன். மாமாவீட்டில் என்னுடன் எப்போதும் விளையாடும் பெண் சின்னி அவள் என் சின்னம்மா மீனாக்ஷி மகள். அவள் தந்தை அப்பாசாமி போலீஸ் இன்ஸ்பெக்டர். அவள் என்னைவிட இரண்டுவயது மூத்தவள்; என்றும் நான் சொன்னபடியே நடப்பாள். இருவருக்கும் கோயிலுக்குப்போவது, சாமிவிளையாடுவது, வீட்டில் நடக்கும் விசேஷங்களை கையாண்டி செய்வது இவையே வேலை. அம்மா எந்தப்பட்சணம் தந்தாலும் அவள் எனக்குத்தந்தே உண்பாள். பெண்மையின் அன்புரிமை முழுதையும் அவளிடம் கண்டேன். அத்தகைய இளந்திரு ஒருநாள் நோயுற்று இறந்தாள். "ஒருபாவமும் செய்யாத

இந்த இளங்கொழுந்து வாடி உதிர்வானேன்? இந்தப் பெண்உடல் இதோ. இதனுள் பேசியது எது? விளையாடினது எது? நான் எதை அன்பு செய்தேன், உடலையா? நான் விரும்பிய அவள் உள்ளத்தில் துடித்த உயிர் எங்கே?” என்ற ஆராய்ச்சியில் புகுந்தேன். “இரவுபகலாய் இதேவேலை...மண்டுமாதிரி சும்மா உட்கார்ந்திருக்கிறாய்” என்று இடியும் வாங்கினேன். கோயில் வன்னிமரத்தடியில் அமர்ந்து விவேகவிசாரம் செய்வதே எனக்கு இன்பமளித்தது. என்உடலும் நிலையில்லை. இதுவும் ஒருநாள் விழும். நான் என்பது உயிரில் கலந்த சுத்தான்மா...அதனாலேதான் நான் ஆடுவது, பாடுவது, நினைப்பது, சுவைப்பது, மொழிவது எல்லாம் என்றறிந்தேன். சின்னி சாவுக்குச் சின்னம்மா துடித்ததைக்கண்டு நானும் உளந்துடித்தேன்.

பங்காருப்பாட்டி இறந்தாள். அவள் சாவிற்கு யாரும் அழவில்லை. எல்லாரும் விளையாட்டாகச் சிரித்துக் குதித்தனர். நான் மற்றப்பேர்களுடன் நெய்ப்பந்தம் பிடித்துக்கொண்டே மயானத்திற்குச் சென்று அவள் உடல் சாம்பலானதைக் கண்டேன். புரோகிதர்கள் மந்திரம் சொல்லும்போதே சம்புடத்தை நிரப்பியதும், தட்சிணை தந்தபேர்வழி, பணத்தை ஒளித்து மடியை நிரப்பியதையும் கண்டேன். உலகின் கூத்தை அறிந்தேன். உடல் ஒன்றே. இளம்உடலானால் அழுதல், முதியஉடலானால் சிரித்தல்; இரண்டிலும் உயிர்ஒன்றே. கருமாதிகளில் வெறுத்துப்போனது.

எனது மற்றொரு சித்தி பாலாம்பாள்; அவள்கணவர் நோயாகி இறந்தார். அவர் வாடகைவீட்டில் வசித்தார். நோயால் அந்த உடல் துடிப்பதைக்கண்டேன். உயிர் போவதைக்கண்டேன். அருகேதான் இருந்தேன். அந்தச்சமயம் வைத்தியன் வந்து பணத்தைக் கறந்துபோனான். எமன் உயிரைக் கறந்து சென்றான். பத்தாநாள் மொட்டையடித்து முகவாசிபோட்டு, சின்னம்மாளை மூலையிலடைத்துப் பலகாரம் போட்டார்கள். ஆ! அந்த அழுகைக்காட்சி என்னைப்படுத்தியபாடு சொல்லிமுடியாது. ஒருவர் இறக்க அவர்மனைவிக்கு இந்தக்கோலமேன்? அந்தக்கோலம் சிலருக்கு மகிழ்ச்சியளித்ததுதான் விந்தை! போலிக்கண்ணீர் வடித்த ஒருத்தி “என் மனம் குளிர்ந்தது” என்பதைக்கேட்டுத் திடுக்கிட்டேன். பிறர் கெடக்கண்டு மகிழும் பிறவிகளை என்சொல்வது? சில ஆண்டுகளுக்குப்பிறகு பாலம்மாளின் சிறியபெண்ணுக்கு விவாகமானது...அதுவும் கணவனையிழந்து மூலைகாத்த கொடுமையைச் சகிக்க முடியவில்லை. நான்ஊரைச்சுற்றிச் சிலவீடுகளைப் பார்த்தேன்... துயரக்கோலங்களே கண்டேன். ஒரு செல்வக்காளை; மனைவியிருக்கிறாள் கிளிபோல. இந்தப் பாவி ஒரு விலைமகள் வலையில் சிக்கி, மனைவியைக் கொடுமை செய்தான். அவள் கண்ணீர் அவனை அழித்தது. கைமெலிந்து உடல் நலிந்து ஆள்மண்டையைப் போட்டான். அந்த இளம்பெண்ணை, ஐயோ மொட்டையடித்து மூலையிலடைத்தனர் உறவினர். “ஐயா! அந்த அயோக்கியப்பதர் இருக்கும்போதும், இவள் நரகவேதனைப்பட்டாள். அவன் ஒழிந்தும் நரகவேதனையா? ஏன் அவள் மறுமணம்புரிந்து வாழக்கூடாது?”

என்ற கேட்டதற்கு அவள் பெற்றோர் என்மேல் சீறிவிழுந்தனர். எனக்கு உலகம்துன்பச்சாக்காடாகத் தோன்றியது "உடல் இல்லயா? நாமும்ஒரு நாள் உடலை உதறிச் செல்லவேண்டியதுதானே..இருக்கு மட்டும் இறைவனிடமே நெஞ்சம் வைப்போம்" என்ற உறுதி யேவிட்டது. அதன் பயன் விபரீதமானது. நான் பள்ளிப்படிப் பைக் கவனிப்பதில்லை. வீட்டில் வசவு, பள்ளிக்கூடத்தில் பிரம்படி.

## 28. உள்ளே தேடு

சந்யாசித் தாத்தா காசியிலிருந்து வந்து மாமாதோட்டத்தில் அமர்ந்தார். நான் அவருக்குப்பணிவிடைசெய்தேன். அவர் எனக்கு ஹடயோக ஆசனங்கள் பிராணாயாமம் எல்லாம் கற்பித்தார். பிறகு தம்முடன் கண்ணைமூடிக்கொண்டு தியானிக்கச் சொன்னார். தியானத்திடையே வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நான் படும் பாடும் துயரும் வந்து தடைசெய்தன. துறவி என் உள்ளம் அறிந்து "ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்டார்.

நான்: சுவாமி! அப்பா கடுகடுக்கிறார்.

அவர்: இன்னோர் அப்பா இங்கே யிருக்கிறார்; அவர் கடுகடுக்க மாட்டார். அவரைத்தேடு.

நான்: சுவாமீ! அம்மா சினக்கிறாள்.

அவர்: இன்னோர் அம்மா இங்கே இருக்கிறாள்; அன்புமயம்; தேடு.

நான்: உபாத்யாயர் அடிக்கிறார். அவர்: இதோ இங்கே இருக் கிறார் உண்மையான உபாத்யாயர். தேடு; எல்லா அறிவும் தன்னால் வரும்.

நான்: எண்ணும் எழுத்தும் படிக்காமல் வருமா?

அவர்: இங்கே பரமாத்மா—பரிசுத்தமான வஸ்து உள்ளது; அதையே எண்ணு; அதுதான் எண்; அதை வழுத்து; எழுத்தும் சொல்லும் வரும். உனக்குக் கவிதை வரும்...

இந்த அரிய உபதேசத்தால் எனக்கும் பரமாத்மப் பைத்தியமே பிடித்துவிட்டது. அக்காலம் மீனாக்ஷிகோயில் பொற்றாமரைக்கரை யில் ஒருவர் மாணிக்கவாசகர் சரித்திரமும் திருவாசகமும் படித்துப் பொருள் விளக்கிக்கொண்டிருந்தார். கருத்துடன் கேட்டேன். குருந்தமரத்தடியில் குருமந்திரம் பெற்று அனைத்தையும் துறந்த மாணிவாசகர்போல் நானும் சிவகுருவை அறியத்துடித்தேன், பரதேசிக்கூட்டங்களிலெல்லாம் தேடித்திரிந்தேன். அப்போது சமயசஞ்ஜீவிபோல் ஒரு துறவியைக் கண்டேன். பொற்றாமரை யின்தென்மேற்குக்கரையில் ஒரு பிள்ளையாரும் அதன்பக்கத்தில் திருநீற்றுக்கலயமும் இருக்கும். அதனருகே ஒரு சாது பத்மா ஸனத்தில் ஊன்றி தியானித்தார். நான் அவரை வணங்கி அமர்ந்து கண்ணைமூடிக்கொண்டிருந்தேன். அன்று அம்பலத்தாடி கிராமத் திலிருந்து ஏராளமான மாங்கனிகள் வந்திருந்தன. நான் பாட்டி யிடம் கேட்டு, ஐந்தாறு கனிகளை எடுத்து ஒரு துண்டில் கட்டிக் கொண்டு வந்திருந்தேன். காலை அமர்ந்த சாது மாலை நான்கு மணிக்கே எழுந்தார். அதற்குள் நான் வீடுசென்று வயிற்றுக்

கடனையும் கழித்து வந்தேன். சாது கண்திறந்ததுமே மாங்கனிகளை முன்னே வைத்து, "சாமி சாப்பிடட்டும்." என்றேன். சாது புன்னகைத்தார். "கனிந்த உள்ளம் தந்த கனிந்த கனிகளை உண்போம் வா தம்பீ" என்று என்னை அந்திப்பொட்டல் பக்கம் அழைத்துச் சென்றார். தனியிடத்தில் கனியுண்டோம். குழாயில் கைகழுவி நீர் பருகினோம். பிறகு என்னை அவர் பேச்சியம்மன் கோயிலுக்கு அழைத்துச்சென்றார். அங்கே பெரிய ஆலமரம் உண்டு. அதன் அடியில் தனியாக அமர்ந்தோம்.

நான்: சுவாமீ! மாணிக்கவாசகர் போல் இருக்கமுடியுமா?

சாது: சிவனருள் இறங்கினால் இருக்கலாம். அவனருளாலே அவன் தாள் வணங்கி...என்கிறார் பெருமான்.

நான்: அவனருளை நானும் அடையமுடியுமா! எப்படி!

சாது: சேய்போலிரு; அருள் தாய்போல் வரும். நான் என்னாதே. அவன் எனச் சொல்; அருள் கூடும்.

நான்: சுவாமி! மேலே வானைப் பார்த்தால் அதனடியில் நிற்கும் நான் ஒரு தூசுபோலத்தோன்றுகிறது. பரிசுத்தமான விண்ணிலிருந்து காற்று, கதிர், மழை ஆகிய சக்திகள் வந்து உலகைக் காக்கின்றன. ஆதலால் நான் வானைப்பார்த்து ஓம் சுத்த சக்தி என்று கடவுளைக் கருதி வருகிறேன். சரிதானா?

சாது: ஓம் சுத்த சக்தி—சுத்தப்பிரமம், தூயசிவம், பராசக்தி இரண்டும் ஓங்காரத்தில் இணைந்த மந்திரம்....ஒருமையுடன் ஜபி. சுத்தசிவம் விஞ்ஞானகலருக்கு உள்ளிருந்து அருளும்.

நான்: சாமி! விஞ்ஞானகலர் என்றால்?

சாது: தம்பீ! மனமாயமற்ற சுத்தான்மநேயர்கள் இறைவனை நம்பி, அனைத்தையும் துறந்த பேரன்புச்சுடர்களே விஞ்ஞானகலர். அப்படியிரு தம்பீ...ஓம் சிவம்....மறுநாள் இத்துறவி பழநிக்குச் சென்றார். திருவருளில் உறுதிகொண்டேன். ஜபமும் தியானமும் தீவிரமாகச்செய்தேன். துறவித்தாத்தா என் வைராக்கியத்தைத் தூண்டிவிட்டார்.

---


## வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்வீக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
அணா. 6.
உருத்த இதயம்

# "நான்கு"

'நான்கு' என்ற இந்த மூன்று எழுத்துக்களாலாகிய சொல் 'நாலு' என்ற இரண்டெழுத்துச் சொல்லாக மருவி நம்மோடு அதிக பாந்தவ்பம் கொண்டாடி நமது வாழ்விலும் தாழ்விலும் பங்கெடுத்துக்கொண்டு நமது உரையாடல்களில் தாண்டவமாடுகிறது. ஆனால்,இது குறித்த எந்த எண்ணிக்கையையும் காட்டாமல் சமயத்திற்குத் தக்க அர்த்த புஷ்டியுடன் மிளிர்கின்றது என்பதை எத்தனை பேர் ஊன்றி கவனித்திருக்க முடியும்.

* * *

"என் மாமி! கட்டாத்தூர் மிட்டாதார்பிள்ளைக்கு உங்க கமலத்தைக் கொடுக்கக்கூடாதோ?" என்பாள் பக்கத்தகத்து பத்மா.

"இந்த காலத்தில் பெண்களெல்லாம் B. A., M. A., படிச்சிருக்கு. எங்க கமலம்கூட படித்திருக்காள். அப்படி இருக்க கமலத்திற்கு வரப்போரவனும் அவளாட்டமா ஒரு நாலு எழுத்தாவது படிச்சிருக்க வேண்டாமோ? இந்த பிள்ளைக்கு படிப்பே போராதாமே!" என்பாள் பெண்ணின் தாயார்.

பையன் நாலு எழுத்து கூடவா படித்திருக்கமாட்டான்? இந்த 'நாலுஎழுத்து' என்பதில் மாமியின் அகராதியில் எந்த வகுப்புவரை அடங்குமோ? B. A; M. A. வரைதானோ, அதற்கும் மேலோ?

* * *

"என்ன! இனிமே ரேஷன் அரிசியை ரொம்ப குறைச்சுடுவாளாமே. நாமெல்லாம் சோளச் சாதமா சாப்பிடணும்?"

கேசை வெற்றிகரமாக்கிக்கொண்டு, 'நாலு காசு' சம்பாதிக்க விரும்பி ஆணித்தரமான 'நாலு' 'லாபாயின்டு' களை அலசிக்கொண்டிருக்கும் வக்கிலான அந்த பதிதேவர் "அடபோ, நாலு பேருக்கு ஆகிறது நமக்கும் ஆகிறது. இதுக்கு பயந்தா ஆகுமா?" என்று கணீரென விடை பகருகிறார்.

* * *

'என் சாஸ்திரிகளே! அவாத்திலே என்ன தக்ஷிணை கொடுப்பான்னு தோணரது" என்று கல்யாணத் தரகரைக் கேட்கிறாள் பாட்டி. "என்ன? நாலுக்குக் கொரையாமெ கொடுப்பா' என்று சுருக்கமாக நான்கு வார்த்தைகளில் பதில் கொடுக்கிறார் தரகர்.

"எனக்கு அவா பணம் வந்து ஒண்ணும் ஆகவேண்டாம். பந்தல்லே நாலுபேருக்குக் கணிசமா சீர் செய்தா போரும்" என்கிறாள் சீர்களில் ஆசையுள்ள பிள்ளையின் தாய்.

* * *

அம்மா! காலேஜுக்குக் கட்டிண்டு போகிறதுக்கு 'பீட்டா' நாலு புடவை வாங்கிக் கொடுக்கணும்" என்று அம்மாவிடம் கொஞ்சுகிறாள் காலேஜ் குமாரி. அவள் கேட்பது நாலே நாலு புடவைதான் என்று எந்த தாயாவது கூற முடியுமா?

* * *

18355

"இந்த மானேஜரிடம் வேலை செய்வதைவிட நாலு வீட்டில் பிச்சைவாங்கிப்பிழைக்கலாம்" என்கிறார் கோபமுள்ள குமாஸ்தா. அவர் கோபத்தில் கூறுவதை நாம் பொருட்படுத்தலாமா?

* * *

"டெல்லியிலிருந்து 'லல்லு" வரச்சொல்லி எழுதியிருக்கா. ஒரு நாலு நாள் போய் இருந்துவிட்டு வரேனே." என்று மாமியாரிடம் கேட்பதுபோல் தன் எண்ணத்தைத் தீர்மானமாக வெளியிடும் பரதேவதை நாலே நாலு நாளில் திரும்பிவிடுவாளா? வரத்தான் முடியுமா? நாலுமாதத்திற்குள் திரும்பிவிட்டால் போதாதா?

* * *

"உங்காத்துக்கு வந்து என்ன சுகத்தைக் கண்டேன். நாலு சினிமாவுக்காவது கூட்டிண்டு போனேளோ?" என்று அழுத வண்ணம் சொல்கிறாள் சதி. அவள் கணவர் தைரியசாலியாக இருந்தால் நிச்சயம் தன்னுடன் அவள் பார்த்துள்ள ஒரு டஜன் சினிமாக்களின் பெயர்களைச் சொல்லக்கூடும்.

* * *

"நாலு கடைகளில் விற்கும் விலைதான் நம்ம கடை விலையிங்க" என்கிறான் மளிகைக் கடைக்காரன். ஆனால், அடுத்தகடையில் விலை விசாரித்தால் உடனே குட்டு வெளிப்படும்.

* * *

மேலே உள்ள ஒவ்வொரு 'நாலும்' எதைக் குறிக்கிறது என நீங்களே புரிந்துகொள்ளுங்கள்.

இப்படியே சொல்லிக் கொண்டுபோனால் நாலு பக்கத்திற்கு நீண்டுவிடும். நீங்களும் நாலு நிமிஷத்துக்குமேல் படிக்க மறுப்பீர்களோவென்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

---

## ஷஷ்டியப்த பூர்த்தி நினைவு மலர்

கண்ணைத் திறந்துவைப்பவன் ஆசாரியன். "சாஸ்திரத்திற்கு இரண்டு கண்களுண்டு—வடமொழி வேதம், தமிழ்மொழி ப்ரபந்தம்" என்றும், "தமிழின் இரண்டு கண்கள் திருவாய்மொழியும் திருக்குறளும்" என்றும் விளக்கி நம் ஞானக்கண்ணைத் திறந்துவைத்து, நமது ஆத்மாவின் நன்மைக்கு வழிகாட்டுபவன் ஆத்மஞானியான ஆசாரியன். ஸகல சாஸ்திரங்களின் பொருளையும் நன்கறிந்து, அதனை நம் உஜ்ஜீவனத்தின் பொருட்டு காலக்ஷேப மூலமாகவும், கிரந்த—வியாக்யானங்கள் மூலமாகவும் வெளியிட்டுத் தாமும் ஆத்மானந்தம் அடைந்துவரும் கீர்த்திமூர்த்தி ஸ்ரீ. ப்ர. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி நாளது விக்ருதி ஹூ பங்குனியில் வருகிறது. இடையேயுள்ள மாதங்கள் நிமிடங்களாக உருண்டோடிவிடும். ரஸிகர்களான ஆஸ்திகர்கள் இப்போது முதல் ஷ வைபவ நினைவு மலர் தயாரிப்பதில் ஈடுபட வேண்டும். தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ஆகிய நான்கு பாஷைகளிலும் விஷயதானங்கள் வெளியாகி கலையுலகைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும். தமிழ்ப் பகுதிக்கு நான் பொறுப்பேற்றுக்கொண்டு அன்பர்களின் ஒத்துழைப்பைக் கோருகிறேன். அதேபோல் இதர பகுதிகளுக்கும் ச்ரத்தையுடன் கூடிய அதிகாரிகள் ஏற்பட்டு, நமது லட்சியம் நிறைவேறுமாக! எல்லாம் அவனருள்! —வை. மு. ஸ்ரீ. (1-11-49)

---

# ஓர் குதூஹல ஈடுபாடு

கீதாரத்னம் ஸ்ரீ. நல்லப்பா ஜீயப்பங்கார், B. A.

ஸ்ரீ காஞ்சிபுரம் ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி உ. வே. மஹாவித்வான், உபன்யாஸகேஸரி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியிடம் அனேக வருஷங்களாக நெருங்கிப்பழகும் பாக்யத்தைப் பெற்றவர்களில் அடியேன் ஒருவன். இம்மாதிரியே தென்னாசார்ய ஸம்பிரதாயத்தையும் வடவாசார்ய ஸம்பிரதாயத்தையும் சேர்ந்த அனேக மஹான்களுடனும் நெருங்கிப்பழகும் பாக்யம் அடியேனுக்குண்டு. இந்த ஸ்வாமி எல்லா வித்வான்களுக்கும் மேல் உயர்ந்த சிகரமாய் விளங்குபவர் என்பதை வித்வான்களோடு பாமரர்களோடு வாசியற எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். "வேதம், உபநிஷத், இதிஹாஸபுராணங்கள், ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்கள், பூர்வாசார்யர்களின் ஸ்தோத்ராதி ஸகல ஸ்ரீஸூக்திகள், ரஹஸ்யங்கள், வியாக்யானங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து திரண்டு உருவெடுத்திருக்கும் ஓர் அபூர்வ வ்யக்தியல்லவோ இவர்" என்று (காலஞ்சென்ற) மயிலாபூர் ப்ரபல வக்கீல் ஸ்ரீ. உ. வே. கோபாலஸ்வாமி ஐயங்கார் அடிக்கடி அடியேனிடம் சொல்லிக் கொண்டாடுவது வழக்கம். அந்த வக்கீல் ஸ்வாமி *சைவம் கற்ருேம் சமணம் கற்ருேம் என்கிற கணக்கில், மேல்நாட்டுத் தத்வ விஷயமானுலும் சரி, நம்முடைய பரந்த ஹிந்து மத விஷயமானுலும் சரி, அவர் பார்த்திராத க்ரந்தமும் கிடையாது, கேட்டிராத வித்வானும் கிடையாது. அவரிடத்தில் சில நுண்ணிய விஷயங்களையறியச் சில பெரிய வித்வான்களும் நாடினதை அடியேன் கண்டிருக்கிறேன். அவர் மதராஸில் ஸ்ரீ ஸ்வாமியின் உபன்யாஸமென்ருல் அரை மணி முன்பாகவே சில நண்பர்களுடன் வந்து காத்துக்கொண்டிருப்பது வழக்கம். இவ்வளவு வ்ருத்தாப்யத்திலும் இந்த ச்ரம மேதுக்கென்று ஒரு நாள் தொண்டைமண்டல சபைவாசலில் அடியேன் ப்ரஸ்தாபித்தபோது "அடா, நீயும் என்ன இப்படிக்கேட்கிருயே? வியாசர், பராசரர், வால்மீகி முதலிய ரிஷிகளென்ன, பொய்கையார், பூதத்தார், பேயார், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களென்ன, ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், இராமானுஜர், பட்டர், நம்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் முதலிய நம் பூர்வாசார்யர்களென்ன, இவர்களில் ஒருவர்கூட விடாமல், எல்லாரும் புத்துயிர் பெற்றெழுந்து ஒன்றுகூடியல்லவோ ஓரிடத்தில்உபன்யஸிக்கிருர்கள்! விஷயமும் மிகச்சிறந்த விஷயமாயிருக்கிறது! ஒலிபரப்பும் கருவியும் தேவையில்லை! என்ருல் இதைக் கேட்க எத்தனையாயிரம் மைல்தான் வரக்கூடாது, எவ்வளவு காலம் முன்னடியாகத்தான் வந்து காத்துக்கொண்டிருக்கக்கூடாது; * பொலிக பொலிக பொலிகவென்று, நாம் மாத்திரமல்ல, ஆழ்வாரும் மங்களாசாஸனம் பண்ணவேண்டிய வ்யக்தி யல்லவோ இவர்! ஒரு விஞடியில் நம்மை இப்பூதவுடலிேைடயே நித்ய விபூதியிலல்லவோ கொண்டுவைத்து, அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாக விஷயங்களைப் பொழிந்து தாமும் அனுபவித்து நம்மையும் அனுபவிப்பிக்கிருர்; இப்படித் திரும்பினுல் ஓர் அபூர்வமான ப்ரமாணம், அப்படித் திரும்பினுல் ஓர் ஆச்சரியமான சாஸ்திரார்த்தம், இந்த விஞடி கல்மனதையும் உருக்கும் ஓர் அரிய ஐதிஹ்யம், அடுத்த விஞடி பாலர்களையும் சிரிப்பூட்டும் ஓர் அதிசயக்கதை: இப்படியே இரண்டு மணியானுலும் சரி நான்கு மணியானுலும் சரி, ப்ரமாணத்தின் மேல் ப்ரமாணமாய், சாஸ்திரார்த்தத்தின்மேல் சாஸ்திரார்த்தமாய், ஐதிஹ்

யங்கள்மேல்ஜதிஹ்யங்களாய், வாக்யார்த்தத்தின் மேல்வாக்யார்த்தமாய் ரஹஸ்யங்கள்மேல் ரஹஸ்யங்களாய், ஸ்வாபதேசத்தின்மேல் ஸ்வாபதேசமாய் ஒன்றின்மேல் ஒன்று அடித்துக்கொண்டு கங்கா ப்ரவாஹமாகக் கொட்டுகின்றனவே! பகவத் குணங்கள் இவரிடமிருந்து புதைபாணங்கள்போல் கிளம்பி மின்னல் வெடிகள் போலல்லவோ ப்ரகாசிக்கின்றன! நம் பூர்வாசார்யர்களின் அபூர்வ ஆத்மகுணங்கள் வைரங்கள் பூரிப்பது போலல்லவோ இவர் திருவாக்கிலிருந்து ஜ்வலிக்கின்றன; இவர் நமக்குப் பகவத் பாகவத குணங்களைத் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாக வர்ஷிக்க, நாம் அப்படியே ஸ்தம்பித்து, இதுவென்ன நாமிருப்பது வைகுந்த மாநகரோ, மன்னு வடமதுரையோ, திருக்குருகூர் திருப்புளியடியோ, திருவரங்கம் திருப்புன்னையின் கிழலோ வென்றென்று மோஹிக்கும்படியாகிவிடுகிறதே; இத்தகைய அனுபவம் நமக்கு எங்குக் கிடைக்கும்!" என்றார். பக்கத்திலிருந்த நான்கு ஐந்துபேர்களும் "ஆம், ஆம், ஒவ்வோர் வித்வானிடத்தில் ஒவ்வோர் குணம் ப்ரகாசிக்கும், இவரிடம் எல்லாக்குணங்களும் புஷ்கலங்கள்!" என்றார்கள். இது ஸ்ரீ ஸ்வாமியின் உபந்யாஸ சக்தியொன்றை அவர் கொண்டாடியபடி.

ஸ்ரீஸ்வாமியின் க்ரந்தங்கள் உலகறிந்தவை. இவை மலைபோல் வளர்ந்து நம் தேசமெங்கும் பரவியுள்ளவை. இவைகளே ஓர் மாபெரும் புத்தகசாலை யாகும். மிகச் சிறுபிராயத்திலேயே இவர் தம்முடைய திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையை வெளியிடத்தொடங்கி மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களின் திருவாக்கில் "செந்தமிழ்ச் செல்வர்" என்கிற விருதைப்பெற்றார். இருபது வயதிற்குமேல் வேதத்தையோதி முடித்து, சிறந்த கனபாடிகளும் பெரிய வித்வான்களும் ஆச்சரியப்படும்படியாக தம்முடைய வேதலக்ஷண விசார க்ரந்தங்களை வெளியிட்டார். காலதத்வம் தொடங்கினது முதல் எவராலும் சாதிக்கமுடியாமலிருந்த அரிய விஷயம் இது என்று (கீர்த்தி மூர்த்தியான) மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமியும் மற்றும் பலபெரிய வித்வான்களும் இதைக்கொண்டாடியுள்ளார்கள். இது போன்றவை இவருடைய ஸம்ஸ்க்ருத பாண்டித்யத்தையும் ஆராய்ச்சி வல்லமையையும் நன்கு விளக்கும். வ்யாஸபராசரர்கள்கூட இத்தகைய பணியைச் செய்யக் கனவிலும் எதிர்பார்த்திரார்கள்!

ஸ்ரீ ஸ்வாமியாற்றிய மற்றோர் அரியபெரிய பணி இவருடைய பதிப்பான க்ரந்தமாலைகள். ஸ்ரீ ராமானுஜர், நம்பிள்ளை, வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் என்கிற இந்த நான்கு பேராசிரியர்களின் ஸகல க்ரந்தங்களையும் பரிசோதித்து வெகுநேர்த்தியாக ஓர்கோவையாக ப்ரசுரித்து இந்த நான்கு மஹாசாரியர்களுக்கும் இதுவரையில் எவரும் இட்டிராத மாலைகளை இவரிட்டு உலகுக்கெல்லாம் ஓர் மஹோபகாரத்தைச் செய்துள்ளார். இப்படியே ஸ்ரீஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் இயற்றியிருக்கும், இயற்றிக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான க்ரந்தங்களையும் இவர் ஆற்றிவரும் நினைத்தற்கரிய மற்றபெரிய பணிகளையும் புத்தகம் புத்தகமாக விவரித்துக்கொண்டே போகலாம். இவைகளைத் திருவல்லிக்கேணி பண்டித ஸ்ரீ. உ. வே. அ. மு. ஸ்ரீனிவாஸாசாரியரியற்றிய "ஆசார்ய வைபவ த்விசதீ" என்னும் நூலில் சுருக்கமாகக்காணலாமாகையால்ஸ்ரீஸ்வாமியிடம் அடியேன் கண்டு கொண்டாடும் சில வைபவங்களை இங்கு விவரிக்க விரும்புகின்றேன்.

ஸ்ரீ ராமானுஜர், நம்பிள்ளை, வேதாந்ததேசிகர், மணவாள மாமுனிகள் போன்ற மஹாசார்யர்கள் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் நுண்ணிய உண்மைகளை விளங்கச்செய்தற்பொருட்டு இயற்றிய அபரிமிதமான

சிறந்த க்ரந்தங்களையும் அவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைத் தேசமெங்கும் பரவச்செய்ய ஆற்றிய அரியபெரிய பணிகளையும் நோக்கும்போது ஒரு புருஷாயுஸ்ஸில் இவைகளை இவர்கள் சாதித்திருக்கக் கூடுமாவென்கிற சந்தேகம் நம்போல்வார்க்கு உதிக்கக்கூடும்; ஸ்ரீஸ்வாமி தோன்றி நமது கண்முன் சாதித்துக்கொண்டிருக்கும் அளவுகடந்த ஆச்சரியமான பணிகளைப் பார்க்கும்போது இத்தகைய சந்தேகம் கிளம்புவதற்கு நியாயமேயில்லை என்று ஆப்தர்களுடன் அடிக்கடி அடியேன் கொண்டாடி மகிழ்வதுண்டு. ஸ்வாமியின் குடும்ப யோகக்ஷேமங்கள் எப்படி நடக்கின்றனவென்பது ஸ்வாமிக்கு இளமைதொடங்கியே தெரியாது. ஸ்வாமி ப்ரசுரிக்கும் நூற்றுக்கணக்கான அரிய க்ரந்தங்களுக்கும் ஸ்வாமி ஆற்றிவரும் நூற்றுக்கணக்கான பெரிய பணிகளுக்கும் திரவியம் எங்கிருந்து எப்படிவரும் என்பது ஸ்வாமிக்கும் தெரியாது. "தேஹிமே ததாமிதே" என்கிற முறையில் ஒரு அணுகூட எவரிடமும் ஸ்வாமி அபேக்ஷித்ததை அடியேன் போல்வார் கண்டதில்லை. ஆனால் அச்சிடும் க்ரந்தங்களோ மலைபோல் குவிகின்றன! ஆற்றிவரும் பணிகளோ பெருக்காறுகள்போல் பாய்ந்து தேசமெங்கும் பரவுகின்றன !!

ஸ்ரீ ஸ்வாமி க்ரந்தம் எழுதும்போது சில சமயங்களில் அடியேன் நெருங்கியிருக்க நேர்படுவதுண்டு. பேனாவை எடுப்பதுதான் தாமதம், மணிக்கு முப்பது நாற்பது பக்கங்கள் கீழே நழுவிக்கொண்டேயிருக்கும்! தம்மைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் போர்போராக அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் ஒன்றையாவது எதற்காவது எடுத்துப்பார்க்கவேண்டும் என்கிற அவசியமேயிராது. அவைகளை எந்தவயதில் எப்போது பார்த்திருப்பர் என்பதும் பால்யம்முதல் இவருடன்கூடவே பழகிவரும் அந்தரங்கர்களுக்கும் தெரியாது. இவருடைய ஞாபகசக்தி கூரத்தாழ்வானையே நமக்கு நினைவூட்டும். எழுதியதை மறுபடியும் திருத்துவது என்பதும் ஸ்வாமியிடம்கிடையாது. எழுதியவுடனே கற்றைகற்றையாக மடித்து அப்படியே அச்சாபீசுக்கு அனுப்பிவிடுவர். அவைகளில் ஒருவரியிலாவது ஒருகுறில் நெடில்கூட விடுபட்டிராது. ஓரிடத்திலும் ஓரெழுத்தும் அடிபட்டுமிராது. ஸ்வாமி அச்சுப்பிழைகளைத்திருத்தும் (Proof Correction) தன்மையை நாம் காசுகொடுத்துப் பார்க்கவேண்டும். சாதாரணமாக எல்லாரும் ஆரம்பம் முதல் வரிவரியாக வல்லவோ பிழைகளைக்கண்டு திருத்துவது வழக்கம். ஸ்வாமியிடம் இந்த ரீதிகிடையாது. பிழைகள் ஸ்வாமிகண்முன் 'என்னைக்கொள், என்னைக்கொள்' என்று கீழது மேலாகவும் மேலது கீழாகவும் தோன்றி ஒரு நொடிப்பொழுதில் ஒன்றுகூட விடாமல் அடிபட்டுப்போவது வழக்கம். இத்தகைய சக்தியில்லாவிடில் இவருடைய பெரியபெரிய க்ரந்தமாலைகளானவை, இவர் இயற்றிவரும் மற்ற நூற்றுக்கணக்கான க்ரந்தங்களின் நடுவிலும், இவர் தேசமெங்கும் அடிக்கடி சுற்றிச் செய்துவரும் உபன்யாஸங்களின் மத்தியிலும், இவர் ஆற்றிவரும் மற்ற அனேகபணிகளின் இடையிலும் எப்படி இரண்டு மூன்று வருஷங்களுக்குள் வெளியாகி ஸ்ரீவைஷ்ணவவுலகம் குதூஹலிக்க முடியும்?

ஸ்ரீஸ்வாமியிடம் அடியேன் கண்ட மற்றோர் அதிசயத்தையும் இங்குப் ப்ரஸ்தாபிக்கிறேன். இவருக்கு ஞானாசாரியராகவிருந்த உலகம் நிறைந்த புகழாளரான ஜகத்குரு ஸ்ரீ அனந்தாசாரிய ஸ்வாமியிடம் தற்காலத்திய ஆரோக்ய சாஸ்திரத்திற்கனுகுணமாய்ச் சில கடுமையான ஆஹார நியதிகளும் உயர்ந்த தேஹாப்யாஸ முறைகளும் இருந்தன. இவரிடமோ, ப்ராதக்கால அனுட்டானம் த்வாதச ஊர்த்வபுண்ட்ர தாரணம் முதலிய நம் பூருவர்களின் ஆசாரங்களைத் தவிர, நவீனமுறையில்

ஆரோக்யத்தைக் காக்கும்படியான (பானாதிகள் என்று சொல்லக் கூடியவை உள்பட) எவ்வித பழக்கவழக்கமும் புகுந்ததில்லை. தமது சொந்த க்ருஹத்திலே யானாலும் சரி, வேறு இடங்களிலே யானாலும் சரி, அவ்வப்போது அகப்பட்டதை ஸ்வீகரித்துத் தமது அரிய பெரிய பணிகளைச் செய்துவருவர். மேல்நாட்டில் ஆரோக்யத்திற்கு அத்யாவச்யகமென்று நவீனசாஸ்திர ஆராய்ச்சியைக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஜீவசத்துக்கொள்கைகளும் (Vitamin Theories) கலப்பு உணவு முறைகளும் (Methods of Mixed or Balanced Diet) இவரிடத்திலென்ன வாயினவென்று வைத்திய நிபுணர்கள் ஆச்சரிப்படத்தான் வேண்டும். ப்ராசீனமாக நமது குடும்பங்களில் ஏற்பட்டிருக்கும் வாராவார எண்ணெய் ஸ்நானம், மாதா மாத விரேசனம் முதலிய ஸர்வ சாதாரண ஆரோக்ய முறைகளும் இவரிடம் கிடையாது. இவைகளைப்பற்றி அடியேன் ஒருகால் இவரிடம் வற்புறுத்தியபோது "தொட்டில் பிராயத்தில் தாயார் ஏதாவது விளக்கெண்ணெய் முதலியது கொடுத்திருந்தால் இருக்கலாம், பிறகு இவை ஏற்பட இடமில்லையே" என்று அடியேனுக்கும் இடந்தரவில்லை. *உண்ணும்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் நம் கண்ணனாயும் நம்மாழ்வாராயும் நம்பிள்ளையாயும் நம் ஸ்வாமிக்கு க்ரமேண இருக்கும்போது இவையெல்லாம் எதற்கு!

பொன்னுருகக் காயும் வெய்யிலாயிருந்தாலும் மண்ணுருகப் பெய்யும் மழையாயிருந்தாலும் எம்பெருமானின் திருவீதிப்புறப்பாடுகளில் கோஷ்டியலங்கரிப்பதை இவர்விட்டகலகில்லார். ஸ்ரீ ஸ்வாமியில்லாத கோஷ்டியும் இவர்சேராத பாராயண அனுஸந்தானங்களும் கோயிலில்லா ஊராயும் நீறில்லா நெற்றியாயுமே இருக்கும் என்பது காஞ்சீநகர வாசிகளான எல்லோருடையவும் அனுபவம்.

ஒருநாள் மாலை 8 மணிக்கு [தேவப்பெருமாளின் பல்லவோத்ஸவ காலமென்று ஞாபகம்] ஒரு ஸ்வாமி ஓடிவந்து "ஸ்ரீ ஸ்வாமிக்கு ஜுரம் போல் தெரிகிறது, திருவடி கோயிலுக்கு, அதாவது இயல் கோஷ்டி தொடங்குமிடத்திற்கு வண்டியில் எழுந்தருளிக்கொண்டிருக்கிறார்; கொஞ்சம் தர்மாமீடரை எடுத்துக்கொண்டுவந்து ஜுரம் எவ்வளவென்று பார்க்கவேணும்" என்று அழைத்தார். அடியேன் போவதற்குள் வண்டி திருவடி கோயில்சென்று சேர்ந்துவிட்டது. அருகாமையிலுள்ள ஒருவீட்டுத் திண்ணையில் ஸ்வாமி சயனித்துக்கொண்டிருந்தார். தர்மாமீடரைக் கையின் கீழ் வைத்தெடுத்ததும் அடியேனைத் தூக்கிவாரிப்போட்டது. டிக்ரி 106! இன்னும் ½ அல்லது 1 டிக்ரி ஏறினால், வைத்திய சாஸ்திரத்தின்படி, மூளை கொதித்து ரத்தக்குழாய்கள் வெடிக்க ஆரம்பிக்கவேண்டும். ஸ்வாமிக்கு ஞாபகம் இருப்பதும் இராததுமான நிலை. இத்தருவாயிலும் ஸ்வாமிக்குக் கோஷ்டியில் அன்வயிக்கும் அவா விட்டபாடில்லை. தம்மையுமறியாமல் தேஹம் கிளம்புகிறது, திருவடிகள் நடக்க முயல்கின்றன. ஆனாலும் ஐந்தாறு பேர்களின் உதவியைக்கொண்டு ஸ்வாமியைக் கட்டியணைத்து மறுபடியும் வண்டியேற்றி க்ருஹத்திற்குக் கொண்டு சேர்த்தோம். மறுநாள் மதராஸில் நடக்கவேண்டியிருந்த உபன்யாஸத்தை நிறுத்தத் தந்திகொடுக்கப்பட்டது. சிரஸில் ஐஸ் வைத்துக்கட்டி தகுந்த மருந்துகளையும் கொடுத்து ஜுரம் 104க்கு இறங்கியபின், அடியேன் குடிசைக்கு விடைகொண்டேன். அப்போது இரவு மணி 12. மறுநாட்காலை ஸ்வாமியின் தேஹம் எப்படியிருக்கிறதோவென்று மிகுந்த விசாரமுடன் ஸ்வாமியின் திருமாளிகைக்குள் நுழைந்ததும் அங்கிருந்தவர்கள் "ஸ்வாமி மதராஸ் எழுந்தருளியாச்சு" என்று சொன்னதை நம்பமுடியவில்லை. ஸ்வாமி விஷயத்தில் வைத்திய சாஸ்திரம் தவிடுபொடியென்று சொல்லிக்கொண்டே அடியேன் குடிசைக்

குத் திரும்பினேன். இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் ஸ்வாமி என்ன எம்பெருமானின் சக்தி விசேஷமோ, ஆழ்வாரின் ஆவேசமோ, எம்பெருமானாரின் தவப்பயனோ, நம்பிள்ளையின் புனரவதாரமோ என்கிற எண்ணங்கள் மனதில் வலிதாகக் கிளம்பும். கதாசித் ஸ்வாமிக்குத் திருமேனி பாங்கில்லை என்பார்கள்; ஆனால் ஸ்வாமி முப்பது வருஷகாலமாக ஸ்ரீ காஞ்சியில் நித்திய க்ருத்யமாக நிர்வஹித்துவரும் ப்ராதக்கால ப்ரதக்ஷிண வேத கோஷ்டியிலிருந்து அன்றை மறுநாட்காலையே ஸ்வாமியின் கம்பீரமான கண்டத்வனி, யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதைப்போல், இரண்டு பர்லாங்குக்குமுன் வீடுருவிச்சென்று அங்கு உறங்குகிறவர்களைக் கிளப்பும்.

ஸ்ரீ ஸ்வாமியின் பகவத் விஷய காலக்ஷேப நிர்வாஹமோ வாசாமகோசரம். இவருக்கு முன் சில வித்வான்கள் "பகவத் விஷயம்" என்கிற விருதைத் தங்கள் பெயர்கள்முன் கூட்டிக்கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டொருவரிடம் அடியேன் அனேக பாசுரார்த்தங்களைக் கேட்டதுண்டு. அவர்கள் ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் இரண்டொரு நாட்களாவது அன்வயிக்கப்பெற்றிருந்தால், அருளாளப்பெருமாளெம்பெருமானார் எம்பெருமானாரிடம் ஈடுபட்டதுபோலவும், நஞ்சீயர் பட்டரிடம் ஈடுபட்டதுபோலவும் ஸ்வாமியிடம் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். விஷயமோ பகவத்விஷயம்; பாசுரங்களோ பராங்குசருடையவை; "ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம்", "த்ராவிட வேதஸாகரம்" என்கிற ப்ரஸித்தியைப் பெற்றவை; இதற்கு வியாக்கியானம் சாதித்தவரோ ஸகல கலாவல்லபரான நம்பிள்ளை; இதைப் பட்டோலை கொண்டருளிய காலமோ 600 வருஷங்களுக்கு முற்பட்டது; இதில் அரும்பதஉரைகாரர்களென்று கீர்த்திபெற்றவர்கள்கூட அனேக விடங்களில் இடம்வலம் தெரியாமல் திகைத்திருக்கிறார்கள். இத்தகைய ரத்னாகரத்திற்குள் ஸ்ரீ ஸ்வாமி நம்மை அழைத்துச்சென்று, "இதோ பாருங்கள், இது முத்து, இது கெம்பு, இது பச்சை, இது நீலம், இதுஒரு சிறந்த கோமேதகம், இது ஓர் உயர்ந்த வைடூர்யம், இது ஒரு விலையில்லா மாணிக்கம், இதோ பாருங்கள் ஒரு ஆயிரம்கோட் வைரம்; இன்னமும் பாருங்கள், இதன்பெயர் 'முத்துக் கெம்பு!', இது 'கெம்புப் பச்சை!', இது 'பச்சைநீலம்!', இது 'நீலகோமேதகம்!', இது 'கோமேதக வைடூர்ய வைரம்!', இதைப்பார்த்தீர்களா? இது ஸ்ரீ கௌஸ்துபத்திற்குச் சமானமான ஓர் 'கெம்பு நீலரத்ன வைரமணி!'; அதோ அந்த ஆச்சரியத்தைப் பாருங்கள் 'நீரிலே நெருப்பு!' அதன்பக்கத்திலேயே பாருங்கள் 'நெருப்பிலே நீர்!' என்றென்று, அன்று அர்ஜுனனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணன் காட்டிய விச்வரூபத்தைப்போல், பகவத் பாகவதகுணங்களைத் தம்முடைய நிரங்குச ஞானஒளியைக்கொண்டு வீசியும், நிகரற்ற மிகக் கூர்மையான ஆராய்ச்சிவல்லமையைச் செலுத்தியும், நாமெல்லாம் மயிர்க்கூச்செறிவுடன் ஆனந்தப்பட்டும், *நினைந்து நைந்து உள் கரைந்துருகியும் ஈடுபடும்படி ப்ரகாசிப்பித்து நம்மைக் குதூஹலப் படுத்துகிறார்.

ரூபாய் ஐம்பதும் நூறுமான டிக்கெட் வாங்கிக் கேட்கவேண்டிய சில சிறந்த கோகிலகான சங்கீதக் கச்சேரிகளையும் அடியேன் கேட்டதுண்டு; உலகிற் சிறந்த சிலபெரிய ஸர்க்கஸ், ஜாலவித்தை, எக்ஸிபிஷன் முதலிய அற்புதக் கண்காட்சிகளையும் கண்டதுண்டு. உலகப்ரஸித்தமான சில அரிய சொற்பொழிவுகளையும் ஆங்கிலத்தில் கேட்டதுண்டு. சமீபகாலத்தில் உலகிலேயே முதல்தரமான பேசும்படம் என்று அனேக தங்க மெடல்கள் அளிக்கப்பெற்ற ஷேக்ஸ்பியரின் 'ஆமலதன்' (Hamlet) உள்பட சில உயர்ந்த ஸினிமாக்களையும் பார்த்ததுண்டு. ஆனால் இவை ஒன்றி

லும் நம் ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில் உண்டாகுமனுபவங்களில் பதினாயிரத்தில் ஒருபங்குகூட உண்டாகாதென்று திண்ணமாய் ஆணையிட்டுச் சொல்வேன். "பக்தாம்ருதம்", "விச்வஜனானுமோதனம்" என்று வித்யஸூரிகளும், இன்னும் அப்படியே ஸர்வேச்வரனும் மண்டி ஈடுபடும் படியல்லவோ நம் சடகோபரின் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளின் அர்த்த விசேஷங்களை நமது பூர்வாசார்யர்கள், ஸ்திரீ பாலர்களும் ஈடுபடும்படி, ஸகல சுவைகளையும் வெகு அற்புதமாக அமைத்தல்லவோ நமக்குக் காட்டியுள்ளனர். இவைகளில் தலைசிறந்ததல்லவோ நம்பிள்ளையின் "ஈடு"; இதன் ஆழ்பொருள்களை நம் ஸ்வாமியிடத்திலல்லவோ நாம்கேட்டு, ஈடுபட்டு ஆனந்திக்கவேண்டும். இந்த மாபெரும்பாக்யத்தை அடியேன்போல்வார் ★ காஞ்சிபுரத்தில் நம்பிள்ளை ஸந்நிதியில் தினப்படியாக அனுபவித்துவர ப்ராப்தமாயிருப்பதுதான் இந்த குதூகல ஈடுபாட்டுக்கு மூலகாரணமாயமைந்தது.

ஸ்ரீ ஸ்வாமியின் பகவத்விஷய காலக்ஷேபத்தில், ஒவ்வோரிடத்தில் "இத்தகைய வியாக்யானம் நம்பிள்ளையைத்தவிர வேறு எவராலும் சாதித்திருக்கமுடியாது" என்கிற உணர்ச்சியும் "இதை ஸ்ரீ ஸ்வாமியைத் தவிர வேறு எவராலும் அறிந்து இப்படிப் பாமரர்க்கும் நன்றாகப் புரியுமாறு விளக்கமுடியாது" என்கிற மகிழ்ச்சியும், பெரிய வித்வான்களுக்கும், வாய்வெருவும்படி உண்டாவது ப்ரதிதின அனுபவம். ஸகல சாஸ்திரங்களிலேயும் ஸ்ரீ ஸ்வாமிக்கிருக்கும் ஞானம் ஒருவிதத்திலேயும் நம்பிள்ளையின் ஞானத்தைவிடக் குறைந்ததன்று என்கிற உணர்ச்சியும் அநேக தடவைகளில் உண்டாகும். அடியேன் முதலில் ப்ரஸ்தாபித்த மயிலாபூர் ஸ்ரீ. உ. வே. கோபாலஸ்வாமி ஐயங்கார் சொல்லியபடி வேதம், உபநிஷத், இதிஹாஸபுராணங்கள், திவ்யப்ரபந்தங்கள், ஸ்தோத்திரபாடங்கள், ரஹஸ்யங்கள் இவை யெல்லாவற்றிற்கும் நம் பூர்வாசார்யர்களிட்டிருக்கும் அற்புத வியாக்யானங்கள் இவையெல்லாவற்றையும் கரைத்துக்குடித்து, கூரத்தாழ்வானுடைய ஞாபகசக்தியும் வாய்க்கப்பெற்று, தர்க்க வியாகரண மீமாம்சை முதலிய ஸகல சாஸ்திரங்களிலேயும், காவிய நாடகாதி ஸகல ஸாஹித்யங்களிலேயும் பரிபூர்ண பாண்டித்யமும் பெற்றிருந்தாலொழிய பகவத் விஷய காலக்ஷேபத்தைக் குறைவற நிர்வஹிக்க முடியாது. இவைகளில் ஒன்று குறைந்திருந்தாலும் இந்த காலக்ஷேபத்திற்குச் சோபை குன்றியே தீரும். இவையெல்லாம் ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் புஷ்கலங்களாய் இருப்பதைப்போல் வேறு எந்த வித்வானிடத்தில் காணமுடியும்?

ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கொருமுறை அவதரிக்கும் மஹாசாரிய கோஷ்டியைச்சேர்ந்தவர் நம் ஸ்வாமி. இவருடைய காலத்தில் நாம் பிறந்திருந்து இவருடைய க்ருபா கடாக்ஷத்திற்கும் இலக்காயிருப்பது பெறுதற்கரிய பாக்யமே. நாம் உடையவர் காலத்தில் பிறந்திருக்கவில்லையே!, நம்பிள்ளையின் கோஷ்டியில் அன்வயிக்கக் கொடுத்துவைத்திருக்கவில்லையே! என்கிற இழவுதீர எம்பெருமான் ஸ்ரீ ஸ்வாமியை நமக்கு அனுக்ரஹித்திருக்கிறான். இப்படியே இவர்தம் அளவிலாப் பெருமைகளுடனும், குறையிலாச் சிஷ்யவர்க்கங்களுடனும் இவ்விபூதியில் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருந்து, உலகம் உய்ய, நாம் உய்ய, பக்த பரம்பரைகள் உய்ய, தம்முடைய பணிகளை மேன்மேலும் பெருக்கிக்கொண்டிருக்குமாறு அனுக்ரஹிக்க எம்பெருமானை ப்ரார்த்தித்து அடியேனுடைய இச்சிறிய குதூஹல ஈடுபாட்டிற்குத் தற்சமயம் முற்றுப்புள்ளி கொடுக்கிறேன்.

---

★ டாக்டர் ஜீயப்பங்கார் ஸ்ரீ காஞ்சி யதோக்தகாரி ஸன்னிதி தர்மகர்த்தா.

# வனிதா மண்டலம்

## மஞ்சள் குங்குமம்

வஸுமதி ராமஸ்வாமி

வாவா கலா! கங்காஸ்நானம் ஆச்சா? தீபாவளிக்குப் பிறகு இன்று தான் வந்திருக்கிறாய்; ஸௌக்கியம்தானே?.

ஆம், மாமி! ஸௌக்கியமாயிருக்கிறேன். இன்று பார்வதி, கமலா எல்லோரையும் வரச்சொல்லி இருக்கிறேன். வரவர அசட்டுக்கு அறுபது நாழிகையும் காரியம் என்பது சரியாயிருக்கிறது. நம்முடைய சந்திப்பே அபூர்வமாய்விட்டது. அதோ கமலா, பார்வதி வந்து விட்டார்களே!

தீபாவளிக்கு எல்லோரும் என்னென்ன புடவைகள் வாங்கிக் கொண்டீர்கள்?

நீங்கள் கேட்பீர்களென்று அதையே உடுத்திக்கொண்டு வந்து விட்டேன். தீபாவளி தேசிய விழாவல்லவா? அதற்கு மட்டுமாவது கதர் உடுத்திக்கொள்ளலாமென்று நான் கதர்புடவையேதான் வாங்கிக்கொண்டு விட்டேன்... நீ என்ன புடவை வாங்கினாய் கமலா?

நான் ஆர்ட் ஸில்க் ஒன்று முழங்குகிறதே அதைத்தான் வாங்கிக் கொண்டேன்; அநேகர் அதைத்தான் வாங்கி இருக்கிறார்கள். விலையும் சரஸம். நிறமும் விதவிதமாக அழகாய் இருக்கிறது. கோபிகா ஸ்திரீகள் குளத்தில் நிற்பதுபோலும் கண்ணன் மரத்தில் உட்கார்ந்து புல்லாங் குழல் வாசிப்பதுபோலும் ஒரு பழைய படம் உண்டு. அந்த மரத்தில் விதவிதமான புடவைகள் தொங்கும். அம்மாதிரி அநேக ரகங்கள் இந்த புடவைக் கடைகளில் தொங்குகின்றன. உடுக்கமட்டும் கஷ்டம்தான், கொஞ்சம் கனம்.

'புடவை சமாசாரம் இருக்கட்டும். சர்க்கரைக்கு என்ன செய் தீர்கள்? எனக்கு சிற்றுண்டிகள் ஒன்றுமே செய்யமுடியவில்லை. வெல்லத்தைப் போட்டு சில வகைகள் தயாரித்தேன்'' என்றாள் சாவித்திரி அம்மாமி.

"எனக்கு ஒரு புடவையும் பிடிக்கவில்லை. சர்க்கரையும் கிடைக் காமல் தீபாவளி ஏன் வந்ததென்று அலுப்பாக இருந்தது. பண்டிகையே பிடிக்கவில்லை'' என்றாள் பார்வதி எரிச்சலுடன்.

நீ ஏன் இப்படி அலுப்பாய்ப் பேசுகிறாய்? நான் அரைவீசை சர்க்கரை பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். அதில் சில முக்கியமானவைகளை கொஞ் சம் கொஞ்சம் தயாரித்தேன். பண்டிகைக்கு நிறைய செய்து செலவழிப் பதுதான் சுபமென்பதில்லை. மனம் நிறைந்து அவரவர்கள் சக்தியானு சாரம் செய்தால் போகிறது. குடும்பத்திலுள்ள அனைவரும் ஒற்றுமை யாய், சந்தோஷமாக பண்டிகைகளைக் கொண்டாடுவதே முக்கியம். எல்லாம் கிருஷ்ணார்ப்பணம்.

ஏன் இப்படி சர்க்கரை இல்லாமல் போய்விட்டதோ. மளிகைக் கடைக்காரர்கள் ஒளித்துவைத்திருப்பதாகச் சொல்லுகிறார்களே. அதுநிஜம் தானா கலா?

ஓரளவு உண்மைதான். சர்க்கார் சர்க்கரையின் விலையை இறக்குகிறார்கள். சர்க்கரையின் கட்டுப்பாடு வந்ததும் சர்க்கரையெல்லாம் ஒளிந்துகொண்டது. அந்தசமயம் தீபாவளியும் சேர்ந்தது. கள்ளமார்க்கெட்டுக்கு கிராக்கி இருக்குமென்று எதிர்பார்த்தார்கள். கள்ளமார்க்கெட் விஷயமாக மிகவும் கெடுபிடியாக இருப்பதால் அதற்கும் வழியில்லை. கடைமுதலாளிகள் கிர்த்தாக்ஷிண்யமாக சர்க்கரையைப் புதைத்துவிட்டார்கள். இதனால் பொது ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். நிற்க வீடில்லை. குடிக்கத் தண்ணீரில்லை, உடுக்கத் துணியில்லை, சாப்பிட அரிசி இல்லை,படிக்க பள்ளிக்கூடம்இல்லை,தீபாவளிக்கு சர்க்கரை இல்லை என்று ஜனங்கள் பொருமுகிறார்கள்.

"ஆமாம்! பம்பாயில் கடையில் தீவிபத்துகூட பொது ஜனங்களால் ஏற்பட்டதாமே. பாவம்! உலகமே பலவிதமான துன்பங்களில் உழலுகிறது" என்றாள் கமலா,

போதும் உன் வேதாந்தம். தீபாவளிக்கு மருந்து செய்தாயா? உங்கள் வீட்டில் வழக்கமுண்டா?

வழக்கமில்லாமல் என்ன? மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்காரர் மருந்து செய்வதில்லை. சில ஜில்லாக்காரர்கள் செய்கிறார்கள். தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்தவர்கள் அருமையாகச் செய்வார்கள். பக்ஷண வகையறாவும் நிறைய செய்வார்கள். வடஇந்தியர்கள்கூட மிட்டாய் தினுசுகள் ஏராளமாகச் செய்து நண்பர்கள் வீட்டிற்கெல்லாம் அனுப்புவார்கள். நாம் கார்த்திகைப் பண்டிகைக்கு விளக்கு நிறைய ஏற்றிக் கொண்டாடுவதுபோல் அவர்கள் தீபாவளிக்கு ஏற்றுவார்கள். நரகாசுரனை வதம்செய்து ஸத்ஜனங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுத்த இந்த புண்ணிய தினத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக் கொண்டாடுவார்கள். எங்கள் வீட்டுக் குழந்தைகள் பணத்தைவிட மருந்தைத்தான் விரும்பி சாப்பிடுவார்கள். உடம்பு அசௌக்கியமென்றால்கூட "தீபாவளி மருந்தைப்போலிருந்தால் சாப்பிடுவோம். இதை யார் சாப்பிடுவார்கள்?" என்பார்கள். ஆமாம்! கமலா, உன் பிள்ளை கோபுவுக்கு உடம்பு நன்றாய் குணமாய்விட்டதா?

அதையேன் கேட்கிறாய்? ஒருமாதம் படுத்திவிட்டது. டாக்டர் வித விதமாய் மருந்துகொடுத்தார். வைட்டமின் குறைவென்று ஒரே மாத்திரையாகத் தள்ளினார். எல்லாமாகச் சேர்ந்து ஒரு மாதத்திற்குக் கொண்டுவிட்டு குணமாச்சு.

அடேயப்பா! இந்த காலத்து வைத்தியமுறையே மாறிவிட்டது. விருந்தும், மருந்தும் மூன்றுநாள் என்பார்கள். 'மருந்தாட்டமா' என்று மருந்தின் சிறிய அளவை உவமையாகவும் கூறுவார்கள். அதெல்லாம் மலையேறி விட்டது. மருந்துகள் பீப்பாயிலும், மூட்டையிலுமாகத்தான் வாங்கிவைத்துச் சாப்பிடவேண்டியிருக்கிறது.

நித்தியப்படி-வியாதி, அதிகப்படி-வியாதி யென்று இருந்துகொண்டே இருக்கிறது. குழந்தைகளுக்கு பாலையும், சாப்பாட்டையும் போட்டு வளர்ப்பார்கள். எங்கள் தாத்தா "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்கு கொடு" என்று அடிக்கடி சொல்வார். வாரம் இருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்தால் நோயேவராதென்று அவர்களுடைய அநுபவம். வேப்பிலைக் கொழுந்தை மாதம் ஒரு முறை அரைத்துக்கொடுப்பார்கள். இந்த மாதிரி வியாதியே கிடையாது. அடியைப் பிடிடா பாரத பட்டா என்று எந்த வைட்டமின் குறைவால் வியாதி என்று கண்டுபிடித்து அந்த வைட்டமின் கிரப்பி வியாதியை குணப்படுத்த வருஷக்கணக்கில் போக்கிவிடுகிறார்கள். பழைய நாட்களில் இயற்கையை ஒட்டி வாழ்ந்த

தில் அநேக வியாதிகள் தலைகாட்டவில்லை. தற்காலத்தில் இயற்கை வாழ்வில் நோய்களுக்கு கொண்டாட்டம். ஆறு குளத்தில் ஸ்நானம் செய்யும்வழக்கம் போய்விட்டது. குழாயடியில் மல்யுத்தம், சூடு குறைவதில்லை. நாகரீகம் ஏறஏற எவ்வளவோ நன்மைகள்கூடவே தீமைகளும் ஏறிக் கொண்டேபோகின்றன. பச்சிலை, கஷாயம் மூலிகைகள் இதனுடைய விகிதாசாரம் தயாரிக்கும் முறை எல்லாம் தெரிந்தவர்கள் அற்று விட்டார்கள்.

"என்னவோ கலா! பழையகால வைத்தியத்தையே புகழுகிறாய். இந்த காலத்தில் ரணசிகிச்சை எப்படி அற்புதமாய் செய்கிறார்கள்! எங்கள் சிற்றப்பா வயிற்று நோவால் 30 வருஷங்களாக கஷ்டப்பட்டார். ஒரு பெரிய வைத்தியர் சஸ்த்ரசிகிச்சை செய்து பூரணமாய் குணமாய் நன்றாய் உண்டு உறங்குகிறார்" என்றாள் பார்வதி.

உண்மைதான்... ஆயுதசிகிச்சையில் மேல்நாட்டு படிப்பிலும் நாகரீகத்திலும் நாம் நன்மை அடைகிறோம். வைத்தியர்கள் முன்னையைவிட தீர்ந்து கத்திரிக்காய், வெண்டைக்காய் நறுக்குவதுபோல் செய்துவிடுகிறார்கள். ஆனால் மருந்துகள் விஷயம் அப்படி இல்லை. 'அதுமுன்னேற்றமா? பின்னேற்றமா?' என்றால் சொல்ல முடியவில்லை. சுமார் இருபது வருஷங்களுக்கு முன் எந்தவைத்தியரும் ஆயுத சிகிச்சைசெய்யவே முற்படுவர். ஒரு பணக்கார சீமான் அதிக சாப்பாட்டினால் ஜீரணமின்றி சிரமப்பட்டு ஒரு ஆங்கிலேய வைத்திரிடம் வைத்தியம் செய்துகொள்ளப்போனாராம். அப்பொழுது ஜனங்களுக்குஆயுத சிகிச்சையிலிருந்த மோகத்தை நன்றாகக் கண்டுகொண்டவர் மயக்கமருந்தை பூரணமாகக் கொடுத்துவிட்டு வயிற்றில் சிறிதளவு காயத்தை உண்டாக்கி பெரிய கட்டாகக் கட்டிவிட்டாராம். மயக்கம் தெளிந்த பிரமுகருக்கு ஜீரணமாகும் மருந்தைக் கொடுத்து ஒருநாள் பட்டினி இருக்கவும் செய்தாராம். பளிச்சென்று வயிற்றுவலி ஓடிவிட்டதாம். வைத்தியர் பையிலும் ஆயுத சிகிச்சைக்கான பெருந்தொகை ஏறியதாம். அது ஒரு காலம்.

"எங்கள் வீட்டு டாக்டர் ஒரு சிடுமூஞ்சி. என் பிள்ளை கோபு அவரைக் கண்டால் நடுங்குவான். நாம் எது கேட்டாலும் இடக்காய் பதில் சொல்வார். அவரைக் கண்டாலே கோபுவுக்கு பிடிப்பதில்லை. நாம் தெரியாத விஷயத்தைக் கேட்டால் பரிகசிப்பார்" என்றாள் பார்வதி.

அது மிகவும் தவறு. வைத்தியத் தொழிலில் முக்கியமானது குணம் தான். வியாதியைக் கண்டுபிடித்து மருந்து கொடுக்கத் தெரியட்டும் தெரியாமல் போகட்டும், இன்முகமாகவும் சிரிப்புடன் அருமையாக வைத்தியர்களே பேசக் கற்றுக்கொண்டுவிட்டால் போதுமானது. நோயாளிகளுக்கு பாதிநோய் பறந்துவிடும். கவலைப்படும் மற்றோரும் மனத்தென்படைந்து வியாதியஸ்தர்களுக்கும் சிகிச்சை செய்வார்கள். அடிக்கடி தைரியம் ஊட்டவேணும். பக்கத்திலுள்ளவர்களிடம் வியாதிவந்த காரணத்தை விவரமாக கேட்டுக்கொண்டு நாள் பூராவும் அவர்களுடைய மாறுதலை பொறுமையாக அறியவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக வைத்தியர்களுக்கு வேண்டியது நிதானம், இன்னும் கொஞ்சம் நிதானம். மருந்து கொடுப்பதில்இல்லை, வியாதியை அறிவதில்தான். இதைக் கொடுத்துப் பார்ப்போம், அதைப் பார்ப்போமென்ற அவர்கள் பரீக்ஷையெல்லாம் நோயாளிகளிடம் தேற விரும்பினால், நோயாளி உடம்பு தேறமாட்டார். மற்றும் தற்காலத்தில் எல்லோரும் வைத்தியத்தையும், மருந்துகளையும் ஓரளவு அறிந்திருக்கிறார்கள். Little Knowledge is dangerous--'அரை குறை அறிவு ஆபத்து' என்பதுபோல அரைகுறையாகத் தெரிந்ததை வைத்துக்கொண்டு அவர்கள் வைத்தியரைக் கேட்டால், அதற்கு அவர்களை

அநுசரணையாக பதில் சொன்னால்தான் திருப்தியைக் கொடுக்கும். பரிகசித்தால் ஜனநாயகமல்லவா ? எல்லாம் அன்பிலும் அனுசரிப்பிலும் மூலம் நடக்கணும். மூடிவைத்து ஒன்றும் புரட்டமுடியாது. அன்பினால் குணப்படுத்துவது ஸாத்தியமாயிருப்பதால் பெண்கள் வைத்தியத்துக்கு இன்றியமையாதவர்கள்.

வைத்தியர் எப்படியெல்லாம் இருக்கவேணும்...என்று இரண்டு பாகத்தில் ஒருபுத்தகம் எழுதிவிடுவாய் போலிருக்கிறதே. நோயுற்றவர்கள் எப்படி நடந்துகொள்ளவேணுமென்று மட்டும் சொல்லாமல் வைத்தியரையே சொல்லுகிறாயே...என்றான் கலா.

ஆம்! வைத்தியர்கள் எப்படி இருக்கவேணுமென்று நான் புத்தகம் எழுதுகிறேன். நீ அதை வெளியிடு. ஏன் அது ஒரு அருங்கலை தான்: மற்ற கலைகளைவிட விலை மதிப்பற்ற உயிரைப் பற்றிய கலை: ஸ்வீடன் தேசத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் அவரவர்களுக்குத் தகுந்தபடி மாதம் இவ்வளவு தொகையென்று குடும்ப வைத்தியர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். வைத்தியர்கள் அந்தகுடும்பத்துக்கு எந்தவியாதியும் வராமல் முன்ஜாக்கிரதையாக செய்யவேண்டியதைச் செய்துவிடுவார்கள். நோய் வந்தாலும், வராவிட்டாலும் அவர்களுக்கு குறிப்பிட்டதொகைதான் வருமானம். எனவே, அவர்கள் முன்காப்பால் இருவருக்கும் சாதகம். வைத்தியர்கள் பிழைப்பிற்கும் குறைவில்லை. நாட்டின் ஆரோக்கிய நிலைக்கும் குறைவில்லை. ஏது எவ்வளவோ பெரியவிஷயங்களைப் பேசின தில் பொழுது சென்றதே தெரியவில்லை. போய் வருகிறோம் மாமி.

ஆம் ! நான்கு பேராகப் பேசஆரம்பித்தால் எவ்வளவோ விஷயம் வரும். இருங்கள் துலா மாதம், தாம்பூலம்பெற்றுக்கொண்டு போகலாம்.

---

# தமிழன்னைக்கு மோகினியின் புதுவருடக் காணிக்கை.

## 27-வது ஆண்டு மலர்.

ஸ்ரீ கீதாசாரியன் க்ருபையினால் மோகினி 27-வது ஆண்டு மலர் முந்திய வருடங்களைப்போல் உயர்ந்த முறையில் பேரறிஞர்களாலும் கலைஞர்களாலும் உருவாக்கப்பட்டு அச்சாகிவருகிறது. கருத்தைக் கவரும், ஜீவகளை ததும்பும், நவரஸங்கள் நிறைந்த விவித விஷய விருந்துகளும், உயர்தர ஓவிய விருந்தும், வை. மு. கோ. 87-வது நவீனம் "ஜீவநாடி"யும் வாசகர்களை ஆனந்தமுறச் செய்யக் காத்திருக்கின்றன.

விலை சரசமாக ரூ. 2. என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முன்பணமனுப்பிப் பதிவுசெய்வோருக்குத் தபாற் செலவு இனாம். உள்நாட்டினர் சந்தாவுக்கும் மலருக்குமாகச் சேர்த்து ரூ. 5- அனுப்பவேண்டும். வெளிநாட்டினர் சந்தாவுக்கும் மலருக்குமாகச் சேர்த்து ரூ 6 அனுப்பவேண்டும்.

தாமதிக்காமல்
உடனே
முந்துங்கள்

ஸிலோன் சந்தாநேயர்களுக்கு முன்பணமனுப்ப அனுமதியில்லாததால் அவர்கள் ரிஸர்வேஷன் கூப்பனைப் பூர்த்திசெய்து பதிவு செய்துகொண்டால் ஜனவரி இதழும் மலரும் ரூ 5-6-0க்கு (V. P. சார்ஜ் 6 அணா உள்பட) V. P. போஸ்டில் அனுப்பப்படும்; தவறாது. தாமதிக்காது பணம்கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1—11—'49 காரியஸ்தன், ஜகன்மோகினி

உங்கள் புதிய மோக வாழ்வின் மத்தியில் என் செல்வச் சகோதரி உங்கள் கண்ணுக்குப் புலப்படவே மாட்டாள். அவளை சிறு குழந்தைமுதல் பாதுகாத்துவந்த மாணிக்கமும் இல்லாது, தன்னந்தனியாய் அவளை அங்கு விடுவதற்கு நான் விரும்பாததால் அவளையும் தகுந்த ஜாக்ரதையான, நம்பிக்கையான இடத்திற்கு அழைத்துச்செல்கிறேன். எங்களைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். பயித்தியம் என்று துணிந்து சொல்லியதையே ஊர்ஜிதம் செய்துகொண்டு பயித்தியங்கள் உங்களைவிட்டுத் தொலைந்துவிட்ட தாயும், உங்களுக்கோ, உங்கள் இளம் மனைவிக்கோ எத்தகைய உபத்திரவமும் விளையாதென்கிற நம்பிக்கையுடனும் சந்தோஷமாயிருங்கள். எப்படியும் இனிமேல் எங்கள்படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்துவிட்டது என்பதை நான் உணர்ந்துகொண்டேன்; அதைப் பற்றியும் இனி எனக்குக் கவலை இல்லை; எங்களைப் படைத்த ஆண்டவன் எங்களைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையுடனே இதைத் துணிந்துசெய்கிறேன். நாங்கள் எங்குபோகிறோம் என்கிற இடத்தை உங்களுக்குச் சொல்லி வீணாக உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கவில்லை. என்றைக்காவது ஒரு நல்லகாலம் பிறக்கும். அப்போதாவது தாங்கள் செய்யும்....செய்த...காரியத்தைப் பற்றி உணராமலிருக்கமாட்டீர்கள்.

ஒரே ஒரு வேண்டுகோள். இனி எங்கள் பயமே இல்லாமல் என் சிறிய தாயாரை நன்றாக நடத்துங்கள். அந்தம்மாளுக்குப் பிறக்கும் குழந்தையே உங்கள் ச்வயார்ஜித சொத்து பூராவையும் அடைந்து இன்புற்று வாழட்டும். இதையே எனது தானசாஸனப் பத்திரமாக எண்ணி ஜாக்ரதையாக வைத்துக்கொள்ளுங்கள். என் அன்னைக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கவும். தங்களுடைய வாழ்க்கைத் துணைவியாகிய என் சிறியதாயார் நீங்கள் அநியாயமாய் வஞ்சம்வாங்கும் கொடுமையைக் கண்டித்துத் தடுப்பார்கள் என்று நம்புகிறேன். உங்கள் புதல்வன்''

கடிதத்தைப் படிக்கும்போதே தேகம் படபடத்துத் துடித்தது. ''இந்த தடியன் எனக்குப் புத்திசொல்வதாவது? இத்தனை தூரத்திற்குத் துணிந்துவிட்டானா! இருக்கட்டும்...இருக்கட்டும்'' என்று தனக்குள் உறுமிக்கொண்டே மறுபடியும் வெளியில்வந்து கலாவதியைப் பூட்டியிருந்த அறைப்பக்கம் வந்தார். சனியன்பிடித்தவர்கள் யாரும் வராதிருக்கவேண்டுமே என்று எண்ணியபடி கதவைத் திறந்து மெல்ல பூனைபோல் உள்ளேசென்று ''கலாவதீ! கலாவதீ!'' என்றழைத்தார். கலாவதியைக்காணவில்லை! திடுக்கிட்டார். தான் பூட்டியிருந்த கதவு பூட்டியபடியே இருக்கிறது. அவள் எப்படி மாயமாய் மறைந்துபோயிருப்பாள்?...என்று தவித்தவாறு உள் பூராவும் சுற்றிப்பார்த்தார். இடியோசைகேட்ட நாகம்போல் இடிந்து உட்கார்ந்துவிட்டார். உலகமே சுற்றுவதுபோல் தோன்றியது.

தேவநாதன் முதலியவர்கள் ஆனந்தமாக ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வருகையில் கடைத்தெருவில் ஒரு புஷ்பக்காரியும் இன்னும் இரண்டு பெண்களும் ப்ரமாதமாக சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அதைச் சுற்றிலும் வேடிக்கை பார்க்கும் ஜனங்கள் தம்போக்காகப் பேசிச் சிரித்தார்களே யன்றிச் சண்டையை விலக்கவில்லை.

காவேரியம்மாள் கூட்டத்தை உற்றுக் கவனித்தாள். தங்கள் வீட்டிற்குப் புஷ்பம் கொடுக்கும் புஷ்பக்காரி என்பதை யறிந்து அந்தக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்று. "லக்ஷ்மீ! லக்ஷ்மீ! இதோபாரு. எதற்காக இப்படி நடுத்தெருவில் இத்தகைய பெரிய சண்டை செய்கிறீர்கள். என்ன சமாச்சாரம்?" என்று கேட்டாள்.

புஷ்பக்காரியிடம் புஷ்பம் வாங்கியவர்கள், தாம் சரியாகப் பணம் கொடுத்துவிட்டதாயும் கணக்குத் தெரியாததால் தாங்கள் சரியாகக் கொடுக்கவில்லையென்று வீண் வம்புச்சண்டை செய்கிறாள். தாங்களாகச்சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாள் என்று சொன்னார்கள்.

காவேரியம்மாள் புஷ்பக்காரியின் கணக்குத் தெரியாத தன்மையை விளக்கிக் கணக்கைதீர்த்துப் பணத்தை வாங்கிக்கொடுத்துப் பின் "லக்ஷ்மீ! நான் அடிக்கடி உனக்குச் சொல்வேனே. நீ இத்தனை புத்திசாலியாய் இருந்தும் எழுதப் படிக்கத் தெரியாமையினால்தான் உன் வீட்டிலும் சரி, புஷ்பம் விற்கும் இடங்களிலும் சரி வீண் சண்டையும் மனஸ்தாபமும்உண்டாகின்றன. நீசெய்யும் வ்யாபாரத்திற்குத் தகுந்த கணக்காவது உனக்குத்தெரியவேண்டாமா? என்று நான் ஆதிமுதல் சொல்வேனே. நீ கேட்டாயா? அதன் உண்மை இப்போது நடுரோட்டில் சந்தி சிரிக்கும்போதாவது தெரிந்ததா? இவர்கள் நல்லவர்களாயிருப்பதனால் உனக்குத் திரும்பத்திரும்பச் சொல்லி பணம் கொடுத்தார்கள். கெட்டவர்களாகவிருந்தால் உன்னை கட்டாயம் டஜீத்செய்துவிட்டே போவார்கள். இதோ பாருங்கள்! நம் நாட்டின் பெருமையை நீங்கள் உள்ளபடி அறிந்துகொள்ள முடியாமல் தடுப்பதற்கு, கல்வியறிவு இல்லாத குறையேயாகும். இதோ! இந்தப் பெண்ணும், பிள்ளையும் என் சகோதரியின் மக்கள். இவர்கள் தேசத்திற்கும் சமூகத்திற்கும் பாடுபடுவதற்கு மிகவும் ஆசை உள்ளவர்களாக உழைக்கிறார்கள். வெளிநாட்டு மக்களைப் போல் நம் நாட்டிலும் நூற்றுக்கு நூறுபேரும் படித்து சிறந்த மேதாவிகளாயிருக்கவேண்டும். அப்போதுதான் தேசத்தில் சகல விதமான க்ஷாமமும் நீங்கி க்ஷேமம் நிலைந்திருக்கும் என்பதற்காக இவர்கள் பாடுபடக் கிளம்பியிருக்கிறார்கள். நாளைமுதல் எங்கள் வீட்டுத்தோட்டத்தில் தினம் முதியோர் கல்வி வகுப்பு ஆரம்பிக்கப் போகிறது. அதில் கட்டாயம் நீயும் உன்னைப்போலிருப்பவர்களெல்லோரும் வந்து கற்றுக்கொள்ளுங்கள். இதை எல்லோருக்கும் சொல்லுங்கள், என்ன...லக்ஷ்மீ! நான் சொல்வது புரிந்ததா! நீ

சற்று நிதானமாக எங்கள் வீட்டுக்கு இன்று இரவு உன் கணவனுடன் வா. நான் விபரமாகச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்த மற்ற பூக்காரி, முறுக்கு விற்கும் பெண்கள் முதலியவர்களிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தார்கள்.

இன்று கணேசன் வீட்டிற்கு வருவதற்கு வெகுநேரமாயிற்று "ஏன் இத்தனை நேரமாகிவிட்டது? இன்னும் குழந்தைகள்கூடச் சாப்பிடவில்லை. நீங்கள் வரட்டும் என்று காத்திருக்கிறார்கள்'' என்றாள் காவேரி.

கணேசன்:--எம்பா, தேவநாதா! நீ சாப்பிடக்கூடாதா! மிராசுதாரர் சுந்தரம் வீட்டில் ஒரே ரகளை. அங்குபோய் பேசிக்கொண்டிருந்ததில் நேரமாகிவிட்டது. அவருடைய பண்ணை ஆட்களுக்கும் அவருக்கும் விபரீதமான தகராறு வந்திருக்கிறது. ஒருவனுக்காவது ஒரு எழுத்துத் தெரியவில்லை என்றாலும் ஷாத்துப் பேசிச் சண்டைபோடுவதற்கு எப்படியோ பழகியிருக்கிறார்கள். அதைத் தூண்டிவிடுவதற்கு எவனாவது ஒரு மகானுபாவன் வந்து சேர்ந்துவிடுகிறான். வயலில் வேலைசெய்யமாட்டார்களாம். கூலி போதாதாம். நோத்தைக் குறைக்கவேண்டுமாம். ஏதேதோ கூச்சலிட்டு ஒரே அமர்க்களம் செய்கிறார்கள். மிராசுதாருடைய குமாஸ்தா அவர்களுக்கு எத்தனையோ சமாதானம் செய்து சொல்லிப்பார்த்தார். நானும் சொன்னேன். அது ஒன்றும் அடங்குகிறதாகக் காணவில்லை. சமயமோ பயிர்கள் நன்றாக அறுவடைக்குத் தயாராயிருக்கின்றன. இந்த நிலைமையில் இப்படி சண்டை உண்டானால் எத்தனை கஷ்டங்கள் நஷ்டங்கள் விளையும் தெரியுமா?

தேவநாதன்:—ஏன் மாமா! அவர்கள் என்னத்திற்காகச் சண்டைபோடுகிறார்கள்? கூலியில், வேலையில் ஏதாவது தகராறு இருக்கிறதா? ஏன் கேட்கிறேன் என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு ஊரில் இதேபோல் சண்டை நடந்தபோது நாங்களெல்லோரும் போய் சமாதானம்செய்து சமரசப்படுத்தினோம். "அவர்கள் கூலியையும் அதிகம் கொடுக்கமாட்டேன் நோத்தையும் குறைக்கமாட்டேன்; பழயபடியேதா னிருக்கவேண்டும்'' என்று மிராசுதாரர் சொன்னார். வேலையாட்களுக்கும் த்ருப்தியாய், மிராசுதாருக்கும் சந்தோஷமாய் கூலியில் சிறிதுஏற்றி, நோத்தில் சிறிது குறைத்து ஒருவழி செய்தோம். அதுபோல் இங்கேயும் போய்ப் பேசலாமா...?

கணேச:—எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? இந்த மிராசுதாருடைய மகனே ஏதோ ஒருகட்சி என்று சொல்கிறார்களே? அவர்களுடன் சேர்ந்துகொண்டு இந்த ஆட்களைத் தூண்டிவிடுவதாகவே நினைக்கிறேன். ஏனென்றால் ஒருவார காலமாய் இந்தத் தகராறு நடக்கிறதாம்; அதில் அந்தப் பையன் கலந்துகொள்ளாமல் தூரநின்று வேடிக்கை பார்க்கிறானாம்...

காவேரி:—பேஷ்! சில சினிமாக்களில் நடப்பதைப் பார்த்துத் தானே இம்மாதிரி செய்து ப்ரமாதமான நல்லபெயர் வாங்கி, தகப்பனாரையே திருத்திவிட்டான் என்று கொண்டாடுவதற்காகச் செய்யும் வேலையா இது? உண்மையில் குற்றம் யார் மீதிருக்கிறது?

கணேசன்:—இந்த சண்டை வெறும் அனியாயச் சண்டையே யன்றி நியாயமானதல்ல. பண்ணையாரிடம் பலபேர் வேலைசெய்து கொண்டு வருகிறார்கள். அவர்களில் ஒருவன் தகாதமுறையில் நடந்துகொண்டதை நேரில் மிராசுதாரர் பார்த்துவிட்டதால் அவனை வேலையைவிட்டு நீக்கிவிட்டார். அந்த மனிதன் ஆத்திரங்கொண்டு வீண்சண்டையைக் கிளப்பிக் கலகம் செய்துவிட்டான். அதன் சாதக பாதகத்தைக் கவனிக்காமல் மூர்க்கத்தனமாக எல்லோரும் ஒன்றுகூடி "அந்த ஆளை நீங்கள் நிறுத்தியது மகா குற்றம். அதோடு நாங்கள் இனி முன்போல் வேலை செய்யமாட்டோம். கால விலை வாசிகள் ஏறியிருப்பது உங்களுக்குமட்டுமல்ல; எங்களுக்கும் அது சேர்ந்ததுதான் ஆகையால் கூலியை உயர்த்தினால்தான் வேலை செய்யமுடியும்." என்று பிடிவாதம் செய்கிறார்கள்.

தேவநாத:—மாமா! நீங்கள் பேசாமலிருங்கள். நான் நேரே அந்த விவசாயக் கூலியாட்களிடம் போய்ச் சமாதானம் செய்து பார்க்கிறேன்; எனக்கு உத்திரவுகொடுங்கள்.

காவே:—தேவநாதா! இந்த ஊர் ஜனங்கள் மிகவும் பொல்லாதவர்கள். நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களல்ல. சில வருஷத்திற்குமுன் கழனியில் தண்ணீர் மடைபாய்ச்சும் விஷயத்தில் பலத்த சண்டை ஏற்பட்டு அந்த த்வேஷத்தில் கொலையே நடந்துவிட்டது. அந்த கொலையைப் பார்த்துக்கொண்டிருந்த மனிதனுக்கு அதே கிலியில் மூளையேகலங்கிப் பயித்தியம் பிடித்துவிட்டது பாவம்! கொலைக்கும் அஞ்சாத இந்தக் கூட்டத்தில் நீ சம்மந்தப் படாதேப்பா! ஏற்கெனவே த்வேஷத்தை மலைபோல் பாவிக்கும் உன் பிதா, இந்த விஷயத்தில் ஏதாவது தகராறு நடந்துவிட்டால் அதை வைத்துக்கொண்டு எங்களையே ஒழித்துவிடுவார். நீ ஒன்றும் அங்கு போகவேண்டாம்.

தேவநாத:—மாமீ! நீங்கள் பயப்படவேண்டாம். இதைவிடப் பெரிய சண்டைக்காரர்களின் முன்பு நான் தைரியமாகப்போயிருக்கிறேன். என் பிதாவைப்பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம். அவர் புதிய மோக அலையில் திளையும்போது எங்களைப்பற்றிய நினைப்புக்கூட வராது மாமீ! நான் எத்தகைய கஷ்டத்திற்கும் அகப்பட்டுக்கொள்ளாமல் சமாதானம் செய்யமுடிந்தால் பார்க்கிறேன். இல்லையேல் வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினான்.

உண்மையில் காவேரிக்கும் தேவகிக்கும்உள்ளூறப்பயந்தான். 'துணிச்சலுடன் போய்விட்டானே என்னசெய்வது?' என்று குழம்பிக் கலங்கினார்கள். இதற்குள் கணேசனும் பின்னாலேயே சென்றான். தேவநாதன் மிராசுதாரர் வீட்டையடையும்போது அவ

ருடைய வீட்டுவாசலில் யாருமே கும்பலைக்காணவில்லை. மிராசுதாருடைய பழக்கமும் அதிகம் இல்லாததால் தயங்கியபடியே தேவநாதன் உள்ளே சென்றான்.

சுந்தரமும் அவருடைய குமாஸ்தாவும் பேசிக்கொண்டிருப்பது காதில்கேட்டு சற்று அப்படியே நின்று அந்த சம்பாஷணையைக் கவனித்தான்.

குமாஸ்:—இப்போதே அவசரமாக ஒரு ஆளையனுப்பி போலீஸை வரவழைத்துத்தான் ஆகவேண்டும். அவர்கள் செய்யும் அட்டகாஸத்தைப் பார்த்தால் இந்த வீட்டிற்கே நெருப்புவைத்து விடுவார்களோ அல்லது நிலங்களில் புகுந்து அவ்வளவு தானியங்களையும் அறுத்துக்கொண்டு பாழடித்துவிடுவார்களோ என்று பயமாயிருப்பதால் நமது சேரியிலுள்ள சில ஆட்களைக் கழனியில் காவல் வைத்துவிட்டு வந்திருக்கிறேன்.

சுந்த:—இப்போது அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள்? நான் சொல்லியபடி எல்லாம் நீ சொன்னாயா? சந்த்ரசேகரன் எங்கே போயிருக்கிறான்?

குமாஸ்:—வேலைக்காரர்கள் எல்லோரும் எங்கேயோ கூட்டம் போட்டு பேசப்போகிறார்களாம். சந்துரு இன்று வீட்டிற்கு வருவதற்கே அதிகநேரமாயிற்று. வந்தவுடனே அந்த கும்பலுடன் அவனும் போவதை நான் பார்த்தேன். நம் எதிரிகளுடன் அவன் அப்படி பழகிப்பின்னும் கலகத்தை விளைவிப்பதே குற்றம். அது தான் நமக்கு மிகவும் இளப்பமாகி வேலைக்காரர்களின் கொழுப்பை அதிகப்படுத்திவிடுகிறது. இந்த கலகத்தை உடனே அடக்குவதற்குப் போலீஸாரும் வந்தாகவேண்டும். உங்கள் மகன் சந்துருவையும் எந்த சாக்கையாவது வைத்து இச்சமயம் இங்கிருந்து கிளப்பிவிடவேண்டும். அவன் தொழிலாளர்களுக்கு ஏதோ சகாயம் செய்வதுபோல் கண் துடைப்பதற்காக அவர்களிடம் என்ன சொல்கிறான் தெரியுமா? "உங்கள் இஷ்டப்படி இங்கு மிராசுதார் நடத்தினால் சரி. இல்லாவிட்டால் உங்கள் அத்தனை பேர்களுக்கும் நான் பட்டினத்தில் தொழில் வாங்கித்தருகிறேன். எத்தனை மில்லுகள் ட்ராம் பஸ்ஸு ரயில்வே லாரி மோட்டார் ஒர்க்ஷாப்புகள் முதலிய பலவிதமான சாதனங்கள் இருக்கின்றன. அவைகளில் எதிலாவது உங்களைப் புகுத்திவிடுகிறேன்." என்று ஆசைகாட்டிப் பேசுகிறான்.

சுந்த:—நிஜமாகவா! நீ உண்மையாகக் கேட்டாயா! இது உண்மையாக இருக்குமானால் பெற்றபிதாவுக்குச் சத்ருவாயிருக்கும் பிள்ளையை வெட்டிப்போட்டுவிடலாமே! என் ரத்தமே கொதிக்கிறதே. இப்போது அந்தச் சண்டாளன் எங்கு போயிருக்கிறான்? நானேபோய் முதலில் அழைத்துக்கொண்டுவருகிறேன்.

குமா:—சரி...சரி...நீங்கள் இப்போது வெளியில் தலைகாட்டினால் முதலில் உம்மை அவர்கள் தாக்கிக் கொன்றுவிடுவார்கள். அந்த கூட்டத்து மத்தியில்தான் அவன் இருக்கிறான். நீங்கள் அவசரப்பட்டு எதுவும் செய்துவிடாதீர்கள். நீங்கள் ஒரு கடிதம் எழு

திக்கொடுங்கள். உடனே அதை யனுப்பி போலீசை வரவழைக்கிறேன். இனி தாமதம்செய்வதில் உபயோகமில்லை...

என்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே நின்ற தேவநாதனுக்கு ஏதேதோ யோசனை தோன்றியது. மெல்ல தைரியத்துடன் "சார்!" என்று கூப்பிட்டான்.

இக் குரலைக்கேட்ட குமாஸ்தா "நில்லுங்கள் சார்! கூலிகளுக்கு சிபார்சு ஆளாக இருக்குமோ, அல்லது வேறு கலகக்காரனாக இருக்குமோ நீங்கள் போகவேண்டாம். நான் போய்ப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டுத் தானே வந்து "யாரைய்யா நீ?" என்று சற்று அதட்டலுடன் கேட்டான்.

தேவநாதன்:—மிராசுதாரைப் பார்க்கவேணுமென்று வந்திருக்கிறேன்.

குமாஸ்:—எதற்காக?...நீ யாரு? என்னகாரியமாகப் பார்க்க வேண்டும்? மிராசுதார் வேலையாக இருக்கிறார். இப்போது பார்க்க முடியாது.நாளைவரலாம்—என்று கூறிக்கொண்டே உள்ளேசென்று ...ஊம்...எவனோ உங்களைப் பார்க்கவேண்டுமாம். ஆளைப்பார்த்தால் எனக்குச் சந்தேகமாயிருப்பதால் பார்க்கமுடியாதென்று சொல்லியனுப்பிவிட்டேன். சந்துருவின் சினேகிதனோ அல்லது அக் கூட்டத்துக்கு வேண்டியவனோ தெரியவில்லை. ஆள் நல்ல வாட்டசாட்டமாயிருப்பதைப்பார்த்தால் ஏதோ சந்தேகமாக இருக்கிறது.

மிரா:—அப்படி சந்தேகமாக இருப்பவனை நாளைமட்டும் பார்க்கலாமா! இப்படிப்பட்ட ஆட்களை நாம் உடனுக்குடன் பார்க்காவிட்டால் அது வேறு கலகமாக முடிந்துவிடும்.

குமாஸ்:—சார்! அப்படியொன்றும் பயப்படவேண்டாம். இன்னொரு விஷயங்கூடச் சொல்கிறேன். அந்த கணேசன் அடிக்கடி இங்கு வந்து பேசுவதுகூடச் சரியாகஇல்லை. அந்த ஆள்தான் உமது மகனுக்குக் கலகம் செய்து தூண்டிவிடுகிறானோ என்றுகூட தோன்றுகிறது. அவரைக்கூட நீங்கள் அதிகம் சேர்க்காமலிருந்தால்தேவலை—என்று சொல்வதைக் கேட்டுக்கொண்டே கணேசன் வந்துவிட்டார்

தேவநாதன் கடைப்புறமே நின்றுகொண்டிருப்பதும் உள்ளே சம்பாஷணை நடப்பதும் கணேசனுக்கு ஒரு சிறிது புரிந்துவிட்டது. குமாஸ்தாவின் திமிர் பிடித்தவார்த்தைகள் அவருக்குமிகவும் கோபமுண்டாக்கியதால் தடதடவென்று உள்ளே போக எத்தனித்துக் கொண்டு தோட்டத்தில் சென்று "மாமா! நீங்கள் பேசாமலிருங்கள் நான் வந்ததுமுதல் குமாஸ்தாவின் சம்பாஷணைகளையும் அவன் பேசுகிற மாதிரியையும் பார்த்தால் இந்தக்கலகத்திற்கு இவனே காரணமாக இருப்பான் என்றுகூடத்தோன்றுகிறது. ஆகையால் நாம் உஷாராக இருந்து எத்தகைய கலகமும் இல்லாது வேலைசெய்தாவது சமாதானத்தை நிலைநாட்டவேண்டும். குமாஸ்தா வெளியே சென்ற பிறகு நாம் மிராசுதாரைப் பார்க்கலாம்" என்றான்.

கணே:—தேவநாதா! இந்த வீண் சங்கடத்தில் நாம் ஏனப்பா மாட்டிக்கொள்ளவேண்டும்? எவன் எக்கேடுகெட்டால் நமக்கென்ன? எனக்கென்னவோ நீ இதில் தலையிடுவதில் சற்றும் பிடிக்கவில்லை. உன் தகப்பனார் எப்படியிருந்தாலும் இம்மாதிரியான விஷயத்தில் ஏதாவதொரு அசம்பாவிதம் நடந்துவிட்டது என்றால் அம்மா விடமாட்டார்கள். அதொரு வீண்சண்டை. என்னையும் சேர்த்து ஆட்டிவைக்கும். ஏதோ இரண்டுமாதகாலம் நிம்மதியாயிருந்துவிட்டுப் போகலாம் என்று வந்த இடத்தில் அனாவச்யமான தொல்லையும், பயங்கரமும் வேண்டாமப்பா! உன்னை அழைத்துப் போவதற்குத்தான் வந்தேன். நீ வந்துவிடு.

தேவ:—மாமா! வீண்பயமே வேண்டாம். நிம்மதியாக இருக்க வந்த இடத்தில், ஊரில் இத்தகைய கலவரமும் சண்டையும் அதனால் தொல்லையும் உண்டானால் அது விகாரமில்லையா? அத்தகைய கொடிய பூதத்தையும் அடக்கிச் சமரஸத்தை நிலைநாட்டி ஊருக்கே க்ஷேமத்தை உண்டாக்கினால் அதில் எத்தனை நன்மைகளும் புகழும் கிடைக்கும் மாமா! இந்த சண்டை இப்படியே இருந்தால் வயிற்றுக்கில்லாத கொடுமையினால் அவர்கள் திருடத்தான் துணிவார்கள். அதிலிருந்து ஊருக்கே பெரிய அனர்த்தந்தான் விளையுமேயன்றி சந்தோஷம் எப்படி மாமா இருக்கும்? ஊர் நன்றாக இருந்தால்தானே நீங்களும் நிம்மதியாக வாழலாம்.—என்று பேசுகையில் குமாஸ்தா வெளியில் போவதைப் பார்த்தார்கள்.

இதுதான் தருணமென்று எண்ணி இருவரும் உள்ளேசென்று மிராசுதாரை வணங்கிப் பின் "ஸார்! உங்கள் குமாஸ்தா என்னைப் பற்றி உங்களிடம் பேசிய சகலத்தையும் நாங்கள் கேட்டுக்கொண்டுதானிருந்தோம். எப்படி அவன் சொல்லி உங்கள் மனத்தைக் கலைத்தாலும் எங்களைத் திட்டினாலும் பரவாயில்லை. நாங்கள் கோபிக்கப்போவதில்லை. இருப்பினும் அந்த மனுஷ்யனை நீங்கள் பூராவும் நம்பி உங்கள் பொறுப்பு முழுதும் அவனிடம் விட்டிருப்பதால் உங்களுக்குமட்டுமின்றி ஊருக்கே எத்தனை விபத்தை விளைவிக்கும் என்பதை நீங்கள் யோசனை செய்யவேண்டும். இந்த கலகத்திற்கு வேர்ப்புழு இதே குமாஸ்தாவேயன்றி உமது குமாரன் இல்லவே இல்லை என்பதை உமக்கு நிரூபித்துக்காட்டி இந்தச்சண்டையைச் சமாதானம் செய்துவைப்பதற்கே இந்த வீரவாலிபன் வந்திருக்கிறான். இந்த விஷயமாக இங்கு வரும்போது அவன் சிலரைக்கண்டு வெகு முக்யமான ரகஸ்யங்களை விசாரித்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறான்.

இவன் சாதாரணச் சிறிய வாலிபன் எனினும் இம்மாதிரி சமூக சேவைசெய்து ஆங்காங்கே ஜயபேரிகையடித்து வெற்றிபெற்றிருக்கிறான். இவனுடைய பிதா பெரிய வேலையிலிருப்பவராயினும் மனதாராளம், அன்பு, அனுசரணை முதலிய எதுவும் கிடையாது. அதிர்ஷ்டம்மட்டும் எப்படியோ இருக்கிறது. பெரிய சம்பளம் வாங்குகிறார். அந்த திமிரில் இப்போது இளையாள் கல்யாணம்வேறு

செய்துகொண்டு இந்தக் குழந்தைகளை வீட்டைவிட்டே ஓட்டிவிட்டார். அத்தகைய மனிதரின் வயிற்றில் சமரஸ சன்மார்க்க புத்தியுடைய இவன் பிறந்திருப்பது போற்றத்தக்கதாகும். இவனுடைய வார்த்தையை நம்புங்கள்...

என்று முடிப்பதற்குள் நாகம்பட்டி கிராமத்தில் சென்றவருஷம் நடந்த பெரிய கலகத்தை யாரோ ஒரு கூட்டத்தினர் அடக்கினார்கள். தேவநாதன் என்கிற பையன் வெகு கெட்டிக்காரத்தனமாகவேலைசெய்தானென்று அந்த மிராசுதார் சொல்லிப் பெருமைப்பட்டார். அந்த தேவநாதன்......

கணே:—சார்! அதே தேவநாதன்தான் இந்த வாலிபன்.

மிராசு:—அப்படியானால் அடுத்தக்ராமத்திலுள்ள ஒரே ஏழைப் பெண்ணை இப்போதுதான் சமீபத்தில் தேவநாதனின் தகப்பனார் நான்காம்தாரமாக விவாகம் செய்துகொண்டாராம். அந்த மனைவியுடன் அவர் ஊருக்குச்சென்றாராம். தேவநாதனுக்குப் பயித்தியம் பிடித்திருப்பதால் புதிய மனைவியை ஏதோ அசட்டுத்தனம் செய்தானும். அதனால் அந்த பெண் க்ராமத்திற்கே திரும்பிவிட்டாளாம் ...என்று குமாஸ்தா இன்றுதான் எனக்குச்சொன்னான். ஏனென்றால் அந்த தேவநாதனை நாம வரவழைக்கலாமா என்றுநான் கேட்டதற்கு அவன் இம்மாதிரி சொன்னானே அதே தேவநாதனா இவன்?...

தன் இளைய தாயார் தன் வீட்டிலேயே குடித்தனம் செய்வதாக எண்ணியிருந்த தேவநாதனுக்கு இவர் சொல்லிய வார்த்தையிலிருந்து அங்கு இல்லை என்பது விளங்கியதும் தான் இங்குவரும் போதிருந்த பரபரப்பும் வேகமும் இப்போது கலவரத்திலாழ்ந்தது.

"என் சார்! இந்த விஷயம் தாங்கள் சொல்வது சரியான உண்மையாக இருக்குமா? உங்கள் குமாஸ்தா சொல்வதில் நம்பிக்கை எப்படி வைப்பது? என் சிறிய தாயார் எப்போது க்ராமத்திற்கு வந்துவிட்டார்களாம்? அவர்களைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

மிராசு:—நான் இன்று காலையில்தான் உன்னை அழைத்துவந்து இந்த விவகாரத்தில் சற்று உதவி புரியச் செய்யவேண்டுமென்று எண்ணினேன். பகவான் உன்னையே இங்கு வலுவில் கொண்டு விட்டுவிட்டதுபற்றி பரம சந்தோஷமடைகின்றேன். உன் தகப்பனாரின் பேராசை விவாகத்தைப் பற்றி இந்த ப்ராந்தியத்தில திட்டாதவர்களில்லை. அந்தப் பெண் ஏழை வீட்டுப்பெண். தாய் கிடையாது. தகப்பனுக்குப் பயித்தியம் பிடித்து ஆஸ்பத்ரியிலிருப்பதாகக் கேள்வி. ஒரு கல்யாணத் தரகன் உங்கப்பாவிடம் ஏராளமான பணத்தைக் கறந்துகொண்டு இவளைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டான். அவள் திரும்பி வந்துவிட்டதாகச் சொல்வது நிஜம்மா! பொய்யோ! எனக்கு குமாஸ்தா சொல்லியதுதான் தெரியும். உன்னைப்பற்றிப் பொய் சொல்லியிருப்பவன் அதிலும் பொய்தான் சொல்லியிருப்பான். அதைப்பற்றிப் பிறகு விசாரிக்கலாம். குமாஸ்தாவைப்பற்றி நீ எப்படி சந்தேகித்துப் பேசுகிறாய்...

கணே:—இந்த விஷயத்தில் பொய் சொல்லியிருப்பதே போதாதா, உடனே நீங்கள் புறப்பட்டு வாருங்கள். நேரேயே பார்க்கலாம் என்று கூறி, அவரைத் துரிதப்படுத்திக் கூட அழைத்துச் சென்றார்கள்.

எந்த வேலைக்காரனைத் தள்ளிவிட்டதனால் இந்த கலகம் உண்டாகியதோ அதே வேலைக்காரனிடம் குமாஸ்தா ரகஸியமாய்ப் பேசுவதையும், அங்கு அவர் மகன் இல்லாததையும் காட்டி "சார்! சரியாக கவனித்துப் பாரும். கவனித்துக் கேளும்" என்று மறைவாய் ரகஸியமாய்க் கூறினார் கணேசன்.

இதைப் பார்த்தும் கேட்டும் சுந்தரத்திற்கு உள்ளம் கொதித்தது. தான் மிகவும் நம்பிக்கைவைத்து சகல பொறுப்புகளையும் அவனிடம் ஒப்படைத்திருக்கையில், வீணான கலகமும் த்வேஷமும் இவனே விளைவித்துச் சத்ருவாக இருப்பதை மறைக்கத் தன்மகன் மீதே மகத்தான அபாண்டத்தையும் வாய் கூசாமல் சுமத்திப் பேசிய த்ரோகமும் இப்போதுதான் சுருக்கென்று மனத்தில் பட்டதும் அபாரமான கோபத்துடன் தடதடவென்று அவர்கள் எதிரில் போகப் புறப்பட்டார்.

தேவநாதன் அவரைத் தடுத்து நிறுத்தி "ஸார்! அவசரப்படாதீர்கள். இப்போது நீங்கள் எதிரில் சென்றால் காரியம் கெட்டுவிடும். பேசாமல் வீட்டிற்கு வாருங்கள். உங்களுக்கு விஷயத்தை நேருக்கு நேராகக் காட்டி விளக்குவதற்காக இப்போது அழைத்து வந்தேன். வாருங்கள் வீட்டிற்குப் போகலாம். முள்ளுமீது சேலையைப் போட்டால் மெல்லமெல்ல இழுத்தால் கிழியாது இருக்குமேயன்றி ஒரே மட்டாக இழுத்தால் கிழிந்துதான்போகும். அதே போலத்தான இந்த விஷயத்திலும். நீங்கள் இப்போது நேரில் போகவே கூடாது." என்றதும் வீட்டிற்கே வந்தார்கள்.

இவர்கள் வரும்போது உள்ளே இவருடைய மகனும் அவனுடைய தாயாரும் உரத்த குரலில் பேசும் சத்தம் கேட்டு சற்று நின்று அதை உற்றுக் கேட்டார்கள்.

மகன்:—அம்மா! இன்னொருதரம் நீங்கள் அப்படிச் சொன்னால் நான் எங்காவது ஓடித்தான போய்விடுவேன். நான் என்ன அடிமுட்டாள் என்று எண்ணினீர்களா? அல்லது சோம்பேறி என்று பார்த்தீர்களா? நானா அப்பாவுக்கு த்ரோகம் செய்வேன்? இத்தனையும் குமாஸ்தா வேணுமென்று கயிறுதிரித்து அப்பாவிடம் கலகம் செய்கிறான். நான் இந்த உளவு தெரியாமல் அவன் சொல்லியபடி எல்லாம் செய்துவந்ததற்கு என்மீதே பழியைச் சுமத்தி வீண் ரகளைசெய்து பகையை வளர்க்கிறான். அப்பாவும் அதை கவனியாது அவனிடமே நம்பிக்கை வைத்து மோசம் போகிறார். நான் இன்றுதான் அந்த சதியாலோசனைகளை என் சிநேகிதர்மூலம் தெரிந்துகொண்டேன்.

இதே குமாஸ்தாவின் மச்சான் சுந்தரபுரியில் ஒரு சொந்த பேக்டரி வைக்கப்போகிறானாம். வேலைசெய்ய இந்த ஆட்களை மயக்கி அப்படியே அழைத்துச்சென்றுவிடுவதற்காக இந்த கலகத்தை வேண்டுமென்று ச்ருஷ்டி செய்திருக்கிறான். பட்டினவாஸத்து ஆட்களாயின் நாலாவித நோட்டமும் அறிந்தவர்கள்; அதிகபணம் கேட்பார்கள். பட்டிக்காட்டு ஆட்களுக்குப் படிப்பு வாஸனையோ, உலகவிஷயமோ தெரியாதாகையால் குறைந்த கூலிக்கு ! ஏற்பாடுசெய்து பத்து வருஷத்திற்கு முறியல் சீட்டு வாங்கிக்கொண்டு வேலையுங்கொடுத்து இருக்கஇடமும் கொடுத்து முதலில் துணிமணிமுதல் சகலசவுகரியங்களையும் செய்துகொடுப்பதாக நடித்து வலையில் சிக்கவைத்து வேலையை வாங்கிக்கொண்டால், சிலவருஷங்களில் பேக்ட்டரி வ்ருத்தியாகி லாபம் ஏராளமாகப் புரட்டிக்கொண்டுவிடலாம் என்கிற யோசனையுடன் செய்திருக்கிறான்.

அம்மா! வீணாக என்மீது புகார் சொல்லாதே. அப்பா வந்ததும் நானே இந்த குமாஸ்தாவின் வண்டவாளத்தை வெளியிட்டு அவனையே முதலில் அலைத்து, நம் விவசாய ஆட்களுக்கு சாந்தமாக விஷயத்தை விளக்கிச் சமாதானம் செய்யப்போகிறேன். இம்மாதிரி சண்டைகளையெல்லாம் அடக்கிச் சமாதானத்தைச் செய்து வைக்கும் ஒரு கோஷ்டியினர் இருப்பதாயும் அவர்களை வரவழைக்கலாம் என்றும் என் சிநேகிதர்கள் சொல்லுகிறார்கள். அதில் தேவநாதன் என்கிற ஒரு வீரவாலிபன் இருக்கிறானாம். அவனை என் சிநேகிதன் கூட்டிக்கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறான் நான் இத்தனை விவரம் விசாரித்துக்கொண்டு வந்ததனால்தான் இத்தனை நேரமாகிவிட்டது" என்று படபடவென்று கூறுவதைக் கேட்டவாறே உள்ளேசென்ற மிராசுதாரர் மகனைச்சேர்த்துக் கட்டித்தழுவிப் பின் "இதோ! நீதேடப்போகும்தேவநாதன் தானாக வலுவில் வந்திருக்கிறான் சகல உண்மைகளும் இப்போதுதான் நாங்களும் நேரில் அறிந்து வந்தோம். இத்தனைக்கும் வேர்ப்புழு அந்தகுமாஸ்தாதான் என்பதுஇப்போதுவெட்டவெளிச்சமாயிற்று..."

என்று முடிப்பதற்குள் தேவநாதனைக் கண்ட அவ் வாலிபன் பெருமிதமான சந்தோஷமடைந்துதேவநாதனின் கையைக் குலுக்கி "தாங்கள்தானா அந்த வீரவாலிபன்? உங்களை என் நண்பர்கள் புகழ்வது கொஞ்சநஞ்சமன்று. ஜெயபேரிகை தேவநாதன் என்றே வாயார வாழ்த்துகிறார்கள். எங்கள் குறை தீர்ந்தது...அப்பா! இனியாவது அந்த அயோக்யன்மீது உங்களுக்கு நம்பிக்கை விடுமா?" என்றான்.

தேவ:—எல்லாம் சரியான வேளை வரும்போதுதான் கடவுள் சந்தர்ப்பங்களையும் சம்பவங்களையும் மனிதர்களையும் ஒன்றுகூட்டுவார். கடவுளிடத்தில் நம்பிக்கையையும் சத்தியப் பாதையில் நன்னெஞ்சும் பரோபகாரத்தில் கருத்தும் தன்னலமற்ற சேவையுந்தான் எனது வாழ்க்கையின் லக்ஷ்யமாகக்கொண்டிருக்கிறேன். பகவானும் அதை அனுக்ரகித்து நடத்திவருகிறார். இந்த மகத்தான

சேவையில் என்னுள்ளம் எத்தனை களிக்கின்றதோ அத்தனைக்கத்தனை என் பிதாவுக்கு என் மீது கோபமும் வெறுப்பும்தான் உண்டாகி என்னை வெறுக்கிறார்...சரி...அதுகிடக்கட்டும்...

சார்! நீங்கள் முக்யமாக ஒருகாரியம் செய்யவேண்டும். நாளைய தினம் சிலமணி நேரங்கள் வரையிலாவது இந்த குமாஸ்தாவை இந்த ஊரிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும். இப்போதே நீங்கள் அவரை அழைத்து அவரிடம் அந்தரங்கம் பேசுவது போல் 15 மைலுக்கப்பாலுள்ள க்ராமத்திற்கு உங்கள் சொந்த மாட்டுவண்டியில் அவரை அனுப்பி அந்த ஊர் மிராசுதாரரை அழைத்துவரும்படிச்செய்யுங்கள். அவர் வந்து ராஜி செய்வதாகக் கூறியிருப்பதாகப் பொய் சொல்லுங்கள்; உடனே புறப்படுவான். அதற்குள் நாங்கள் தொழிலாளிகளைப் பார்த்து விஷயத்தைக் கூறி சமாதானத்தைக் கோருகிறோம்'' என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தான்.

இதற்குள் இரவு 12 மணிக்குமேலாகிவிட்டது. அதேபோல் சுந்தரம் குமாஸ்தாவை வரவழைத்து இரவோடிரவாக அனுப்பிவிட்டார். அதன்பிறகுதான் மிராசுதாரரின் மனத்தில் சாந்தி நிலவியது.

---

## 17

சர்மா தன் மன அதிர்ச்சியின் தாக்குதலில் சில விநாடிகள் அப்படியே தம்பித்து நின்றுவிட்டார். "நான் பூட்டிய கதவு பூட்டியபடியே இருக்கையில் எப்படி அவள் காணாதுபோய்விடுவாள்? ஒன்றுமே புரியாத மர்மமாயிருக்கிறதே!'' என்று எண்ணியவாறு அவ்வறை பூராவும் தேடிப்பார்த்தார். மேஜைமீது கடிதம் இருப்பது கண்டு வெகு அவசரமாக எடுதது்ப் படித்தார்.

''நமஸ்காரம். முதலிலேயேநான் மன்னிப்பைக் கோருகிறேன். நான் எந்த விதத்திலும் சிறந்த அறிவாளியல்ல. கூழுக்கும் ஏங்கிநிற்கும் ஏழைச் சிறுமிதான். சில தினங்கள் என் தலைவிதியின் தாண்டவத்தினால் பட்டினியைக்கூட நான் சகித்திருக்கிறேன்; அது எனக்குச் சகஜமாய்விட்டது. அந்த உண்மையை இன்று என்னுடைய பட்டினியினால் நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். கல்வி வாசனையோ, செல்வத்தின் சிறப்போ எனக்கு இல்லையெனினும், பகவான் என்மீது க்ருபைகூர்ந்து இயற்கையாகச் சிலகுணங்களை எனக்குப் புகட்டி சத்யம், ஒழுக்கம், இவ்விரண்டையும் துணைகொண்டு நடக்கும்படி ஆதியிலிருந்து வாழ்க்கையை நடத்திவருகிறார். அம்முறையில் இதுவரையில் ஒருமாதிரியாகக் கழிந்த என் காலத்தை என் விதியின் விளையாட்டு வேறுமாதிரியில் மாற்றி இழுத்துச் செல்லத் தொடங்கிவிட்டதை உங்கள் வீட்டிற்கு வந்த பிறகே நான் உணர்கிறேன்.

நான்காந் தாரம் விவாகமாகவிருந்தால்கூடப் பாதகமில்லை பசிக்காமல் சாப்பிட்டுவிட்டு ஆத்மரக்ஷணமான நூல்களைப் படித்துக்கொண்டு உங்களுக்கு என்னாலான சிச்ருஷைசெய்து என்

காலத்தை உத்தமமான வழியில் கடத்தலாம் என்கிற நப்பாசையினால் கிழவாலிபராகிய தங்களை மணந்தேன். தாங்கள் சொல்லிய பொய்மூட்டைகளை எல்லாம் நம்பி மோசம்போனேன். உங்களுக்குச் சிறிய குழந்தைகள் இருந்தால்கூட நான் இன்பத்தை அடைவேன். அதுவுமில்லை. உங்களுக்குமிஞ்சிய பெண்ணும் பிள்ளையும் இருப்பதை நான் அறிந்திருந்தால் கட்டாயம் மறுத்தே இருப்பேன். ஏழ்மை நிலைமையில் அன்னியரிடம் அடிமைபோல் அகப்பட்டுக்கொண்டு நான் பட்ட அவஸ்தையிலிருந்து விடுதலையாக, வயிறார உண்டு களிக்க எண்ணி நான் செய்த காரியம் உத்க்ருஷ்டமான உங்கள் மக்களை நிரந்தரப் பட்டினிபோடும் பாதகத்தில் கொண்டுவிட்டதை எண்ணி என்னிதயம் கொதிக்கின்றது. என்னால் உங்கள் மக்கள் வீட்டைவிட்டுப் போகவும், என்னைப்போன்ற இளஞ்சிறுமியாகிய உங்கள் பெண் வீணாக அவதிப்பட்டு அல்லாடவும் என்னால் கண்டு சகிக்கமுடியாது. அரச போகத்திலிருப்பவர்களை ஆண்டியாய் அலாய்ப் பறக்கவிட்டு நான் அந்த ஸ்தானத்தை அடைந்து வாழுவது தெய்வத்திற்குச் சகிக்காது. நீங்கள் கண்ணிருந்தும் கபோதியாக இன்றே நடந்துகொள்ளும் நடத்தை எனக்கு அடியோடு பிடிக்கவில்லை.

எப்போதுமே இரண்டாந்தார விவாகம் செய்துகொண்டவர்களுக்கு சந்தேகப்பிசாசு பிடித்தாட்டும் என்பது உலகப்ரஸித்தம். அதை இந்த இடத்தில் நான் கால்வைத்தவுடனேயே பார்த்துவிட்டேன். உலகத்தில் "மக்களுக்குச் சத்ரு மாதாபிதா" என்ற பழமொழி எப்படி உண்டாகியது? இப்படிகூட ஒரு பழமொழி இருக்குமா! இது வெறும் கட்டுக்கதை வார்த்தை; உண்மையற்ற உளறல் என்று நானே நினைத்ததுண்டு. ஆனால், இன்று உங்கள் செய்கை அந்தப் பழமொழியை நிரூபித்துக் காட்டிவிட்டது.

மகா மேதையும், ரூபவதியுமான உங்கள் பெண்ணுக்கும், பொதுமக்களெல்லாம் போற்றிப்புகழ்ந்து, ஜெயபேரிகையுடன் வெற்றிபெற்ற வாலிபவீரன் என்று கொண்டாடி மகிழும் உங்கள் குமாரனுக்கும் நீங்கள் கேவலம் ஒரு அல்ப சபலத்திற்காக உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு, அவர்களுக்கு த்ரோகத்தை விளைத்துவிட்டதை நீங்கள் உணரவில்லை. உங்கள்போன்ற பெற்றோர்களை உலகம் பார்த்திருப்பதனால்தான் மேற்குறித்த பழமொழி பிறந்தது என்கிற உண்மையை இப்போது அறிந்தேன்.

மகா புத்திசாலியான மகனது க்ராமஸேவையின் பெருமையைக்கண்டு களிவெறிகொண்டு சந்தோஷிப்பதைவிட்டு துச்சமான மோகவெறிக்கு அடிமைபாகி அவனுக்குப் பயித்தியம் என்றும், பெண்ணுக்கும் பயித்தியம் என்றும் நீங்கள் வாய்கூசாது சொல்லிய வார்த்தைகள் சுத்தப் பொய் என்பதை நானே நேரில் தெரிந்துகொண்டுவிட்டேன். எனினும் அந்த சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காக உங்கள் தோட்டக்காரனையே ஜன்னலருகாய் அழைத்துச் சகல விஷயங்களையும் ஆதியோடந்தம் விசாரித்துத் தெரிந்து நிம்மதியடைந்

தேன். தாயற்ற உங்கள் மக்களைத் தெருவில்விட்ட பாதகம் என் மூலம் ஏற்பட்டுவிட்டது. இந்தப்பழியைவிட நான் செய்யப்போகும் காரியம் எனக்கு பெரிய பாதகமில்லை என்பதை என் மனச்சாட்சியே விளக்குகிறது.

கிழவாலிபரே! ஒருநிமிஷம் தாங்கள் சற்று நிதானமாய் உங்கள் இதயத்தைத்தொட்டுப்பார்த்துக் கீழே குறிப்பிடும் கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அதற்கு பகவானே உங்கள் இதயத்தின்மூலம் பதிலளிப்பான். அப்போதாவது நீங்கள் செய்துள்ள காரியத்தைக் கண்டு ஏதோ பெரிய கோட்டையைப் பிடித்து வெற்றிக்கொடி நாட்டி ஜெயபேரிகை யடித்துவிட்டதாக இப்போது நினைத்திருக்கிறீர்களே அந்த நினைப்புமாறி, மங்கி, மறைந்து, கரைந்து, உங்கள் இதய அழுக்கைப்போக்கி, நீங்கள் செய்த தவறுதலைக் கண்ணாடியில் காட்டுவதுபோல் காட்டிவிடும். எங்கே ஒருவினாடி சிந்தியுங்கள்:

1. நாம் பிறந்து இத்தனை வருஷங்களாகிவிட்டதே; இத்தனை நாட்களில் நாம் ஏதாவதொரு கடுகளவு நன்மையாவது செய்திருக்கிறோமா...

(2) அநித்யமான ஆசைக்கு நெஞ்சைப் பறிகொடுத்த வேகத்தில் நாம் எத்தனை கொடிய பயங்கரக் காரியங்களைச் செய்துவிட்டோம்.

(3) தாயற்ற நம் குழந்தைகளை இம்மாதிரி அபாண்டமான வார்த்தைகளைக் கூறி அலக்ஷியம் செய்துவிட்டோமே; அவர்கள் கதி என்னவாகும்? அந்த பாதகம் யாரைச் சாரும்?

(4) ஒரு மரத்தில் காய்க்கும் காய்களும், இலை சருகுகளும் அம்மரத்தடியிலேயே விழுமேயன்றி வேறுஇடத்தில் விழாது. சில சமயம் காற்றடிக்கும் வேகத்தில் மரத்தைச் சார்ந்த சிறிதுதூரம் வரையில் போய்விழலாம். அதுபோல் மரமாகிய உங்களிடம் உண்டான மக்களை நீங்கள் பரிபவப்படுத்தியுள்ள பாதகம் உங்கள் காலைச் சுற்றுமே யல்லாது வேறுஇடம் போகாது. காற்றடிப்பதால் சிறிது தூரம் போவதுபோல் உங்களை அண்டிப்பிழைக்கவந்ததால் என்னுடைய காலையும் சுற்றிக்கொண்டுவிட்டது. இதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள்.

(5) நம் மக்கள் சந்தியில் அல்லாடினால் அதனால் உண்டாகும் நஷ்டம், அவமானம் இதை இந்த அல்ப ஆசை மோகத்தினால் மாற்றவோ மறைக்கவோ முடியுமா?

(6) விவாகத்திற்குள்ள பிள்ளை மனம் முறிந்து துன்மார்க்கத்தில் ப்ரவர்த்தித்தால், அல்லது நமக்கு த்ரோகம் செய்த பிதாவுக்கு நாம் திரும்ப த்ரோகம்செய்து, வஞ்சத் தாண்டவத்தைக் கிளப்பிவிட்டால், நம் கதி என்னவாவது! கலப்பால் கறக்கலாம்; உழக்குப் பால் ஏற்ற முடியுமா?

(7) பணம் பணம் என்று இரும்புப்பெட்டி நிறைய சேர்த்து வைத்திருக்கும் செல்வம் இந்த இழிவுகளைப் போக்கித் தூய்மை

யாக்கமுடியுமா? பணத்திரையில் பாதகத்தைச் செய்தாலும் அதுவும் வெளியாகி பரமபுருஷனின் ஸன்னிதானத்தில் சரியான தண்டனையைக் கொடுக்குமேயன்றி, அந்த இடத்தில் இந்தப் பணம் காப்பாற்றுது. இந்த உலகத்தில் நாம் எந்தெந்த கார்யத்தைச் செய்கிறோமோ அந்தந்த பலன்தான் கடைசியில் கைமேல் ஸித்திக்கும் என்கிற தத்துவத்தை மறந்துவிடக் கூடாது.

(8) மாயமான மனிதர்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்கும் நினைப்புகூட முட்டாள்தனமானதுதான். நீர்க்குமிழிபோன்றது தான். அதில்கூட ஆபத்து பின்னுலேயே தடர்ந்துவரும் என்பதை மறக்காமலிருந்தால் அந்த தீயவழியில் மனத்தையே செல்லாது தடுத்துக் காத்துவிடலாம்.

(9) நாம் மனிதனுகப் பிறந்தோமே! மனிதனுகவே வாழுகிறோமா! அல்லது மிருகமாக வாழுகிறோமா! மிருகங்கள் தம் குட்டிகளை சிலகாலம் காத்துப் பிறகு மறந்துவிடுகிறமாதிரி மனிதனும் இருப்பதா. மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்யாஸம்?

(10) பகவான் சர்வசக்தன் சர்வரக்ஷகன் சர்வலோகங்களையும் சதா பார்த்துக்கொண்டிருக்கும் மாயாவி அவனை எவராலும் ஏமாற்றிவிடவோ, திரை மறைவில் மறைத்துவிடவோ முடியாது. ஆகாயத்திற்கும் பூமிக்கும் கடலுக்கும் எப்படிக் கரையோ எல்லையோ காணமுடியாதோ, அப்படி பகவானின் சக்திக்கும் லீலைக்கும் எல்லைவகுக்க முடியாது. அவனை மதியாது அவன் நினைப்பே மறந்து மனிதன் வாழ்க்கை நடத்தும்போது, கடலுக்குக் கரை காணுத விரிந்திருப்பதுபோல், பாபத்தை மனிதன் கடலளவாகப் பெருக்கிக் கரைகாணுது தவிக்கும் நிலையைப் பெற்றுவிடுகிறுன். இதை மறந்துவிடுவது மனிதனுக்கு யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்வது போன்றதே யாகும்.

பெரியவரே! இதுபோல் இன்னும் எத்தனையோ நூற்றுக் கணக்கான விஷயங்கள் எழுதலாம். ஆனுல், அதைப் படித்துப் பயனடையும் பிறவிக்கன்றோ அது பயன்படும்?. இதை நான் உணராதவளல்ல. என் தலைவிதி என்னை எப்படியும் உலகம் தூற்றும் முறையில் கொண்டுவிட்டுவிட்டது. 'பாவி! வீட்டில் காலை வைத்தாள்; மக்களை விரட்டினுள். இவள் வாழ்வாளா! விளங்குவாளா' என்கிற பாதகச்சொல்லைவிட, கிழவன் என்பதால் அவனைவிட்டு ஓடிவிட்டாள் என்று உலகம் தூற்றப்போகிறது. அந்த அவதூறுக்கு இடமில்லாதிருக்கவேண்டும் என்பதற்காக உங்களையே கெஞ்சி என்னைக் கொண்டுவிடும்படிக் கேட்டேன். அதற்குப் பலன் சிறைவாஸம் உண்டாகியதுபோல் பூட்டிவிட்டீர்கள். அதுவும் எனக்கு நன்மையாகவே முடிந்தது. உங்கள் தோட்டக்காரன்மூலம் சகலமும் அறிந்துஅவனையே கெஞ்சி இந்தக் கதவைமாறுசாவியால் திறக்கச்செய்து அவன் மனைவியின் துணைகொண்டே நான் போகத் தீர்மானித்துவிட்டேன். பகவானின் சன்னிதானத்தில் எனக்குச்

சரியானபடி பேறு கிடைத்தால்போதும். உலகம் என்னை என்ன வேண்டுமாயினும் சொல்லட்டும்.

இப்போதும் கடைசி முறையாக வேண்டுகிறேன். இந்த விஷயங்கள் வெளியாறியாமல் உடனே உங்கள் மக்களைத் தேடிப் பிடித்து விட்டிற்கு அழைத்துவாருங்கள். அதை யறிந்த க்ஷணமே நானும் வந்துவிடுகிறேன். அவர்களைப் பரிபவப்படுத்திவிட்டு நான் இந்த அனியாய வாழ்க்கை வாழ விரும்பவில்லை. உங்கள் தோட்டக்காரன் எனக்கு உதவியதற்காக அவனைத் தண்டிக்கவேண்டாம். அனியாயமாய் ஏதாவது அப்படிச்செய்தால் அவன் உங்கள் லஞ்சப் புராணத்தை வெளியிட்டுப் பேராபத்தை உடனே விளைவித்துவிடுவான். உங்களுடன் இத்தனை வருஷங்களாகப் பழகுவதால் அந்த ரகஸ்யம் அறிந்திருக்கிறான். ஆகையால் உஷாராக இருங்கள். கடவுள்மீது ஆணையாக நான் உங்களுக்கோ உங்கள் மக்களுக்கோ என் கற்பிற்கோ கனவிலும் த்ரோகம் நினைக்கமாட்டேன். இதை நம்புங்கள்.

நான் வீட்டிலிருந்தபடியே உங்களைத் திருத்தவும் எண்ணினேன். உங்கள் சந்தேகப்பிசாசு அதற்கு விபரீதச் சத்ருவாகிவிட்டதால், அதை ஓட்டுவதற்கு இதுதான் மார்க்கம் என்பதை நான் தீரமாக உணர்ந்து இம்மாதிரி செய்கிறேன்.

இன்னொன்றுகூடச் சொல்கிறேன். நீங்கள் எப்போது என்னை மணந்துகொண்டு விட்டீர்களோ அப்போதே நான் உங்கள் சகலத்திற்கும் பாத்யதை உள்ளவளாகிவிட்டேன். நீங்கள் அனியாயமாய் உங்கள் மக்களுக்கு த்ரோகம் செய்வதாயிருந்தால் நானே நல்லபாம்பு விஷம்போல் சீறி உங்கள் லஞ்சத்தை வெளியிட்டுவிடுவேன் என்பதை உறுதியாகச் சொல்கிறேன். இதற்கு உதாரணமும் விளங்கச் சொல்கிறேன்.

நெருப்பினால், ஆனந்த நிலையைக் கொடுக்கக்கூடிய திருவிளக்கு ஏற்றலாம்; வயிற்றுப் பசியாறச் சமயல்செய்துண்ணலாம்; குளிர் காயலாம்; அவுபாஸனம் முதலிய விசேஷ சத்கர்மாக்கள் செய்யலாம்; தீபதூப பரிமளங்கள் கொடுக்கலாம். இன்னும் இது போல் பலபல நற்க்ருத்யங்களைச் செய்யக்கூடிய அதே நெருப்பு உலகையே பொசுக்கி எரித்துச் சாம்பராக்கிவிடும் என்பது நினைவிருக்கட்டும். இதைவிட உபமானம் ஏதுவும் சொல்வது அவச்யமில்லை. உங்கள் இரும்புப் பெட்டி சாவி இதோடு இருக்கிறது; அந்தப் பணம் எனக்கு த்ருணம்; கடமையும், சத்தியமும்தான் மனித வாழ்க்கையின் லக்ஷ்யம்; அதுதான் மனிதன் இருக்கும் போதும் சரி, இறந்தபிறகும் சரி, புகழுடன் ஜெயபேரிகை யடித்து உலகத்தோர் பேசும்படிச் செய்யும். நீண்ட கடிதம் எழுதி ச்ரமப் படுத்துவதற்கு மன்னிக்கவும். நமஸ்காரம்.

கலாவதி."

"இது கடிதமா அல்லது வாழ்க்கையின் பூகம்பமா?" என்கிற எண்ணம் சூழ்ந்து மூளையே குழம்பிவிட்டது. இன்னதென்று

விவரிக்கமுடியாத நிலைமை உண்டாகி உடம்பு வேர்த்து ஜலமாக வழிகிறது. தன்னுடைய செய்கை இத்தனை தூரத்திற்கா வந்து விட்டது! என்ற நினைப்பு மின்னல்போல் ஒரு க்ஷணம் தோன்றியது.

தோட்டக்காரன் தனக்கு இத்தகைய சத்ருத்தனமா செய்தான் என்றும் ஒரு க்ஷணம் தோன்றியது. ஆனால், எந்தவிதமும் மனது நிம்மதியடையாமல் குழம்பித் தவித்து கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்துவிட்டார். மறுபடியும் மறுபடியும் அக் கடிதத்தைப் படித்தார்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு மெல்ல சமாதானமடைந்தவராய் தோட்டக்காரனைக் கூப்பிட்டார். அவன் எத்தகைய பயமோ, அச்சமோ இல்லாமல் தைரியமாய் "எஞ்சாமி!" என்று வந்து நின்றதைப் பார்த்ததும், அதிர்ச்சியினால் குழம்பும் சர்மாவுக்கே ஆச்சரியமாகிவிட்டது. அவனிடம் எத்தகைய வார்த்தையும் பேசாமல் ஏறஇறங்கப் பார்த்தார்.

தோட்டக்காரன் சிறிதும் சளைக்காமல் வழக்கப்படியே நின்றான்.

சர்மா:—ஏண்டா! இத்தனை காலமாக என்னிடம் பழகிய நீ எனக்கா த்ரோகம் செய்தாய்?...

தோட்:—இன்னாங்க, நானு உங்களுக்கு த்ரோகம் செய்தேன்? ஐயோ! கடவுளே! ஒங்களே ஆபததுலேந்து காப்பாத்தினதே மறந்து பூட்டிங்களா? அந்த கலாவதி அம்மா இருக்கிறாங்களே, சாமான்யப் பெண்மணி இல்லீங்க. வீர ரமணி நாரீமணீன்னு சொல்வாங்களே, அப்படிப்பட்டவங்க. அவங்களே நீங்க செஞ்சது ரொம்ப தப்புங்க. அவங்க தூக்குபோட்டுகின்னு செத்துப்பூட பாத்தாங்க.

சர்மா:—ஐயையோ! அப்படியா நடந்தது? நிஜமாகவா?

தோட்:—பின்னே இன்னாங்க? பச்சே கிளியாட்டமா இருக்கரவங்களே புடிச்சு கூண்டிலே அடைச்சிப்புட்டா அது நல்லதுங்களா! தூக்கு போட்டுக்கப் போரத்தே பாத்து அம்மாளே தேத்தி அவங்க இஷ்டப்படி வெளியே எம் பொண்ஜாதியோடே கூட்டி பத்ரமா அனுப்பிட்டேன். அந்தம்மா இப்படி தூக்குலே தொங்கலாடினாங்களான நம்ப கதி இன்னா ஆகும்னு ரோஜனை பண்ணி பாருங்க. நம்ப ராஜாவெயும் ராணியேயும் ஊட்டெவுட்டு அனுப்பிட்டு இது இன்னா வேலெங்க? அம்மாளே தூக்கு போட்ரத்துலேந்துகாப்பாத்தியாச்சு. இனுமேஇந்த ஊட்டுவேலேயே வாணாங்க. நானுபோயிட்றேன். இதை சொல்றதுக்காவதான் காத்துகிட்டு இருந்தேன். இதோ துணியே ஒதறி தலேமேலே போட்டுகிறேன், பாருங்க, அப்புறம் அத்தே தூக்கினுபூட்டான், இத்தே தூக்கினு பூட்டான்னு சொல்லாதீங்க. தர்ம லக்ஷ்மியாட்டம் நம்ப பெரியம்மா இருந்தவரையில் வூடு லக்ஷ்மி கடாக்ஷமா இருந்துதுங்க. பெரவு நல்லா இல்லிங்க, இப்போ இன்னும் மோசமாயிடுதுங்க.

ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி

## 3. திருமாமகள் மாலை
## 4. ஸ்ரீ வீரராகவ மாலை.

இவ்விரு வெளியீடுகளின் 'அவதார விசேஷம்' நமது கவனத்திற்குரியது. கலியாணப்பந்தலில் சாதாரணமாக தேங்காய், பழம் முதலியவற்றுடன் வெற்றிலைப்பாக்கு மங்களகரமாக அளிப்பது வழக்கம். அதாவது, உடலுக்குப் பிரயோஜனமாகக்கூடிய பொருள்களை மங்களார்த்தமாக வழங்குவது லௌகிக சம்ப்ரதாயம். ஆத்மார்த்தமான பரிசை வழங்க அரிய யுக்தியைக் கண்டுபிடித்து, செய்தும் காட்டிவிட்டார் வித்வான் ப. ரெ. திருமலை அய்யங்கார். திருச்சியில் நடந்த விவாஹமொன்றில் ஷை முதல்மாலையும், சீர்காழியில் நடந்த விவாகமொன்றில் ஷை இரண்டாம் மாலையும் மணப்பந்தலில் மங்களார்த்தமாக வழங்கப்பட்டனவாம். நன்மனத்தர் மணமக்களை வாழ்த்தியது ஒருபுறம்; இம்மாலையைப் பெருமுயற்சியுடன் தொகுத்த வித்வானை வாழ்த்தியது ஒருபுறம்; இதனை வழங்க முன்வந்த ரஸிகர்களான மணமக்களின் பெற்றோரை வாழ்த்தியது ஒருபுறம். இத்தகைய மனப்பான்மையையும் முயற்சியையும் நாமும் வாழ்த்துகிறோம்.

எல்லையில்லாத கல்யாண குணங்களுள்ள திருமா மகளின் பெருமையை விளக்கும் ஸ்தோத்திரங்கள் பலபல. சதுச்லோகி, ஸ்ரீஸ்துதி, கனகதாரா ஸ்தோத்ரம், திருமகளந்தாதி, மற்றும் சிலவும் சேர்த்துத் தொகுத்தமாலை, திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்க வெளியீடு "திருமாமகள்மாலை". இதன் முகவுரையும் தத்வபரமாக ஸாரமாயுள்ளது.

திருவள்ளூர் (திருவெவ்வுளூர்) விஷயமான பாசுரங்கள், பாசுரப்படி ராமாயணம், நூற்றெட்டுத்திருப்பதி யந்தாதி இராமாவதாரத்தைப்பற்றிய பழந்தமிழ்ப்பாடல்கள் சில, இவையாவும் சேர்ந்த மாலையே ஸ்ரீ வீரராகவமாலை. இதுவும் ஷை சங்க வெளியீடே. ரஸமான குறிப்புகளும் முகவுரையும் கொண்டது.

ஷை சங்க வெளியீடுகள் மூன்றும் இலவச விநியோகமே. சங்கத்தின் சிறப்பியல்புகளில் இதுவும் ஒரு அம்சம். தமிழ்ச்சங்கமானது தமிழ்த்தொண்டு என்ற முறையில் சாதாரண —தெய்வீகம் கலவாத— இலக்கிய ஸேவை செய்வதுடன் நில்லாமல், கடவுளைக் காட்டுவதே கலை என்ற அடிப்படையில் ஸேவைபுரிவது நமது பாராட்டுதற்குரியதே.

ஒரு விஷயம் மட்டும் இங்கு குறிப்பிடுவது உசிதமென்று தோன்றுகிறது. ஆழ்வார்ப்பாசுரங்களையும் பழந்தமிழ்ப்பாடல்களையும் கொண்டு தொகுத்துள்ள இத்தமிழ்மாலைகள் தமிழரனைவர்க்கும் —உட்பிரிவு பேதமின்றி– பொதுவானதாலும், இவை (தென்மொழி) சங்க வெளியீடுகளானதாலும், ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப்பிடும் திருமண்காப்புடன் வெளியிட்டது தகுமோ என்ற சங்கை எழுகிறது. இது விஷயத்தில் வடமொழி க்ரந்தத்தைத் தமிழ் நூலாக்கியுள்ள ஸ்ரீ கேசவய்யங்கார் பொதுப்படையாக வெளியிட்டுள்ளது (ஒரு இனக்குறிப்புமின்றி) கவனிக்கத்தக்கது; அனைவர்க்கும் உகப்பாக உள்ளது.

27-வது ஆண்டு ஆரம்பம்: ஜனவரி 1950

# மோகினி

அன்பர்களுக்கு

ஓர் அரிய விருந்து

**27-வது ஆண்டு மலர்**

- ★ தமிழ்ப் பொக்கிஷம்.
- ★ ஓவியச்சோலை
- ★ விஷயப்ரவாகம்.

கண்ணுக்கும் கருத்துக்கும் இனியவிருந்து

**ஜனவரி இதழுடன் வெளிவரும்**

**கவனிக்கவும்**

1. மோகினி வாசகர்களல்லாதவர்களுக்கு மலர் கொடுக்க இயலாது. ஆகையால், நேரில் எமக்கோ அல்லது ஏஜண்டுக்கோ இதனடியில் வெளியாகியுள்ள கூபனைப் பூர்த்திசெய்து கொடுத்தால்தான் மலர் பதிவு செய்யப்படும். மோகினி அன்பர்களின் சௌகரியத்தை உத்தேசித்தே இந்த நிபந்தனை.

2. மணியார்டர் மூலம் பணம் அனுப்பி ரிஸர்வேஷன் கூபனைப் பூர்த்தி செய்து அனுப்பவும். போஸ்டல் ஆர்டரோ செக்கோ அனுப்பவேண்டாம்.

3. சந்தாதாரல்லாதவர்கள், மாதந்தோறும் மோகினியை அளிக்கும் தங்கள் ஊர் ஏஜண்டிடம் கூபனைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

4. கூபனில் தங்கள் பெயரையும் முழுவிலாசத்தையும் தெளிவாக பெரிய எழுத்துக்களில் எழுதவும். தபாலாபீஸ் பெயரை ஆங்கிலத்தில் எழுதவும்.

5. கூபனில் கண்டுள்ள விலாசத்திற்கே மலர் அனுப்பப்படும். விலாசம் மாறும் நேயர்கள் உடனே புதிய விலாசத்தைத் தெரியப்படுத்தவும்.

—————— இங்கே கத்திரிக்கவும் ——————

## 27-வது ஆண்டுமலர் ரிஸர்வேஷன் கூபன்

பெயர்.............................................................................

முழு விலாசம்....................................................................

.......................................................................................

தபாலாபீஸ் பெயர்...............................................................

மணியார்டர் தொகை. ரூ.......................................................

ரிஸர்வேஷன் சம்பந்தமான நிபந்தனைகளை ஒப்புக்கொள்கிறேன்

கையெழுத்து............................................தேதி............1949.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5
*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. L.